Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

# தினமுரசு

தினப்பதிப்பு

THINAMURASU

முரசு - 02 | திருவள்ளுவர் ஆண்டு 2043 ஆவணி 20 புதன்கிழமை (05.09.2012) | பக்கங்கள் 20 | ஓசை - 339

விஷானி நகை மாளிகை

மங்கையர் மனம் கவரும் தங்க நகைகளுக்கு

இல. 187, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

0212219510 (C/1675)



















## வடக்கே வருவாரா நவநீதம்பிள்ளை



(கொழும்பு)

ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் ஆணையாளரான நவநீதம்பிள்ளை இலங்கையின் வடபகுதிக்கு விஜயம் செய்வதற்கு விரும்புவதாகவும், இதற்கேற்ற வகையில் தனது கொழும்பு விஜயத்திற்கான நேர அட்டவணையில் மாற்றங்களையும் செய்துள்ளதாகவும் தெரியவருகிறது.

ஏற்கனவே தயாரிக்கப்பட்ட இவரது நிகழ்ச்சி நிரலில் அவர் கொழும்பில் தங்கியிருந்தே அனை வரையும் சந்தித்துப் பேசத் திட்டமிட்டிருந்த நிலையில், தற்போது அவர் போர் நடந்த

19 ஆம் பக்கம் பார்க்க

## பிரதேச அபிவிருத்திக்கு செயற்திட்டம் ஈ.பி.டி.பி. நாடாளுமன்ற உறுப்பினர்கள் நிதியுதவி

(யாழ்ப்பாணம்)

ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான 2012 ஆம் ஆண்டிற்கான பன்முகப்படுத்தப்பட்ட வரவு - செலவுத் திட்ட நிதியிலிருந்து யாழ். மாவட்டத்திற்கான பல்வேறுபட்ட அபிவிருத்தி வேலைத்திட்டங்களிற்கான முன்மொழிவுகள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, நாடாளுமன்ற உறுப்பினர்களான முருகேசு சந்திரகுமார், சில்வேஸ்திரி அலன்ரின் ஆகியோரினால் யாழ். மாவட்டத்திற்கு 11,500,000 இலட்சம் ரூபா வேலைத்திட்டங்கள் நடைமுறைப் படுத்தப்படவுள்ளன.

இதனடிப்படையில் யாழ். குடாநாட்டிலுள்ள 15 பிரதேச செயலகப் பிரிவுகளில் 12 பிரதேச செயலகப் பிரிவுகளுக்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, நாடாளுமன்ற உறுப்பினர்களான சில்வேஸ்திரி அலன்ரின் ஆகியோரினாலும், 3 பிரதேச செயலகப் பிரிவுகளுக்கு நாடாளுமன்ற உறுப்பினர் முருகேசு சந்திரகுமாரினாலும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இந்நிதி ஒதுக்கீடுகள் அனைத்தும் சம்பந்தப்பட்ட பிரதேச செயலகங்கள் ஊடாக நடைமுறைப் படுத்தப்படவிருக்கும் அபிவிருத்தித் திட்டங்களுக்கு பயன்படுத்தப்

19 ஆம் பக்கம் பார்க்க

## இந்தியா வரும் இலங்கையர்களுக்கு பாதுகாப்பு வழங்க வேண்டும்

### மத்திய அரசு அறிவிப்பு

(டில்லி)

இந்தியாவுக்கு வரும் இலங்கையர்களுக்கு உச்சப் பாதுகாப்பு உத்தரவாதம் வழங்கப்படும் என்று இந்திய வெளியுறவு அமைச்சு அறிவித்துள்ளது.

தமிழகத்துக்குச் செல்லும் இலங்கையர்களுக்கு இலங்கை அரசாங்கம் விடுத்துள்ள பயண எச்சரிக்கை குறித்து இந்திய வெளியுறவு அமைச்சு அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

இந்திய உயர்ஸ்தானிகரகத்தின் அலுவலர் பிரேந்தர் சிங்கினினால் இந்த அறிக்கை ஊடகங்களுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

இலங்கை அரசு விடுத்திருந்த பயண எச்சரிக்கை குறித்து இந்திய அரசாங்கம் இந்திய தென்மாநில அரசாங்கங்களுடன் கலந்துரையாடி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அத்துடன் இந்தியாவுக்கு வரும் இலங்கையர்களுக்கு பாதுகாப்பை உறுதிப் படுத்தும் நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக இந்திய வெளியுறவு அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

இலங்கையில் இருந்து தமிழகம் சென்ற உதைபந்தாட்ட அணி அங்கிருந்து திருப்பி அனுப்பப்பட்டது. அதனைத் தொடர்ந்து தமிழகத்துக்கு தல வழிபாட்டுக்காகச் சென்றவர்களுக்கும் அங்கு அச்சுறுத்தல் விடுக்கப்பட்டிருந்தது.

இந்தநிலையில் தமிழகம் செல்ல வேண்டாம் என்ற பயண எச்சரிக்கை ஒன்றை விடுத்ததன் மூலம் இலங்கை அரசு தனது இராஜதந்திர நடவடிக்கையை வெளிப்படுத்தியது. இந்த நடவடிக்கை இந்திய மத்திய அரசுக்கு

19 ஆம் பக்கம் பார்க்க

## விமானப்படை வீரர் சடலமாக மீட்பு

(கொழும்பு)

பம்பலப்பிட்டிய சமுத்திரா மாவத்தை கடற்பகுதியில் கற்பாறைகளுக்கிடையில் சிக்கியிருந்த நிலையில் விமானப்படை வீரர் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது. இரத்மலானை விமானப் படைத் தளத்தில் கடமையாற்றி வரும் விமானப்படை வீரர் ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளதாக விமானப் படை பேச்சாளர் தெரிவித்தார்.

அவரது ஆடையில் இருந்த அடையாள அட்டையைக் கொண்டே இந்த விடயம் தெரியவந்துள்ளது. இவர் கடந்த ஞாயிற்றுக்கிழமை விமானப் படைத்தளத்தில் இருந்து வெளியேறியுள்ளதாகவும் அதன் பின்னர் அவர்

19 ஆம் பக்கம் பார்க்க

## குடிசைகள் தீக்கிரை ஆயுததாரிகள் கைவரிசை

### மன்னாரில் பரபரப்பு

(மன்னார்)

மன்னார் மாவட்டத்தின் முசலிப் பிரதேச செயலகப் பிரிவிற்குட்பட்ட மறிச்சுக்கட்டி மரைக்கார்தீவு பிரதேசத்திலுள்ள முஸ்லிம் மக்களின் மீள்குடியேற்ற கிராமத்தில் அமைக்கப்பட்டிருந்த தற்காலிக கொட்டில்கள் மற்றும் பொதுக் கட்டடம் என்பனவற்றின் மீது நேற்று இரவு தீவைப்பு சம்பவம் ஒன்று இடம் பெற்றுள்ளது.

இதன் போது 7 தற்காலிக கொட்டில்களும், ஒரு பொது நோக்கு மண்டபமும் தீயில் எரிந்து சாம்பராகியுள்ளது. நேற்று இரவு 9.00 மணியளவில் இக்கிராமத்துக்குள் புகுந்த ஆயுதம் தரித்த கும்பல் இச்சம்பவத்தை செய்ததாக அம்மக்கள் தெரிவித்தனர். இரவு வேளையில் வந்த ஆயுததாரிகள் பல கொட்டில்களை அகற்றி வாகனத்தில்

19 ஆம் பக்கம் பார்க்க

## யாழில் பாரதி விழா

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண தமிழ்ச் சங்கத்தின் ஏற்பாட்டில் எதிர்வரும் செப்ரெம்பர் 11 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பாரதி விழா நடத்தப்படவுள்ளது. தமிழ்த்தூதர் தனிநாயகம் அடிகளார் பெயரில் அமைந்த அரங்கில் நல்லூர் துர்க்கா மணிமண்டபத்தில் காலை, மாலை அமர்வுகளாக நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன.

காலை அமர்வு வண. கலாநிதி நீ.மரியசேவியர் அடிகளார் தலைமையில் காலை 9.30 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது. இதில் வரவேற்புரையை லோ.துஷிகரனும் வாழ்த்துரையை சோ.இ.பிரணதார்த்திஹரக்குருக்களும் வழங்குவர். எங்கள் பார்வையில் பாரதி என்ற தலைப்பில் மாணவர் அரங்கம் இடம்பெறும். இதனை சிவ. மகாலிங்கம் நெறிப்படுத்தவுள்ளார். மாணவரின் பயன்பாட்டிற்கேற்ற வகையில் மகாகவி பாரதி

19 ஆம் பக்கம் பார்க்க

## வடக்கு அபிவிருத்தியில் சமச்சீர் தன்மை வேண்டும்

### மீளாய்வுக் கூட்டத்தில் வலியுறுத்தல்

(யாழ்ப்பாணம்)

யுத்தத்துக்குப் பிந்திய வடக்கின் அபிவிருத்தியில் சமச்சீர் இன்மையைக் களைவதற்கும் யுத்தத்தால் அதிகம் அழிவடைந்த பிரதேசங்களை முன்னுரிமை அடிப்படையில் அபிவிருத்தி செய்வதற்கும் வடக்கு மாகாண சபை நிர்வாகம் எதிர் காலத்தில் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நேற்று யாழ். பொதுநூலகக் கேட்போர் கூடத்தில் இடம்பெற்ற வடக்கு மாகாண சபையின் அபிவிருத்தி தொடர்பான மீளாய்வுக் கூட்டத்தில் வலியுறுத்தப்பட்டிருக்கிறது.



இந்த ஆண்டில் இதுவரை காலமும் வடக்கு மாகாண சபையினால் மேற்கொள்ளப்பட்ட பல செயற்திட்டங்கள் குறித்து இக்கூட்டத்தில் மீளாய்வு செய்யப்பட்டதுடன், அவற்றின் முன்னேற்றங்கள் குறித்தும் விரிவாக ஆராயப்பட்டது.

இதன்போது வடக்கில் அபிவிருத்தித் திட்டங்களை அமுல்படுத்துவதில் சமச்சீரின்மை காணப்படுவதாகப் பல தரப்பினராலும் சுட்டிக்காட்டப்பட்டது.

இக்கூட்டத்திற்கு தலைமை தாங்கிய ஈ.பி.டி.பி.யின் நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார் மேற்படி விடயம் குறித்து அங்கு விளக்கமளித்தார்.

யுத்தத்தால் அதிகம் பாதிக்கப்பட்ட கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், வவுனியா வடக்கு, வடமராட்சி கிழக்கு, போன்ற பிரதேசங்கள் காணப்படுகிறது. யாழ்ப்பாணம் முன்னதாகவே அரச கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வரப்பட்டமையால் அங்கு ஓரளவுக்கு தேவைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது.

எனவேதான் அபிவிருத்தி முன்மொழிவுகளின் போது பாதிப்புக்கள் அதிகம் உள்ள பிரதேசங்களுக்கே அதிக முக்கியத்துவமும், முன்னுரிமையும் வழங்கப்படவேண்டும். அதுவே நியாயமானது.

ஆனால் துரதிஷ்டவசமாக வடமாகாண சபையில் இந்த நியாயமான நிலைமைகள் காணப்படவில்லை. பாதிப்புக்களை அதிகம் சுமந்த பிரதேசங்கள் அபிவிருத்தி மற்றும் அதற்கான நிதி ஒதுக்கீட்டு நடவடிக்கைகளின் போது பின்தள்ளப்

19 ஆம் பக்கம் பார்க்க

# ஒருநாள் சிசு திடீர் மரணம் தாயாருக்கு வலை வீச்சு



(யாழ்ப்பாணம்)

யாழ். போதனா வைத்திய சாலையில் பிறந்து பின்னர் இறந்தாகக் கருதப்படும் ஒருநாள் சிசுவைப் பிரசவித்த பெண் நீதிமன்ற விசாரணையை எதிர்நோக்கிய நிலையில் நேற்று முன்தினம் யாழ். போதனா வைத்தியசாலையில் இருந்து தலைமறைவாகியுள்ளார்.

குறித்த பெண் கடந்த 30 ஆம் திகதி அன்று கனகமணி, விசுவமடு என்னும் முகவரியுடன் யாழ். போதனா வைத்தியசாலையின் பிரசவ விடுதியில் தங்கியிருந்து சிசு ஒன்றைப் பெற்றெடுத்திருந்தார். அதன் பின்னர் அன்றைய தினமே அந்தச் சிசு இறந்திருக்கிறது. இவ்விடயம் குறித்து யாழ். பொலிஸார் குறித்த பெண்ணிடம் விசாரணைகளை மேற்கொண்டுவந்தனர். இந்த நிலையில் அந்தப் பெண் நேற்று முன்தினம் வைத்தியசாலையில் இருந்து தலைமறைவாகியுள்ளார். இதனைத் தொடர்ந்து இறந்த சிசு யாழ். போதனா வைத்திய சாலையின் சவச்சாலையில் வைக்கப் பட்டுள்ளது. இச்சம்பவம் குறித்து விசாரணையில் ஈடுபட்டிருந்த பொலிஸார் குறித்த பெண் கொடுத்த பெயர் மற்றும் இடம் போலியானவை என்று தெரியவந்திருப்பதாகத் தெரிவித்துள்ளனர்.

மேலும் குறித்த பெண்ணைத் தேடிக் கைதுசெய்ய யாழ். பொலிஸார் முயற்சி மேற்கொண்டிருப்பதாகவும் தெரியவருகின்றது.(பா)

## தொடர் சொற்பொழிவு

கந்தர்மடம் மணல்தரை வீதி அருள்மிகு கண்ணகி அம்மன் ஆலய வருடாந்த அலங்கார உற்சவங்கள் கடந்த 28 ஆம் திகதி ஆரம்பமாகி தொடர்ந்து நடைபெற்று வருகின்றது. இவ் உற்சவ காலங்களில் "கற்பின் தெய்வம் கண்ணகி" எனும் விடயத்தில் மாலை 7.30 மணிமுதல் 8.30 மணி வரை மதுரகவி காரை எம்.பி.அருளானந்தன் தொடர் சொற்பொழிவு நிகழ்த்தி வருகின்றார். (60)

# அரச அலுவலர்களுக்கான கலைத்திறன் போட்டி முடிவுகள்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டச் செயலகமும் கிளிநொச்சி மாவட்ட பண்பாட்டுப் பேரவையும் இணைந்து இம் மாவட்டத்தில் கடமையாற்றிவரும் அரச அலுவலர்களுக்கு இடையேயான ஆக்கத்திறன், கலைத்திறன் போட்டிகளை நடத்தி வருகின்றது. இப்போட்டியில் இதுவரை நடைபெற்ற போட்டிகளில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற அலுவலர்களின் விபரம் வருமாறு,

**பட்டிமன்றம்** :- கிளி/ சென்.திரேசா பெண்கள் கல்லூரி - முதலாம் இடம், மாவட்டச் செயலக அணி - 2 ஆம் இடம், கிளி/முழங்காவில் மகாவித்தியாலயம் மற்றும் பிரதேச சபை கரைச்சி அணி - மூன்றாம் இடம்.

**கவியரங்கம்** :- மாவட்டச் செயலக அணி - முதலாம் இடம், பிரதேச சபை கரைச்சி அணி - 2 ஆம் இடம், கிளி/சென்.திரேசா பெண்கள் கல்லூரி மூன்றாம் இடம்.

**பாடலிசைத்தல்** :- ஜெனில் சங்கரநாதன் - முதலாம் இடம், செல்வி யோ.அனுசியா - இரண்டாம் இடம், திருமதி கி.குணாலினி - மூன்றாம் இடம்.

**ஓவியம்** :- தீபன் திரீசன் - முதலாம் இடம், எம்.கயோதரன் - இரண்டாம் இடம், த.பேரின்பசிவம் மூன்றாம் இடம்.

**பேச்சு** :- அ.கேதீஸ்வரன் - முதலாம் இடம், எம்.கயோதரன் - இரண்டாம் இடம், த.ஜெயக்குமார் - மூன்றாம் இடம்.


**தனிநடிப்பு** :- வீ.சந்திரமோகன் - முதலாம் இடம், இ.சுதர்சன் - இரண்டாம் இடம்.


**தனிநடனம்** :- வீ.சந்திரமோகன் - முதலாம் இடம். (142)

# விபத்தில் சிக்கி 12 பேர் பலி

யாழ்ப்பாணத்தில் நடந்த வீதி விபத்துக்களில் கடந்த மாதம் மட்டும் 12 பேர் வரை உயிரிழந்துள்ளதாக யாழ். போதனா வைத்தியசாலை புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன.

தற்போது யாழில் வீதி அகலிப்புப் பணிகள் மேற்கொள்ளப் பட்டு வருகின்றன. இதன்போது வீதிப் பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டுள்ளோரின் சமிக்கைகளைப் பல சாரதிகள் பின்பற்ற மறுக்கின்றமையும், வாகனங்களை வேகமாகச் செலுத்துவதும் இவ் வீதி விபத்திற்குக் காரணமாக அமைந்துவிடுகின்றன. (53)





குருநகர் நாட்டுக்கூத்து மன்றம் வெளியீட்டினரின் 'வீரியம்' புதிய படத்தொடக்க விழாவும் 'ஆளுமை' படவெற்றி விழாவும் அண்மையில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் பேராசிரியர் எஸ்.சிவலிங்கராசா சிறப்புரை ஆற்றுவதையும் கலந்துகொண்டவர்களையும் காணலாம். (68)

# அதிபர் திடீர் இடமாற்றம் மாணவர் மத்தியில் குழப்பம்

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் இந்துக் கல்லூரியின் அதிபராக இருந்த அகிலதாஸ் தென்மராட்சிக் கல்வித் திணைக்களத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளதாக வடமாகாணக் கல்வி அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்தன.

அதிபரின் திடீர் இடமாற்ற நடவடிக்கையால் நேற்றுப் பாடசாலை மாணவர்கள் மற்றும் பெற்றோர்கள் மத்தியில் அதிர்ச்சியும் குழப்ப நிலையும் ஏற்பட்டது.

S.L.E.S பரீட்சையில் இவர் சித்தியடைந்திருந்த நிலையில் தென்மராட்சிக் கல்வி வலயத்திற்கு ஆளணி தேவையென்ற நிலையிலும் இவரது இடமாற்றம் அமைநதுள்ளதாக அவ்வட்டாரங்கள் தெரிவித்தன.

வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளரின் திடீர் இடமாற்ற உத்தரவுக்கமைய கொக்குவில் இந்துக் கல்லூரி அதிபர் தென்மராட்சிக் கல்வி வலயத்திற்கு திடீர இடமாற்றம் பெற்றுச் சென்றமையை அடுத்து மாணவர்கள் அதிர்ச்சி அடைந்துள்ளனர்.

நேற்றுக் காலை பாடசாலைக்குச் சென்றவேளை இத்தகவல் அறிந்த மாணவர்களும், பெற்றோர்களும் பாடசாலையின் முன்பாக குழுமி நின்று இவ்விடயம் தொடர்பாகக் கதைத்துக் கொண்டிருந்தனர்.

இதனையடுத்து கல்லூரியின் பிரதி அதிபர் சிறிது நேரத்தின் பின்னர் மாணவர்களுடனும், பெற்றோருடனும் கதைத்து நிலையைச் சரிசெய்து மாணவர்களை வகுப்பறைக்குச் செல்லுமாறு பணித்தார்.

இதன் பின்னர் பெற்றோர் மாணவர்களை விட்டுச் சென்றதுடன் மாணவர்களும் வகுப்பறைக்குச் சென்றனர். இதேவேளை நேற்றையதினம் பாடசாலை நடைபெறுமா இல்லையா என்ற குழப்பநிலையும் காணப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தென்மராட்சி கல்வி வலயத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்ட அதிபருக்கு அங்கு எவ்வித பொறுப்பும் வழங்கப்படாத நிலையில் தண்டனை இடமாற்றமா வேறு இடமாற்றமா என்ற குழப்பநிலை ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப் படுகிறது. (06)

# அசுர வேகத்தில் பறக்கும் 'டிப்பர்கள்' உயிரைக் கையில் பிடித்து பயணம்

(யாழ்ப்பாணம்)

வீதி அபிவிருத்திப் பணி மற்றும் யாழ். நகர்ப் பகுதியில் கட்டுமானப் பணிகளுக்கான பொருட்களை ஏற்றியிறக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டு வரும் டிப்பர் வாகனங்களின் அதிகரித்த வேகம் காரணமாக விபத்துக்கள் அதிக ரிக்கும் சாத்தியம் குறித்து எச்சரிக்கப்பட்டுள்ளது.

அண்மை நாட்களாக யாழ். நகருக்கு நெருக்கமாக வீதி அபிவிருத்திப் பணிகள் நடைபெற்று வருகின்றது. அத்துடன் கட்டட நிர்மான நடவடிக்கைகளும் நடைபெற்று வருகின்றன. இதன் காரணமாக வீதிகளில் ஆங்காங்கே கல், மணல் என்பன குவிக்கப்பட்டிருக்கிறது. நிர்மாணப் பணிகளுக்கான வாகனங்களும் நிறுத்தப் பட்டிருப்பதன் காரணமாக வீதிகளில் போக்குவரத்து நெரிசல்களும் ஏற்பட்டிருக்கின்றது.

எனவே இந்தச் சூழலில் பொருட்களை ஏற்றிக்கொண்டு பயணிக்கும் டிப்பர் வாகனங்கள் வேகமாகப் போக்குவரத்துச் செய்வதால் பயணிகள் மற்றும் ஏனைய வாகனங்கள் மிகுந்த சிரமங்களை எதிர்நோக்கிய வண்ணமுள்ளன. இவ்வாறு ஏற்கனவே டிப்பர் வாகனத்தில் மோதுண்டு பல விபத்துச் சம்பவங்கள் நடைபெற்றிருக்கின்றது. இதில் உயி ரிழப்பும் நிகழ்ந்திருக்கிறது.

எனவே டிப்பர் வாகனம் செலுத்துபவர்கள் நகரில் வேகக் கட்டுப்பாட்டைப் பின்பற்ற வேண்டும். இல்லையேல் சம்பந்தப் பட்ட பொலிஸார் நடவடிக்கை எடுக்கவேண்டும் எனவும் பொது மக்களால் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (பா)

# ஆசிரியர்களுக்கு விசேட பயிற்சிப் பட்டறை

யாழ்ப்பாணக் கல்வி வலயதில் உள்ள பாடசாலைகளில் உள்ள என்.ஏ.சி. கழக ஆசிரியர்களுக்கான விசேட பயிற்சிப்பட்டறை எதிர் வரும் ஏழாம் திகதி வெள்ளிக்கிழமை காலை 09.00 மணி தொடக்கம் பிற்பகல் 04.00 மணிவரை நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

சுற்றாடல் மற்றும் விலங்குகள் தொடர்பான அவதானிப்புக்கள், சுற்றாடலின் இயற்கை வளங்களைச் சிறப்பான முறையில் முகாமைததுவம் செய்தல், பல்வேறு சூழல்களில் வாழும் பறவைகள், மிருகங்கள் தொடர்பான அவதானிப்புக்களை அடிப்படையாகக் கொண்டு அவற்றின் நடத்தைகள், நடமாட்டங்கள் பற்றிய தகவல்களை சேகரித்தல் தொடர்பான பயிற்சிகளை ஆசிரியர்களுக்கு வழங்கும் முகமாக நடத்தப்படவுள்ள இச் செயலமர்வானது விலங்கியல்துறை பேராசிரியர் சரத் கொட்டகமவினால் நடத்தப்படவுள்ளது.

மேற்படி செயலமர்விற்கு தெரிவு செய்யப்பட்ட ஒவ்வொரு பாடசாலையிலிருந்தும் இரண்டு ஆசிரியர்கள் வீதம் அனுப்பிவைக்குமாறு பாடசாலை அதிபர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. இவ்வாறு தெரிவு செய்யப்பட்ட ஆசிரியர்களை அன்றைய தினம் நடைபெறும் செயலமர்வில் தவறாது கலநது கொள்ளுமாறும் அறிவுறுத்தப்பட்டுளளது.(03)



146 ஆவது ஆண்டு பொலிஸ் தின விழாவை முன்னிட்டு நெல்லியடிப் பொலிஸ் நிலையத்தில் இடம்பெற்ற நிகழ்வின்போது... (18)


## சிறு விளம்பரம்

### வீடு விற்பனைக்கு

நல்ல சுற்றாடலில் உள்ள ஒரு பரப்புக் காணியிலுள்ள சகல வசதிகளும் கொண்ட ஒரு வீடு விற்பனைக்கு உண்டு. தொடர்பு: க.சீவறட்ணம், றியிஸ்ரார் சம்பந்தர் ஒழுங்கை, சுதுமலை தெற்கு, மானிப்பாய். (R/154)

# அம்பலவன் பொக்கணை கிராமத்தில் 133 குடும்பங்கள் மீள்குடியேற்றம்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தின் கரைதுரைப்பற்று பிரதேச செயலர் பிரிவில் அம்பலவன் பொக்கணை கிராம அலுவலர் பிரிவிலுள்ள மக்கள் நாளை வியாழக்கிழமை செந்த இடத்தில் மீள்குடியமர்த்தப் படவுள்ளனர்.

யுத்த அனர்த்தங்களினால் இடம்பெயர்ந்து வவுனியா- செட்டிக்குளம் நலன்புரி நிலையத்தில் தங்கவைக்கப்பட்டுள்ள 133 குடும்பங்களைச் சேர்ந்த 484 பேர் மேற்படி சொந்த இடங்களில் மீள்குடியமர்த்தப்படவுள்ளனர்.

செட்டிகுளம்- கதிர்காமர் நலன்புரி முகாமிலிருந்து 75 குடும்பங்களைச் சேர்ந்த 248 பேர் 6 பேருந்துகளிலும், 10 பாரவூர்திகளில் இவர்களின் உடமைகளும் எடுத்துச்செல்லப்பட்டு இம்மக்கள் மீள்குடியமர்த்தப்படவுள்ளனர்.

ஆனந்த குமாரசாமி நலன்புரி நிலையத்திலிருந்து 58 குடும்பங்களைச் சேர்ந்த 200 பேர் 4 பேருந்துகளிலும், இவர்களது உடமைகள் 8 பாரவூர்திகளிலும் எடுத்து செல்லப்படுட்டு மீள் குடியமர்த்தப்பவுள்ளனர்.

ஐ.ஓ.எம்.நிறுவனத்தின் உதவியுடன் அழைத்து செல்லப்படும் இம்மக்கள் புதுக்குடியிருப்பு இரணைப்பாலை றோ.க.த.க.பாடசாலையில் தங்கவைக்கப்பட்டு குடும்பப்பதிவுகள் மேற்கொள்ளப்பட்டு பின்னர் மீள் குடியமர்த்தப்படவுள்ளனர்.

இவர்களுக்கு 2 லீற்றர் மண்ணெய், உணவுப் பொதி என்பனவும் மூன்றுவேளை சமைத்த உணவும் வழங்கப்படவுள்ளதாக முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் நா.வேதநாயகன் அறிவித்துள்ளார். (04)

# முல்லைத்தீவு மாவட்டத்தில் குருமார்களுக்கு பயிற்சி

(முல்லைத்தீவு)

இந்து கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் அந்தணரல்லாத குருமார்களுக்கான பயிற்சி கடந்த 13ஆம் திகதி முதல் 28ஆம் திகதி வரை வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலயத்தில் நடை பெற்றது.

திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளர் சண்முகநாதன் தலைமையில் நடைபெற்ற இப்பயிற்சியில், நாடு முழுவதிலும் இருந்து 60 குருமார்கள் கலந்து கொண்டனர்.

இப்பயிற்சியின் ஆரம்பநிகழ்வில் முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் நா.வேதநாயகன் கலந்து கொண்டார்.

இதில் இந்தியாவில் இருந்து வருகைதந்த குருமார்களினால் 15 தினங்களும் சிறப்பான முறையில் பயிற்சி வழங்கப்பட்டதாக முல்லைத்தீவு மாவட்ட கலாசார உத்தியோகத்தர் வி.மோகனராசா தெரிவித்துள்ளார். (04)

# கிணறுகளுக்கு குழாய் பொருத்தல்

(ஆனைக்கோட்டை)

வலிகாமம் பகுதியிலுள்ள ஆனைக்கோட்டை, நவாலி, வட்டுக்கோட்டை போன்ற பகுதிகளிலுள்ள குடியிருப்பளர்கள் கிணற்றுக்குள்ளே குழாய் பொருத்தும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர். தற்போது நிலவும் கடும் வறட்சியான காலநிலையால் மேற்படி பிரதேசங்களிலுள்ள கிணறுகளில் நீர் வற்றிச் செல்வதை அடுத்தே இது கிணறுகளில் குழாய் பொருத்தும் வேலையில் ஈடுபட்டுள்ளனர்.

இதனால் பலரது கிணறுகளில் தண்ணீர் வழமையிலும் பார்க்க கூடுதலாக ஊற்றெடுத்துள்ளதாகவும், குறிப்பாக நன்னீர் ஊற்றெடுப்பதால் தாம் நன்மையடைந்துள்ளதாகவும் எனினும் இந்நடவடிக்கைக்கு அதிகமான பணம் செலவாவதாகவும் குடியிருப்பாளர்கள் தெரிவிக்கின்றனர். (104)

# பாடசாலைக்கு முன்பாக மஞ்சள் கடவை இல்லை

## சிரமப்படும் மாணவர்கள்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவிலிருந்து கொக்கிளாய் செல்லும் பிரதான வீதியில் உள்ள கள்ளப்பாடு அ.த.க. பாடசாலைக்கு முன்பாக மஞ்சள் கடவை போடப்படாமையால், வீதியைக்கடப்பதில் மாணவர்கள் பல அசௌகரியங்களை எதிர்நோக்குவதாக மாணவர்களின் பெற்றோர்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

இப்பிரதான வீதியில் முல்லைத்தீவு றோ.க.த.க.பாடசாலை, சிலாவத்தை தமிழ் வித்தியாலயம், உடுப்புக்குளம் தமிழ் வித்தியாலயம், அளம்பில் றோ.க.த.க. பாடசாலை ஆகியன இயங்கி வருகின்றது.

இந்நிலையில் குறித்த கள்ளப்பாடு பாடசாலை தவிர்ந்த ஏனைய பாடசாலைகளுக்கு முன்பாக மஞ்சள் கடவை போடப்பட்டுள்ள நிலையில் இப்பாடசாலைக்கு முன்பாக போடப்படாது தவற விடப்பட்டுள்ளதால், மாணவர்கள் வீதியைக் கடக்கும் போது, விபத்துக்களைச் சந்திக்க நேரிடுவதாக சுட்டிக்காட்டப்படுகிறது.

பாடசாலைக்கு முன்பாக பாதசாரிக் கடவை (மஞ்சள் கடவை) போடுவது அவசியமான ஒன்றாக உள்ள நிலையில் உரியவர்கள் இப்பாடசாலைக்கு முன்பாக மஞ்சள் கடவை போடாமல் விடப்பட்டமை தவறான செயற்பாடாகும் என மக்கள் தெரிவிக்கின்றனர்.

மாணவர்களை விபத்திலிருந்து பாதுகாக்கும் வகையில் உடனடியாக உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுத்து இப்பாடசாலைக்கு முன்பாக மஞ்சள் கடவை போடுமாறு பெற்றோர்கள் கேட்டுக் கொள்கின்றனர். (04)

# தீருவில் குளத்தை ஆழப்படுத்தி புனரமைப்பதற்கு நடவடிக்கை

(வடமராட்சி)

வல்வெட்டித்துறை நகராட்சி மன்றத்திற்குட்பட்ட தீருவில் குளத்தை ஆழப்படுத்தி இதில் இருந்து பெறப்படும் மண்ணைக் கொண்டு தீருவில் இளைஞர் விளையாட்டுக் கழகத்திற்குச் சொந்தமான விளையாட்டு மைதானத்தைப் புனரமைப்பதற்கான நடவடிக்கைகளை வல்வெட்டித்துறை நகராட்சி மன்றம் மேற்கொண்டுள்ளது.

நகர சபை உறுப்பினர் ம.மயூரனின் கோரிக்கையின் அடிப்படையில் சபை நிதியில் இருந்து நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டதுடன், மேலதிக வேலைகளை மக்கள் பங்களிப்புடன் உலக உணவுத் திட்டத்தின் கீழ் 4200 மனித மணித்தியாலங்கள் என்ற அடிப்படையில் புனரமைப்பு வேலைகள் ஆரம்பிக்கப்படவுள்ளதாக நகர சபை தலைவர் நடராஜா அனந்தராஜ் தெரிவித்துள்ளார்.

இதற்கான கொடுப்பனவாக சுமார் 9 இலட்சம் ரூபா பெறுமதியான அத்தியவசிய உணவுப் பொருட்கள் உலக உணவுத் திட்டத்தினூடாக பயனாளிகளுக்கு வழங்கப்படவுள்ளன.

மேற்படி வேலைத் திட்டத்தை மழைகாலத்திற்கு முன்னர் விரைவாகச் செய்து முடிப்பதற்காக தீருவில் இளைஞர் விளையாட்டுக் கழகம் தமது உறுப்பினர்களைக் கொண்டு செய்வதற்காக இவ்வேலையைப் பொறுப்பேற்றுள்ளது.

இவ் வேலைகளைத் தமது உறுப்பினர்கள் மற்றும் அவர்களது குடும்ப உறுப்பினர்கள் மூலம் செய்து முடிப்பதற்கேற்ற திட்டத்தை நடைமுறைப்படுத்த உள்ளதாக கழகத்தின் செயலாளர் சு.வெற்றிவடிவேல் தெரிவித்தார்.

இவ்வேலைத்திட்டம் தொடர்பாக எடுக்கவேண்டிய நடவடிக்கைகள் பற்றிய விளக்கம் கழக உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ளதால்,அவர்கள் இதில் ஆர்வத்துடன் பங்கேற்கத் தொடங்கியுள்ளதைக் காணமுடிகின்றது. கழக உறுப்பினர்களுடனான சந்திப்பில் நகர சபை உறுப்பினர்களும் கலந்து விளக்கமளித்தனர்.

# ஆலயங்களுக்கு நிதி ஒதுக்கீடு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் சேதமுற்ற இந்து ஆலயங்களை புனரமைக்கும் வகையில் இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் 51 கோயில்களுக்கு தலா 2 இலட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இதன்படி பளை பிரதேசத்தில் 12 ஆலயங்களுக்கும், பூநகரிப் பிரதேசத்தில் 14 ஆலயங்களுக்கும், கரைச்சி பிரதேசத்தில் 21 ஆலயங்களுக்கும், கண்டாவளைப் பிரதேசத்தில் 51 ஆலயங்களுக்கும் இந்நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (142)

# கடலில் அகப்பட்ட வெடிபொருளை பரிசோதித்தவருக்கு விரல்கள் சிதைவு

## முல்லையில் சம்பவம்

(வலிகாமம்)

வழமை போல் கடற்தொழிலுக்குச் சென்றுவந்து கடற்தொழிலாளி ஒருவர், மீன்களுடன் வலையில் அகப்பட்ட வெடிப்பொருளைப் பரிசோதிக்க முற்பட்ட வேளை, அப்பொருள் வெடித்து கைவிரல்களை இழந்துள்ளார். இத்துயரச்சம்பவம் முல்லைத்தீவில் நடைபெற்றுள்ளது.

இச்சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது, முல்லைத்தீவு நகர்ப்பகுதியில் வசித்து வரும் செந்தூரன் (வயது - 21) என்ற கடற்தொழிலாளி வழமை போல் கடந்த 26ஆம் திகதி காலை வேளை கடற்தொழிலுக்காக கடலிற்குச் சென்றுள்ளார்.

மாலையில் தனது சகாக்கள் சகிதம் பிடித்த மீன்களையும் வலைகளையும் கொண்டு கரைக்குத்திரும்பியுள்ளார். கரைக்குத் திரும்பிய செந்தூரன் வலையில் வெடிபொருள் ஒன்று இருப்பதைக்கண்டு அதனை வலையுடன் தனது வீட்டிற்கு எடுத்துச் சென்றுள்ளார். வீட்டின் பின்புறத்தில் இருந்து அந்த வெடிபொருளைப் பரிசோதித்துப் பார்த்த வேளை அது பெரும சத்தத்துடன் வெடித்துள்ளது. இந்த வெடிப்பின் காரணமாக அவரது இடது கையிலுள்ள நடுப்பக்க விரல்கள் மூன்றும் சிதைவடைந்துள்ளன. கழுத்திலும் நெஞ்சுப்பகுதியிலும் சிறு காயங்கள் ஏற்பட்டுள்ளன.

உறவினரால் அவர் உடனடியாக வவுனியா வைத்தியசாலைக்கு எடுத்ததுச் செல்லப்படடார். சிதைவடைந்த கைவிரல்கள் மூன்றும் சத்திரசிகிச்சையின் போது அகற்றப்பட்டுள்ளன . அவர் இப்போது உறவினரின் பராமரிப்புத்தேவை கருதி யாழ்.போதனாவைத்திய சாலைக்கு மாற்றப்பட்டு சிகிச்சை பெற்றுவருகின்றார். (06)



வடமாகாண திட்டமிடல் அமைச்சினால் வடமாகாண அமைச்சின் மூலம் திணைக்களத்தின் 2012ஆம் ஆண்டு முன்னெடுக்கப்படும் நிகழ்ச்சித்திட்டம் தொடர்பான கலந்துரையாடல் நேற்று செவ்வாய்க்கிழமை வடமாகாண சபை கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. இதில் ஈ.பி.டி.பி யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப் பினர் மு.சந்திரகுமார், வடமாகாண பிரதம செயலாளர் திருமதி ர.விஜயலட்மி, ஆளுநரின் செயலாளர் இளங்கோவன் ஆகியோர் திணைக்கள தலைவர்களுடன் திட்டங்கள் குறித்த கலந்துரையாடு வதைக் காணலாம்

(படம்:கே.நந்தகுமார்)

மனித முயற்சியால் எவ்வளவு முடியுமோ, அவ்வளவும் செய்துபார், ஒவ்வொரு தடவையும் உனக்குத் தோன்றுவது 'கடவுள் இருக்கிறார்' என்பதே. - பொன்மொழி.

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, விளம்பரப் பணிமனை: 0212220188
thinamurasu@live.com

## செய்யக் கூடியதைச் சிந்திப்போம்!

கிளிநொச்சிக் குளத்தின் நீரேந்து பகுதிகளில் சட்டவிரோத நில அபகரிப்புகள் நடப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. நீர்ப்பாசனத் திணைக்களத்திற்குச் சொந்தமான 40 இற்கும் மேற்பட்ட காணித் துண்டங்களில் விதிமுறைகளை மீறி நிரந்தரக் கட்டுமானங்கள் அமைக்கும் பணிகள் நடப்பதாகவும் அந்தச் செய்தி கூறுகிறது.

குடியேற்றம் நடக்கிறது, நிலம் பறிபோகிறது என்று கூக்குரலிடுபவர்கள் யாரும், அந்தப் பகுதியில் என்ன நடக்கிறது என்று தெரிந்துகொள்ளவும் செல்லவில்லை. போராட்டக்காரர்கள் எல்லோரும் 'இறைவன் வழங்கியிருக்கும் இறுதிச் சந்தர்ப்பம் இந்தத் தேர்தல்தான்' என்று சொல்லிக்கொண்டு, கிழக்கு மக்களிடம் வாக்குகள் அள்ள அங்குபோய் முகாமிட்டிருக்கிறார்கள்.

பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் எனப்படுபவர்களும் தமிழ்த் தேசத்தைக் காப்பாற்ற, பிரிக்கப்பட்ட கிழக்கு மாகாண சபைக்கு வாக்களித்தால் போதும் என்ற 'அரசியல் ஞானத்திற்கு' வந்து சேர்ந்திருக்கிறார்கள். கிழக்குத் தேர்தலிலும் வென்று தமிழரொற்றுமையைச் சர்வதேசத்திற்கு மீண்டுமொருமுறை நிரூபித்துவிட்டுத்தான் அடுத்த பிரச்சினைக்கு ஆவேசக் கூச்சல் காட்ட வருவார்கள்.

அதன்பிறகு வந்து, 'நிலம் பறிபோய்விட்டது; சர்வதேசம் வந்து அதை மீட்டுத்தர வேண்டுமானால், வடக்கு மாகாணசபைத் தேர்தலிலும் தமிழரொற்றுமையை நாம் காட்ட வேண்டும்' என்பார்கள். நிலமும் பறி போய்க் கொண்டிருந்தால்தான் தேர்தல்களையும் வென்றுகொண்டிருக்க முடியும் என்பது அவர்களுக்குத் தெரியாதா என்ன?

பெருமளவு நிலப்பரப்பில் மக்கள் யாருமின்றி விரிந்து கிடக்கும் வன்னி நிலத்தில், நமது மக்கள் சென்று குடியேறுவதன் மூலம்தான், இவர்கள் முழக்கமிடும் அந்த விரும்பாத குடியேற்றங்களைத் தடுக்க முடியும் என்ற யதார்த்தத்தை வெற்று வீரவசனங்களை விலக்கிப் புரிந்துகொள்ள வேண்டும். மக்கள் அங்கு விரும்பிச்சென்று குடியேறி வாழ வேண்டுமானால், அதற்குரிய வசதிகள் செய்துகொடுக்கப்பட வேண்டும். அந்த வசதிகள் அங்கு உருவாக முயற்சி எடுக்க வேண்டும்.

மாகாண அலுவலகங்கள் அங்கு வரவேண்டும்; பல்கலைக்கழகங்கள் வரவேண்டும்; பல்வேறு தொழிற்சாலைகள் வர வேண்டும். அப்போதுதான் அதை நோக்கி நமது மக்கள் மெல்ல மெல்ல நகர்வர். இந்த குடிப்பரம்பல் நிகழ்வதற்கு, வேண்டியவற்றையே நாம் முயற்சியெடுத்துச் செய்யவேண்டும். இதுதான் அங்கு வேறு குடியேற்றங்களைத் தடுக்க உண்மையாக விரும்புபவர்களின் வழிமுறையாக இருக்கும்.

இதைவிடுத்து சும்மா முழக்கமிடுகிறவர்கள், தங்களது வீர வசனத் தேவைகளுக்காக உண்மையில் நிலத்தைப் பறிகொடுத்துக் கொண்டிருக்கும் விருப்பத்தை உள்மனத்தில் வைத்திருப்பவர்களாகவே இருப்பர்.

குடாநாட்டின் நிலப்பரப்பை ஒப்பிட்டால் மக்கள்தொகை அதிகம்தான். இவர்களில் கணிசமானவர்களும் புலம்பெயர்ந்துள்ளவர்களில் கணிசமானவர்களும் மலையக மக்களும் முஸ்லிம் மக்களும் வன்னிப்பெருநிலப்பரப்பிற்கு வரச் செய்வதன் மூலம்தான் அந்தப் பரந்த பிரதேசம் தமிழ்பேசும் மக்களின் பிரதேசமாகத் தொடர்ந்திருக்கும். அல்லாமல், தெற்கில் நிலமில்லாதவர்கள் அங்கு குடிபெயர்ந்து வருவது, இவர்கள் நம்பிக்கொண்டிருக்கும் சர்வதேசத்தின் பார்வையில் அநியாயமாகத் தெரியப்போவதில்லை. இங்கிருந்து புலம்பெயர்ந்து சென்று சர்வதேச நாடுகள் யாவற்றிலும் காணிகள் வீடுகள் வாங்கிக் குடியமர்ந்துவிட்ட நம்மவர்களுக்கு இது நன்கு விளங்க வேண்டும்.

அலுவலகங்கள், பல்கலைக்கழகங்கள், தொழிற்சாலைகளை அமைத்து அங்கேதான் முதன்மையாக வசதி வாய்ப்புகள் செய்யப்பட வேண்டும். இந்தக் குடாவுக்குள் முடங்கியிருக்கும் மக்கள் அந்த விரிந்த பூமியை நோக்கிச் செல்லவேண்டும். இதைச் செய்யாமல் நிலம் பறிபோகிறது என்று கூக்குரலிடுபவர்கள் தொடர்ந்து வெறுமனே கூக்குரலை மட்டுமே இட்டுக்கொண்டிருப்பர்.

- ஆசிரியர்

# விரிவுரையாளர் பதவிகளுக்கு வந்துசேராத விண்ணப்பங்கள்

(கொழும்பு)

பல்கலைக்கழக ஆசிரியர்களுக்கு குறைந்த சம்பளம் வழங்கப்படுவதனால் சில பீடங்களின் பேராசிரியர்கள் மற்றும் சிரேஷ்ட விரிவுரையாளர்கள் பதவிகளுக்கு யாரும் விண்ணப்பிப்பதில்லையென ரஜரட்ட பல்கலைக்கழக ஆசிரியர்கள் சங்கம் கூறியுள்ளது.

சமூக விஞ்ஞானபீடம் மற்றும் முகாமைத்துவ பீடம் என்பன கல்விசார் வாண்மையாளர்களுக்கான வெற்றிடங்கள் இருப்பதாக வருடத்தில் மூன்று முறை விளம்பரம் செய்தபோதும் எவரும் விண்ணப்பிக்கவில்லை என ரஜரட்ட பல்கலைக்கழக ஆசிரியர்கள் சங்கம் கூறியுள்ளது.

ரஜரட்ட பல்கலைக்கழத்தின் முகாமைத்துவ பீடத்தில் ஒரேயொரு பேராசிரியர் மட்டும் இருப்பதாகவும் விரிவுரையாளர்கள் போதியளவில் இல்லை எனவும் ரஜரட்ட பல்கலைக்கழக ஆசிரியர்கள் சங்கத்தின் தலைவர் ஆர்.டி.என்.கே. பலிஹேன கூறினார்.

ஒரு விண்ணப்பம்கூட கிடைக்கவில்லை. அதிக தூரம், பயணத்தில் உள்ள சிரமங்கள் என்பனவற்றுடன் சம்பளம் போதாமல் இருப்பதுவும் இதற்கான காரணம் என பலிஹேன கூறினார்.

அநேகமான சிரேஷ்ட விரிவுரையாளர்களும் பேராசிரியர்களும் கூடிய வருமானம் கிடைக்கும் ஆலோசனை சேவைகளில் ஈடுபடுகின்றனர். அதிக நேரம் பயணம் செய்ய வேண்டியிருக்கும் பல்கலைக்கழகத்தில் சேர்ந்து கொள்வதால் அவர்களால் ஆலோசனை சேவைகளில் ஈடுபட முடியாது என அவர் கூறினார்.

இதனால்தான் நாம் கூடிய சம்பளம் கோரி வருகின்றோம். பல்கலைக்கழகத்தில் கற்பிப்பதால் குறைந்த வருமானமே கிடைக்கிறது. எம்மால் புதியவர்களை நியமிக்கவும் தற்போது உள்ளவர்களை தொடர்ந்து வைத்திருக்கவும் முடியாதுள்ளது என அவர் கூறினார்.

# சட்டவிரோத மதுபான விற்பனை; 12 இலட்சம் தண்டம் விதிப்பு

(யாழ்ப்பாணம்)

மதுபானம் உள்ளிட்ட போதைப் பொருட்களை சட்டவிரோதமான முறையில் விற்பனை செய்தவர்களுக்கு எதிராக தொடுக்கப்பட்ட வழக்குகளில் 12 இலட்சத்து 37 ஆயிரம் ரூபா தண்டம் அறவிடப்பட்டுள்ளதாக யாழ். மதுவரி நிலைய பொறுப்பதிகாரி என்.கிருபாகரன் தெரிவித்தார்.

இது தொடர்பாக சுமார் 404 வழக்குகள் யாழ். மதுவரி நிலைய எல்லைக்குட்பட்ட பகுதிகளில் ஜனவரி மாதம் முதல் ஆகஸ்ட் மாதம் வரையான காலப் பகுதியில் பதிவு செய்யப்பட்டுள்ளன.

சட்டவிரோத மதுபான விற்பனை, 21 வயதுக்குட்பட்ட சிறுவர்களுக்கு சிகரெட், பீடி விற்பனை மற்றும் வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட புகைப்பொருட்களை விற்பனை செய்தவர்கள் நீதிமன்றில் ஆஜப்படுத்தப்பட்டனர்.

குறித்த சந்தேக நபர்களுக்கு எதிரான வழக்குகளின் மூல[illegible] சுமார் 12 இலட்சத்து 37 ஆயிரம் ரூபா தண்டம் அறவிடப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

# வைத்தியர்களின் அசமந்தப் போக்கே டெங்கு நோயாளி இறக்கக் காரணம்

வவுனியாவில் டெங்கு நோயினால் குடும்பப் பெண் ஒருவர் உயிரிழந்தமைக்கு வைத்தியர்களின் அசமந்தப் போக்கே காரணம் எனத் தெரிய வருகின்றது.

கடந்த 31ஆம் திகதி அநுராதபுரம் வைத்தியசாலைக்கு அனுப்பப்பட்டு சில மணி நேரத்தில் உயிரிழந்த 29 வயதுடைய மேற்படி குடும்பப் பெண் அதற்கு ஐந்து நாட்களுக்கு முன்னதாக வவுனியா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தார்.

வவுனியா வைத்தியசாலையில் ஐந்து நாட்களாக சிகிச்சை மேற்கொண்ட வைத்தியர்கள், நிலைமை தீவிரமைடைந்த போதும் தம்மால் சிகிச்சை அளிக்க முடியும் என்று கூறி தொடர்ந்து மருத்துவமனை விடுதியிலேயே வைத்திருந்துள்ளனர்.

நோயாளி அபாயக் கட்டத்தை அடைந்த போதும் அதற்கு சிகிச்சை அளிக்கும் வசதி வாய்ப்புக்கள் வவுனியா பொது வைத்தியசாலையில் இல்லாத நிலையிலும் சிகிச்சை மேற்கொண்ட குறித்த மருத்துவர்கள் மேலதிக சிகிச்சைக்காக அநுராதபுரம் அனுப்புவதை தாமதித்தே வந்துள்ளனர்.

இறுதியில் நோயாளி உயிர் பிழைக்கமுடியாது என்ற நிலையில் தாம் காப்பாற்றுவதற்கு கடும் முயற்சி மேற்கொண்டுள்ளோம் என்று காட்டும் விதமாகவே அநுராதபுரம் வைத்திய சாலைக்கு அனுப்பியுள்ளனர்.

நோயாளியான இப்பெண் அநுராதபுரம் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்ட சிலமணி நேரத்திலேயே உயிரிழந்துள்ளார்.

ஒரு தினத்துக்கு முன்னதாக அனுப்பியிருந்தால் கூட இந்த நோயாளி உயிர் தப்பியிருக்க முடியும் என வைத்தியசாலைத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை மாங்குளம் நீர்ப்பாசனத்திணைக் களத்தில் பணியாற்றிய உயிரிழந்த இப்பெண்ணுடன் அவரது கணவரான பொதுச்சுகாதாரப் பரிசோதகரும் டெங்கு நோயால் பாதிக்கப்பட்டுள்ளார். குறித்த பொதுச் சுகாதாரப் பரிசோதகரும் அவரது மனைவியும் உடல் நலம் பாதிப்புக் காரணமாக வவுனியா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டிருந்தார்கள்.

அங்கு நடத்தப்பட்ட பரிசோதனைகள் மூலம் இருவருக்கும் டெங்கு நோய் இருப்பது கண்டறியப்பட்டிருந்தது.

அண்மைக் காலமாக வவுனியாப் பிரதேசத்தில் டெங்கு நோயின் தாக்கம் இருப்பது கண்டறியப்பட்டுள்ளது. எனவே டெங்கு நோய் குறித்து பொது மக்கள் விழிப்புடன் இருக்[illegible] வேண்டும் என்றும் சுகாதாரத் துறையினர் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

அத்துடன் டெங்கு நோய்க்கான நுளம்புகள் உற்பத்தியாவதைத் தடுப்பதற்கான செயற்பாடுகளை முன்னெடுப்பதற்காக கிராம சேவகர் பிரிவுகள் தோறும் டெங்கு நோய்த்தடுப்புக் குழுக்களும் அமைக்கப்பட்டு வருகின்றன.

# கோழிகளைத் திருடிய இளைஞர்கள் சிக்கினர்

மன்னார் - பனங்கட்டிக் கொட்டுப் பகுதியில் வீட்டில் வளர்க்கப்பட்ட கோழிகளைத் திருடி விற்பனை செய்துவந்த 6 இளைஞர்களை கடந்த ஞாயிறுக்கிழமை மன்னார் பொலிஸார் கைது செய்து நேற்று முன்தினம் மன்னார் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்திய போது குறித்த 6 இளைஞர்களையும் இம் மாதம் 17 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு மன்னார் மாவட்ட நீதவான் ஏ.யூட்சன் உத்தரவிட்டார்.

மன்னார் - பனங்கட்டிக் கொட்டுப் பகுதியில் உள்ள இரண்டு வீடுகளில் அதே கிராமத்தைச் சேர்ந்த 6 இளைஞர்கள் கோழித்திருட்டில் ஈடுபட்டு வந்தனர்.

இதன் போது குறித்த இரண்டு வீடுகளிலும் களவாடப்பட்ட 21 கோழிகளையும் குறித்த 6 இளைஞர்களும் உப்புக்குளம் மற்றும் கோந்தைப்பிட்டி ஆகிய இடங்களில் விற்பனை செய்து வந்தனர்.

இதன் போது மன்னார் பொலிஸார் அந்த ஆறு இளைஞர்களையும் கைது செய்ததோடு திருடிய கோழிகளும் கைப்பற்றப்பட்டன.

இந்த நிலையில் குறித்த சந்தேக நபர்கள் மன்னார் மாவட்ட நீதவான் ஏ.யூட்சன் முன்னிலையில் ஆஜர்படுத்திய போது சந்தேக நபர்களை எதிர்வரும் 17 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டார்.

# தமிழ் ஈழம் என்பதிலிருந்து ஈழத் தமிழர் என மாற்றம்

- ஆர்.ஹரிஹரன் கட்டுரையிலிருந்து




> **தமிழர் ஒற்றுமை பற்றி அழகான பசப்புரைகளைத் தவிர இலங்கைத் தமிழர் விவகாரம் தமிழ் நாட்டு அரசியலில் தொடர்ந்தும் பாதிக்கப்பட்ட ஒரு விவாதக் கலையாகவே இருக்கப் போகிறது என்பதையே இந்த மாநாட்டுத் தீர்மானம் வெளிப்படுத்துகிறது.**

தி.மு.க. தலைவர் மு.கருணாநிதி, புதுடில்லியின் அழுத்தத்துக்குப் பணிந்து, ஓகஸ்ட் 12ஆம் திகதி மிகுந்த விளம்பரத்துடன் அனைவரது கவனத்தையும் ஈர்க்கும்படி நடைபெற்ற "ஈழத் தமிழர்கள் உரிமைகள் பாதுகாப்பு மாநாட்டில்" ஆரம்பத்தில் "தமிழ் ஈழம்" என்றிருந்ததை பின்னர் "ஈழத் தமிழர்" என மாற்றுவதற்கு பெரிதும் எதிர்ப்பின்றி இணங்கிவிட்டார். இந்த நடவடிக்கை விடுதலைச் சிறுத்தைகள் கட்சி தொல்.திருமாவளவன் மற்றும் திராவிட கழகத்தை சேர்ந்த வீரமணி ஆகிய இருவரைத் தவிர ஏனையவர்களுக்கு வெறும் சொற்பொருளியல் மாற்றம் என்றே தோன்றியிருக்க வேண்டும், ஏனெனில் அங்கு பேசிய பிரதான பேச்சாளர்கள், சுதந்திரத் தமிழீழம் பற்றி தங்கள் பேச்சில் ஒரு சிறு குறிப்புக்கூடத் தெரிவிக்கவில்லை. திருமாவின் பேச்சுக்கூட ஈழப்போர் - 4 இன்போது சேதமான கருணாநிதியின் கௌரவத்தை மீளப் பிடித்துயர்த்துவதிலேயே பெருமளவு தங்கியிருந்தது.

சில ஐரோப்பிய நாடுகள், அவுஸ்ரேலியா, மொசாம்பிக், சுவீடன், நைஜீரியா போன்ற நாடுகளிலிருந்து மனித உரிமைகள் கண்காணிப்பகம் மற்றும் சர்வதேச மன்னிப்புச் சபை என்பனவற்றின் பேராளர்களும் அங்கு வருகை தந்திருந்தனர். சில வெளிநாட்டுப் பேச்சாளர்கள் (அதாவது சுவீடன் மற்றும் மலேசியா என்பனவற்றின் பிரதிநிதிகள்) தங்கள் பேச்சின் பெரும் பகுதியை கலைஞர் கருணாநிதியின் புகழ்பாடுவதற்கே அர்ப்பணம் செய்திருந்தனர். எனினும் இலங்கையின் தீப்பொறிப் பேச்சாளரான இடதுசாரித் தலைவர் விக்கிரமபாகு கருணாரட்ன, அதில் சமூகமளித்தவர்களுக்கு ஏமாற்றம் அளிக்கவில்லை, யுத்தத்துக்கு பின்னான காலப் பகுதியில் சிங்களவர்கள் தமிழர்களைக் கையாளும் ஈவிரக்கமற்ற தன்மையைப்பற்றி ஆற்றல் நிறைந்த வாதத்துடன் எடுத்துக் காட்டினார்.

மாநாட்டுக்கு முதல், நகரின் பெரிய ஹோட்டல் ஒன்றில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஆரம்பக் கூட்டத்தில், தமிழர்களின் உரி மைகளை வலியுறுத்தக்கூடிய நீண்டகாலத் தீர்வு, நீண்ட காலமாக கலந்துரையாடப்பட்டு வாதித்து வரும் ஒரு அரசியல் தீர்வாகவே இருக்க முடியும் என கருணாநிதி கூறினார். அவர் மேலும் கூறுகையில், தமிழர்கள் பெரும்பான்மையாக வசிக்கும் வடக்கு கிழக்கு பகுதிகளில், காணி உரிமை, கல்வி, வேலை வாய்ப்பு மற்றும் இதர ஜனநாயக உரிமைகள் உட்பட, அந்த மக்களின் கௌரவமான வாழ்க்கையை உறுதிசெய்யும் வகையில் உட்கட்டமைப்பு மற்றும் குடியியல் வசதிகளை மீள் நிர்மாணம் செய்வது தொடர்பாக இடைக்காலத் தீர்வு ஒன்று ஏற்படுத்தப்பட வேண்டும் எனத் தெரிவித்தார்.

நீண்ட, இடைப்பட்ட மற்றும் குறுகிய கால விடயங்களை உள்ளடக்கிய 14 தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்ட போதும், அவற்றில் தர்க்க ரீதியான இசைவிணக்கம் மற்றும் தொடர்ச்சி காணப்படவில்லை. அவைகளை காலவரையறை நிர்ணயித்து கண்காணிப்பு செய்வதற்கான கட்டமைப்பு அல்லது முன்னுரிமை முயற்சிகள் எதுவும் மேற்கொள்வதற்கான அறிகுறி தென்படவில்லை. பரந்த அளவில் அந்தத்தீர்மானங்கள் ஒன்றில் ஐ.நாவினதோ அல்லது இந்தியாவினதோ நடவடிக்கையைத் தேடுகிறது.

தீர்மானங்களின் பின் இணைப்பாக அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தை இலங்கைத் தமிழர்கள் மற்றும் அவர்கள் பிரச்சினையில் அது காட்டும் விரோதப் போக்கை கண்டித்து நிறைவேற்றப்பட்டுள்ள தீர்மானம் முற்றிலும் பொருத்தமற்றது. அ.இ.அ.தி.மு.க வை குற்றம் சாட்ட வேண்டும் என்பது மாநாட்டின் ஒரு துணை நிகழ்ச்சி நிரலாக இருந்தது என்பதை இது உறுதி செய்கிறது.

புலம்பெயர் தமிழ் ஆர்வலர்கள் குழு இந்தத் தீர்மானங்களை வடிவமைப்பதில் ஒரு முக்கிய பங்கினை வகித்ததாக சாட்சியங்கள் தெரிவிக்கின்றன. தி.மு.க. வின் பிரதான நோக்கம், ராஜபக்ஷவுக்கு எதிராக புலம்பெயர் தமிழர்கள் மேற்கொண்டு வரும் பிரசாரத்துக்கு இந்தியாவின் ஒற்றுமையை எடுத்துக் காட்டுவதோடு யுத்தத்துக்கு பின்னான காலப்பகுதியில் தமிழர்களின் பரிதாப நிலையை இந்தியாவிலும் இலங்கையிலும் உள்ள பிரதான அரசியற் கட்சிகள் ஓரளவு மட்டுமே கவனத்தில் எடுத்துவிட்டு அதை முற்றாகத் தவிர்த்து விட்டதற்கு இலங்கைக்கு ஒரு வேலை கொடுப்பதுமே.

இதன்படி மாநாடு பிரச்சினைகளை ஆழமாக ஆராய்வதற்கான ஒரு சந்தர்ப்பத்தையும் மற்றும் அவற்றைத் தீர்ப்பதற்கான உண்மையான கருத்துக்களை எடுத்துக்கூறவும் தவறிவிட்டது. மேலும் இலங்கை தமிழர்கள் மீது தாக்கம் செலுத்தும் பிரச்சினைகளுக்கு நீண்ட, இடைத்தர மற்றும் உடனடி விளைவுகளை வழங்கக் கூடிய சிறந்த தெரிவுகளையும் அது பரிந்துரை செய்ய வில்லை.

மாநாட்டின் தீர்மானங்கள் சர்வதேச சமூகத்திடம் கேட்பது, இந்திய அரசாங்கம் அல்லது ஐ.நா. சபை பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதில் முக்கிய பங்குதாரர்களின் - இலங்கை அரசாங்கம், சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்கள் மற்றும் அரசியல் கட்சிகளின் - பொறுப்பை அசட்டை செய்கிறது. இது தமிழ் தலைவர்களின் முயற்சிகளை வரையறுப்பதோடு நாட்டில் நேருக்கு நேரான அரசியல் மோதல்களையும் அவர்களுக்கு உருவாக்குகிறது.

அதேபோல இந்த தீர்மானம், நிலைமையை சீர்ப்படுத்துவதற்கு தமிழ்நாடு செய்யவேண்டிய உதவிகளைப்பற்றி விபரிக்காமல், ஆட்சியில் உள்ள அ.இ. அ.தி.மு.க. வைக் கண்டிப்பதையே பிரதான நோக்காக கொண்டுள்ளது. தீர்மானங்களைப் பின்தொடருவதற்கான ஆதரவு தேடும் செயல்முறை திட்டம் என்ன என்று பகிரங்கப் படுத்தப்படவில்லை. இது வெளிப்படுத்துவது தமிழர் ஒற்றுமை பற்றி அழகான பசப்புரைகளைத் தவிர இலங்கைத் தமிழர் விவகாரம் தமிழ் நாட்டு அரசியலில் தொடர்ந்தும் பாதிக்கப்பட்ட ஒரு விவாதக் கலையாகவே இருக்கப் போகிறது என்பதையே.

எனவே இந்தத் தீர்மானங்கள் நல்லெண்ண நடவடிக்கைகளுக்கான முட்டுக் கட்டைகளை உடைத்தெறியும் விரிவான சிந்தனைகளை வழங்காததில் ஆச்சரியம் எதுவுமில்லை.

கருணாநிதி தமிழ் ஈழம் எனும் வார்த்தையை பயன்படுத்தாமல் இருப்பதற்கு இணங்கியதால் மத்திய அரசுதனது கண்டிப்பைக்கைவிட்டது. கருணாநிதியின் இந்தப்பின்வாங்கல், தி.மு.க. மாநிலத்தில் அரசியல் உயிர் வாழ்தலுக்காக போராட்டம் நடத்தினாலும்கூட, காங்கிரஸ் தலைமையிலான கூட்டணியில் தொடர்ந்தும் நீடித்திருக்க வேண்டும் என்கிற அளவுக்குமீறிய ஆர்வத்தையே வெளிப்படுத்துகிறது. எனவே வயதாகி வரும் திராவிடத் தலைவர் தனது வாழ்நாள் கனவான சுதந்திரத் தமிழீழம் உதயமாவதைக் காணும் ஆவலை ஒரு வேள்ள நிரந்தரமாகவே ஒத்திவைக்க வேண்டி ஏற்படும் என நாம் எதிர்பார்க்கலாம்.

தமிழ் நாடு முதலமைச்சர் ஜெயலலிதா மாநாடு பற்றி எதுவித அரசியல் சொல்லாட்சியும் பிரயோகிக்கவில்லை, ஆனால் மிகத் திறமையாக காவல் துறை அதிகாரத்தை பயன்படுத்தி மாநாட்டை முடக்குவதற்கு முயற்சி செய்தார். அதேவேளை மூன்று நாட்களுக்குப் பின் நடந்த சுதந்திர தின கொடியேற்று விழாவில் பேசும்போது, இலங்கையில் உள்ளக இடம் பெயர்ந்த தமிழர்கள் தங்கள் சொந்த இடங்களுக்கு திரும்பும் வகையில் புனர்வாழ்வு நடவடிக்கைகளை உறுதிப்படுத்தவும், மற்றும் சிங்களவர்களுக்குச் சமமான அரசியல் அதிகாரங்களை தமிழர்களுக்குப் பகிர்வதற்கும் மத்திய அரசு இலங்கை அரசாங்கத்துக்கு அழுத்தம் பிரயோகிக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார். இது வெகு தெளிவாக தெரிவிப்பது என்னவென்றால் கலைஞர் தனது அரசியல் ஆதாயத்துக்காக தமிழர் பிரச்சினைகளை தான் மட்டும் தனியே பயன்படுத்திக் கொள்ள முடியாது என்பதைத்தான்.

சில தமிழ் புலி ஆதரவாளர்களுக்கும் மற்றும் ஈழத்துக்குச் சார்பான பரப்புரையாளர்களுக்கும் மாநாட்டில் கலந்து கொள்ள அனுமதி மறுத்ததின் மூலம் மத்தியும் ஒரு தெளிவான செய்தியை, தமிழீழத்தை பொறுத்தவரை அதன் நிலைப்பாடு "இந்த மட்டும்தான் இதற்குமேல் கிடையாது" என்று தமிழ் புலம் பெயர்ந்தவர்களுக்குத் தெரிவித்துள்ளது. (17ஆம் பக்கம் பார்க்க)

> **சில தமிழ் புலி ஆதரவாளர்களுக்கும் மற்றும் ஈழத்துக்கு சார்பான பரப்புரையாளர்களுக்கும் மாநாட்டில் கலந்து கொள்ள அனுமதி மறுத்ததின் மூலம் மத்திய அரசும் ஒரு தெளிவான செய்தியை, தமிழீழத்தை பொறுத்தவரை அதன் நிலைப்பாடு "இந்த மட்டும்தான் இதற்குமேல் கிடையாது" என்று தமிழ் புலம் பெயர்ந்தவர்களுக்குத் தெரிவித்துள்ளது.**

# மாகாணசபைத் தேர்தலில் தோல்வி; அச்சம் கொள்கிறது அரசாங்கம்

## கூறுகிறது ஜே.வி.பி.



(கொழும்பு)

எதிர்வரும் மாகாணசபைத் தேர்தலில் தோல்வியடையக் கூடும் என்ற பீதி அரசாங்கத்தை தாககியுள்ளதாக ஜே.வி.பி. சுட்டிக் காட்டியுள்ளது.

இதன் காரணமாகவே அரசாங்கம் பாரியளவில் தேர்தல் சட்ட மீறல்களில் ஈடுபட்டு வருவதாக ஜே.வி.பி. யின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்தால் பிறப்பிக்கப்பட்ட சட்டங்களை ஆளும் கட்சி வேட்பாளர்களே மதிப்பதில்லை. தேர்தல் நடைபெறும் மூன்று மாகாணங்களிலும் பாரியளவில் தேர்தல் வன்முறைச் சம்பவங்கள் பதிவாகியுள்ளன.

வட மத்திய மாகாணத்தின் முன்னாள் முதலமைச்சர் 40 உத்தியோகபூர்வ வாகனங்களை தேர்தல் பிரசார நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தி வருகிறார். இவருக்கு எதிராக முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இவருக்கு எதிர்க்கட்சிகளின் தேர்தல் பிரசாரங்களை தாக்கி, தடுத்து நிறுத்தி, மேடைகளில் ஏறி எதிர்க்கட்சி என்று ஒன்றில்லை எனத் தெரிவித்து, மக்களை ஏமாற்றி வருகிறது.

மக்கள் வழங்கிய அதிகாரத்தை, அவர்களை அடித்து அடக்குவதற்காகவே அரசாங்கம் பயன்படுத்தியது. இந்த உண்மையை மக்கள் உணர்ந்து, புத்திசாலித்தனமாக தீர்மானங்களை எடுக்கவேண்டும்.

ஆளும் கட்சியினர் மிகவும் பாரதூரமான வகையில் தேர்தல் சட்டங்களை மீறி வருகின்றனர். ஆளும் கட்சியின் வேட்பாளர்கள் தேர்தல் சட்டங்களை கவனத்தில் எடுத்துக் கொள்வதில்லை. அவர்கள் அரச அதிகாரத்தைப் பயன்படுத்தி வாக்குகளைக் கொள்ளையிடும் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

சட்டவிரோதமாக அலுவலங்களைத் திறந்து வைத்துள்ளனர். பிரசார பணிகளுக்காக அரச வாகனங்களைப் பயன்படுத்துகின்றனர். வாக்காளர்களுக்கு இலஞ்சம் கொடுத்து வருகின்றனர் எனவும் ரில்வின் சில்வா கூறியுள்ளார்.

# மரண தண்டனைக்கு சர்வஜன வாக்கெடுப்பு

(கொழும்பு)

மரண தண்டனையை மீள அமுல்படுத்துவது தொடர்பில் சர்வஜன வாக்கெடுப்பு நடாத்த உத்தேசிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நாட்டில் மரண தண்டனையை மீள அமுல்படுத்துவது தொடர்பில் மக்களின் கருத்துக்களை அறிந்து கொள்ளும் நோக்கில் இந்த வாக்கெடுப்பு நடத்தப் படவுள்ளது.

நீதி அமைச்சு இந்த யோசனைத் திட்டத்தை முன்வைத்துள்ளது.

எதிர்வரும் காலங்களில் நடைபெறவுள்ள அமைச்சரவைக் கூட்டத்தில் இது தொடர்பான யோசனைத் திட்டத்தை நீதி அமைச்சர் ரவூப் ஹக்கீம் முன்வைக்கவுள்ளார்.

இலங்கையில் மரண தண்டனை விதிக்கப்பட்ட பல கைதிகள் சிறைகளில் தண்டனை அனுபவித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, மரண தண்டனையை நிறைவேற்றும் இரண்டு உத்தியோகத்தர்களுக்கான வெற்றிடம் நிரப்பப்பட்டுள்ளது. பிரதம உத்தியோகத்தர் ஒருவரும் அவருக்கு உதவியாளர் ஒருவரும் இவ்வாறு நியமிக்கப்பட்டுள்ளனர்.

இவ்வாறு நியமிக்கப்பட்டவர்களின் பெயர் விபரங்கள் வெளியிடப்படவில்லை.

குறித்த உத்தியோகத்தர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட உள்ளதாக சிறைச்சாலை அமைச்சின் தகவல்கள் தெரிவிக்கின்றன.

# இலங்கையர்கள் மோசடியில்; குற்றஞ்சாட்டுகிறது நோர்வே

(ஒஸ்லோ)

இலங்கையர்கள் மோசடிகளில் ஈடுபட்டு வருவதாக நோர்வே அரசாங்கம் குற்றம் சுமத்தியுள்ளது.

நோர்வேயில் தொழில் வாய்ப்புத் தேடும் இலங்கையர்களுக்கு இதுவரையில் வழங்கப்பட்டு வந்த தற்காலிக வதிவிட அனுமதிகளை இரத்துச் செய்ய அந்நாட்டு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.


இலங்கை, இந்தியா மற்றும் நேபாளம் ஆகிய நாடுகளைச் சேர்ந்தவர்கள் மோசடியான முறையில் நோர்வேயில் தங்கியிருப்பதாகக் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

குறித்த நாடுகளுக்கான நோர்வே தூதரகங்களினால் வழங்கப்பட்ட ஆலோசனைக்கு அமைய இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

உரிய தகுதிகள் மற்றும் சரியான ஆவணங்களை உடைய சில நாடுகளைச் சேர்ந்தவர்களுக்கு நோர்வேயில் தொழில் வாய்ப்பு பெற்றுக் கொள்வதற்காக தற்காலிக வதிவிட வீசாக்கள் வழங்கப்பட்டு வருகின்றது.

இவ்வாறு தற்காலிக வதிவிட வீசா பெற்றுககொள்ளும் பலர் போலியான அல்லது மோசடியான முறைகளில் தங்கியிருப்பதாகக் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இந்த ஆண்டின் முதல் ஆறு மாதத்தில் இந்தியா, இலங்கை மற்றும் நேபாளம் ஆகிய நாடுகளிலிருந்து சுமார் ஆயிரம் தற்காலிக வதிவிட வீசா விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது.



இஸட் புள்ளி விவகாரம் தொடர்பிலான வழக்கு நேற்று முன்தினம் உயர்நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டவேளை இஸட் புள்ளி விவகாரத்தினால் பாதிக்கப்பட்ட பெரும் எண்ணிக்கையான மாணவர்கள் நீதிமன்றத்திற்கு சமுகமளித்திருந்ததைக் காணலாம்.

# அக்கரைப்பற்றில் தேர்தல் சுதந்திரமாக நடக்கமாட்டாது

## கபே அமைப்பு எச்சரிக்கை

(அம்பாறை)

அம்பாறை மாவட்டத்தின் அக்கரைப்பற்றுப் பிரதேசத்தில் நீதியானதும் சுதந்திரமானதுமான தேர்தலை நடத்தமுடியாத சூழ்நிலை ஏற்பட்டுள்ளதாக தேர்தல் கண்காணிப்பில் ஈடுபட்டுள்ள கபே அமைப்பு எச்சரித்துள்ளது.

அங்கு தொடரும் தேர்தல் வன்முறைகள் பற்றி தேர்தல்கள் ஆணையாளர்கள் மற்றும் கட்சிகளின் செயலாளர்களுக்கு அறிவித்துள்ளதாக கபே அமைப்பின் கிழக்கு மாகாணத்துக்கான பிரதான இணைப்பதிகாரி அஹமட் மனாஸ் சுட்டிக்காட்டினார்.

எதிரணி வேட்பாளர்கள் சுதந்திரமாக தேர்தல் பிரசாரங்களில ஈடுபடமுடியாத அளவுக்கு அங்கு சூழ்நிலை மோசமடைந்திருப்பதாகவும் அவர் கூறினார்.

கிழக்கு மாகாணமே தேர்தல் விதிமீறல்கள் அதிகரிக்கும் மாகாணமாக உள்ளதாகவும் கபே அமைப்பினர் தெரிவிக்கின்றனர்.

கிழக்கு மாகாணத்தில் நீலநிற ஆடைகளுடன் பிரசாரங்களில் ஈடுபட்டுள்ள வெளி மாவட்டங்களைச் சேர்ந்தவர்கள், சமுர்த்தி உத்தியோகத்தர்கள் உள்ளிட்ட அரச ஊழியர்களை தேர்தல் பிரசாரங்களில் ஈடுபடுத்திவருவதாக முறைப்பாடு கிடைத்துள்ளதாக கபே அமைப்பு சுட்டிக்காட்டியது.

இதேவேளை கிழக்கு மாகாணத்தில் சுதந்திரமான, நீதியான தேர்தலை உறுதி செய்வதற்காக பொலிஸாருடன் இணைநது உறுதியான நடவடிக்கைகளை எடுத்துள்ளதாக பிரதித் தேர்தல்கள் ஆணையாளர் எம்.எம். மொஹமட் தெரிவித்தார்.

பதவிநிலை அதிகாரிகள் தரத்தில் இருப்பவர்களைத் தவிர ஏனைய அரச ஊழியர்கள் தேர்தல் பிரசாரங்களில் ஈடுபடுவதற்கான சுதந்திரம் இருப்பதாகக் கூறிய பிரதி ஆணையாளர், ஆனால் அவர்களை பிரசாரங்களில் ஈடுபடுமாறு அமைச்சோ அரச திணைக்களங்களோ பணிக்க முடியாது எனறும் சுட்டிக்காட்டினார்.

# கிழக்கில் போதியளவு பொலிஸார் கடமையில் ஈடுபடுத்தப்படவில்லை

## முஸ்லிம் காங்கிரஸ் குற்றச்சாட்டு



(அம்பாறை)

கிழக்கு மாகாணத்தில் போதியளவு பொலிஸ் உத்தியோகத்தர்கள் கடமையில் ஈடுபடுத்தப்படவில்லை என சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் குற்றம் சுமத்தியுள்ளது.

கிழக்கு மாகாணத்தில் சட்டம் ஒழுங்கைப் பேணிப் பாதுகாப்பதற்குத் தேவையான அளவு பொலிஸார் கடமையில் ஈடுபடுத்தப்படவில்லை என சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பொதுச் செயலாளர் ஹசன் அலி தெரிவித்துள்ளார்.

ஏதேனும் அசம்பாவிதங்கள் மற்றும் சம்பவங்கள் தொடர்பில் முறைப்பாடு செய்தால் பொலிஸார் உடனடியாக சம்பவ இடத்திற்கு செல்வதில்லை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்தக் காலதாமதத்திற்கு போதியளவு ஆளணி வளம் இல்லாமையே காரணம் என அவர் தெரிவித்துள்ளார்.

எமது கட்சி வேட்பாளர் ஒருவரின் வீட்டின் மீது நடத்தப்பட்ட தாக்குதல் தொடர்பாக முறைப்பாடு செய்தபோது, காலதாமதமாகவே பொலிஸார் சம்பவ இடத்திற்கு சென்றதாகக் குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் கேள்வி எழுப்பிய போது போதியளவு உத்தியோகத்தர்கள் இல்லாமையினால் உரிய நேரத்திற்கு சம்பவ இடத்திற்கு செல்ல முடியவில்லை என் பொலிஸார் பதிலளித்துள்ளனர்.

கட்சிக்குள்ளும் கட்சிகளுக்கு இடையேயும் அதிகளவான மோதல்கள் இடம்பெற்று வரும் தருணத்தில் மேலதிகமாக பொலிஸ் உத்தியோகத்தர்கள் கடமையில் ஈடுபடுத்தப்பட வேண்டியது மிகவும் அவசியமானது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அக்கரைப்பற்று வேட்பாளர்களுக்கு விசேட பாதுகாப்பு அளிப்பதாக வாக்குறுதி அளிக்கப்பட்ட போதிலும், இதுவரையில் எவ்வித பாதுகாப்பும் அளிக்கப்படவில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, இந்தக் குற்றச்சாட்டுக்களில் உண்மையில்லை என பொலிஸ் பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

கிழக்கில் சட்டம் ஒழுங்கை நிலைநாட்டுவதற்கு போதியளவு பொலிஸ் உத்தியோகத்தர்கள் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

# ஆய்வுச் சஞ்சிகைக்கு கட்டுரைகள் கோரல்

(கொழும்பு)

'கல்வியின் நோக்குகள்' ஆய்வுச் சஞ்சிகையின் இரண்டாவது இதழினை வெளியிடுவதற்கு கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளது. கல்வி முறைமையின் தர மேம்பாடு, நவீனமயமாக்கம் ஆகியவற்றின் அடிப்படையில் கல்விசார் நடைமுறைகளை மேம்படுத்துவதும் ஆய்வு முடிவுகளை ஆவணப்படுத்துவதுமே இவ் ஆய்வுச் சஞ்சிகையின் முதன்மை நோக்கங்களாகும்.

இச் சஞ்சிகைக்கு ஆய்வுக் கட்டுரைகள் வரவேற்கப்படுகின்றன. கட்டுரைகள் செப்ரெம்பர் மாதம் 14 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள

j.tillakaratne@moe.gov.lk / j. tillakaratne@gmail.com

மின்னஞ்சல் முகவரிகளுக்கு அனுப்புமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

# கைவிடப்பட்டுள்ள வாகனங்களை பார்வையிடும் காலத்தை நீடிக்கவும்

## முல்லை மக்கள் கோரிக்கை

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தில் யுத்த அனர்த்தங்களின் போது கைவிடப்பட்ட வாகனங்களைப் பார்வையிட்டு அதனைப் பெறுவதற்கான கால வரையறையை நீடிக்குமாறு பொதுமக்கள் முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபரிடம் கோரிக்கை ஒன்றை முன்வைத்துள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் கைவிடப்பட்ட வாகனங்களைப் பார்வையிட்டு அவற்றைப் பெறுவதற்கான கால வரையறை கடந்த மாதம் 31 ஆம் திகதியுடன் நிறைவு பெற்றுள்ளதாக முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தினால் அறிவிக்கப்பட்டது.

எனினும், இம்மாவட்டத்தில் மக்கள் முழுமையாக மீள்குடியமர்த்தப்படாத நிலையில் மீள்குடியேற்றம் செய்யப்படாத இடங்களில் மக்களுடைய வாகனங்கள் கைவிடப்பட்ட நிலையில் காணப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதனை அடுத்தே மீள்குடியமாத்தப்படாத மக்கள் கைவிடபபட்ட வாகனங்களைப் பார்வையிட்டு, அவை இருக்கிறதா என உறுதிப்படுத்தி அவற்றைப் பெற்றுக்கொள்வதற்கு கால வரையறையை நீடிக்குமாறு அவர்கள் அரச அதிபரைக் கேட்டுள்ளார்கள்.

மீள்குடியேற்றம் செய்யப்படாத மக்கள் கடிதம் மூலம் அரச அதிபருக்கு இக் கோரிககை முன்வைத்துள்ளனர். (04)

# நீரியல்வளத் திணைக்களத்திற்கு 5 பட்டதாரி பயிலுநர்கள் இணைப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் அண்மையில் பட்டதாரி பயிலுநர் நியமனம் வழங்கப்பட்டவர்களிலிருந்து ஐந்து பேர் யாழ். மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத்திணைக்களத்திற்கு இணைக்கப்பட்டுள்ளதாக திணைக்களத்தின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

நல்லூர் பிரதேச செயலகத்தில் இருந்து இருவரும், யாழ். செயலகத்திலிருந்து மூவருமாக மொத்தம் ஐந்து பட்டதாரி பயிலுநர்கள் யாழ். கடற்றொழில் நீரியல்வளத் திணைக்களத்திற்கு இணைக்கப்பட்டிருப்பதாக அவ் அதிகாரி தெரிவித்தார்.

யாழ். மாவட்ட கடற்றொழில் நீரியல்வளத் திணைக்களம் யாழ. செயலகத்திடம் விடுத்த கோரிக்கையை அடுத்தே இவர்கள் ஐவரும் இணைக்கப்பட்டிருப்பதாகத் தெரியவருகின்றது.

இதேவேளை திணைக்களத்தினால் எரிபொருள் மானியம் வழங்கும நடவடிக்கை விஸ்தரிக்கப்பட்டு வருவதன் காரணமாக தேவைக்கும் குறைவான உத்தியோகத்தர்களின் பங்களிப்புடன் அந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும், தற்சமயம் வழங்கப்படடிருக்கும் பட்டதாரி பயிலுநர்களின் உதவியுடன் இந்தப் பணியை இல்குவாக மேற்கொள்ளக்கூடியதாக இருக்கும் என்வும் மேலும் தெரியவருகின்றது. (பா)

# சமுர்த்தி பயனாளிகளுக்கு வாழ்வாதார உதவிகள்

(கரவெட்டி)

நெல்லியடி - கரவெட்டி சமுர்த்தி வங்கியினால் சமுர்த்திப் பயனாளிகளின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்காக பயனாளிகளுக்கு உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

இதன்படி 4 பயனாளிகளுக்கு தையல் இயந்திரக் கொள்வனவுக்கென ஒரு இலட்சத்து 20 ஆயிரம் ரூபாவும், 4 பயனாளிகளுக்கு கால்நடைக் கொள்வனவுக்கு இரண்டு இலட்சத்து 70 ஆயிரம் ரூபாவும் வழங்கப்பட்டுள்ளது.

மேலும் 17 பயனாளிகளுக்கு விவசாய உபகரணங்கள் கொளவனவுக்கு 4 இலட்சத்து 10 ஆயிரம் ரூபா வழங்கப்பட்டுளளது.

இதேவேளை இவ்வருடத்தில் சமுர்த்திப் பயனாளிகளுக்கு சுழற்சி முறையில் 46 இலட்சத்து 70 ஆயிரம் ரூபா ஏற்கனவே வழங்கப்பட்டுள்ளதாகவும் மற்றும் வாழவாதார உதவியாக இவ்வருடத்தின் இதுவரையான கால்ப்பகுதி வரை 2 இலட்சத்து 90 ஆயிரம் ரூபா பயனாளிகளுக்கு வழங்கபபட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனால் சமுர்த்தி பயனாளிகள் பெரும் நன்மைகளைப் பெற்று வருவதாகவும், இனிவரும் காலங்க்ளிலும் சமுர்த்திப் பயனாளிகளுக்கு வாழ்வாதார உதவிகள் மற்றும் சுழற்சி முன்றயில் உதவிகள் என்பன வழங்கப்படும் என வங்கியின் கருத்திட்ட முகாமையாளர் இ.உதயகுமார் அறிவித்துள்ளார். (18)

# புலமைப்பரிசில் சான்றிதழை பெற்றுக்கொள்ள கோரிக்கை

(வலிகாமம்)

யாழ். நகரின் பிரபல்யமான பாடசாலைகளிலிருந்து 2010 ஆம் ஆண்டு தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களது சான்றிதழ்களை நீண்டகாலமாகியும் பெற்றோர் பெற்றுக்கொள்ளவில்லை எனவும், அவற்றைப் பெறும்படியும் அதிபர்கள் பெற்றோருக்கு அழைபபு விடுத்துள்ளனர்.

புலமைப் பரிசில் பரீட்சையில் 2010 ஆம் ஆண்டு முதல் ஒவ்வொரு பாடத்திலும் 35 புள்ளிகளுக்கு மேல் பெற்றுக் கொண்ட மாணவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கும் திட்டத்தைக் கல்வியமைச்சு ஆரம்பித்திருந்தது. இதன்படி 2010 இல் புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றி இரு பாடங்களிலும் 70 புள்ளிகளையும் அதற்கு மேற்பட்ட புள்ளிகளையும் பெற்றுக் கொண்ட மாணவர்களுக்கான சானறிதழ்களைப் பரீட்சைத் திணைக்களம் பாடசாலைகளுக்கு அனுப்பி வைத்துள்ளது.

இச் சான்றிதழ்கள் பாடசாலைகளுக்கு வந்து சேர்ந்து நீண்டகாலமாகவும், பெற்றோர்களுக்கு தெரிவிக்கப்பட்டிருந்த பொழுதும், பெருந்தொகையான மாணவர்களது பெற்றோர்கள் சான்றிதழ்களை இன்னும் பெற்றுக்கொள்ளவில்லை என நகரிலுள்ள ஆரம்பப் பாடசாலை ஆசிரியர்களும், அதிபர்களும் கவலை தெரிவிககின்றனர். உதாரணமாக யாழ். இந்து ஆரம்பப் பாடசாலையில் நூற்றுக்கும் மேற்பட்ட சான்றிதழ்கள் பெற்றோர்களால் பெறப்படாமல் இன்னும் காணப்படுகின்றன.

எனவே இச்சான்றிதழ்களின் பயன்பாடு கருதி அதனைப் பெற்றுக்கொள்ளுமாறு நகரப் பாடசாலை அதிபர்கள் கூட்டாகப் பெற்றோர்களுக்கு அழைப்பு விடுத்துள்ளனர்.

இச்சான்றிதழ் மாணவர்களது எதிர்கால கல்வி வளர்ச்சிக்கும், தொழில் வாய்ப்புக்கும் பயன் மிக்கதாக அமைவதால் பெற்றோர்கள் அவற்றினைப் பெறுமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளனர். (06)



## சிறந்த மனநிலையில் ஹோலி பெருமைப்படுகிறார் டோனி



(பெங்களூர்)

நெருக்கடிக்கு உள்ளாகாமல் சிறந்த மனப்போக்குடன் விராட் ஹோலி ஆடி வருகின்றார். அவரின் இந்த தைரியம் தொடர்ந்து ஜொலிக்கத் துணைபுரியும் என இந்திய அணிக் கப்டன் டோனி தெரிவித்தார்.

விராட்ஹோலி மிகவும் சிறப்பாக ஆடி வருகின்றார். அவர் நெருக்கடிக்கு உள்ளாகாமல் சிறந்த மனப்போக்குடன் விளையாடினார். இவருக்கு சிறந்த எதிர்காலம் இருப்பது தெரிகின்றது. ஆடுகளம் உதவிகரமாக இல்லாவிட்டாலும் சுழற்பந்து வீச்சாளர் அஸ்வின், ஓஜா ஆகியோர் சிறப்பாக செயற்பட்டனர். அவர்களுக்கு உமேஷ் யாதவ், சகீர்கான் ஆகியோர் பக்கபலமாக இருந்தனர். நியூசிலாந்து பந்து வீச்சாளர்கள் நன்றாக செயற்பட்டு விக்கெட்டுகளை வீழ்த்தினார்கள். நமது சுழற்பந்து வீச்சாளர்களும் அபாரமாகச் செயற்பட்டனர். கடந்த சில போட்டிகளில் பந்து வீச்சாளர்கள் மிகவும் சிறப்பாக செயற்பட்டு வருகிறார்கள் எனவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை, ஆட்டநாயகன் விருது பெற்ற விராட்ஹோலி கூறுகை யில், நெருக்கடியான சூழ்நிலையில் நான் துடுபபாடச் சென்றேன். ஒரு நேரத்தில் 10 ஓட்டங்களைக் குறிவைத்து செயற் படுவது என்று நானும் டோனியும் முடி வெடுத்து செயற்பட்டோம். அந்தத் திட்டம் எங்களுக்கு சரியாக அமைந்தது. நான் பெருமையுடன் செயற்பட எண்ணி விளையாடி னேன். அதற்கு பலன் கிடைத்தது. பந்து அதி- கம் சுழன்றது என்றார்.

## இந்திய துடுப்பாட்ட வீரர்களில் சிறப்பானவர் விராட் ஹோலி

### ராகுல் ராவிட் புகழாரம்

(பெங்களூர்)

தற்போதுள்ள இந்திய அணியில் விராத் ஹோலி தான் சிறந்த துடுப்பாட்ட வீரர் என, முன்னாள் இந்திய கப்டன் ராகுல் ராவிட் புகழாரம் சூட்டினார். தற்போதுள்ள இந்திய அணியில் விராத் ஹோலி சிறந்த துடுப்பாட்ட வீரர். சமீபகாலமாக இவரது ஆட்டத் திறன் அருமையாக உள்ளது. டெஸ்ட், ஒருநாள், ருவென்ரி -20 என அனைத்து விதமான கிரிக்கெட் போட்டியிலும் சிறப்பாக விளையாடுகிறார். இவர் கிடைத்த வாய்ப்பைச் சரியாகப் பயன்படுத்திக் கொண்டார். பெங்களூர் டெஸ்டின் இரண்டாவது இனிங்சில் இக்கட்டான நேரத்தில் களமிறங்கிய ஹோலியை கப்டன் டோனி சிறப்பாக வழிநடத்தி வெற்றி தேடித் தந்தார். இது ஹோலிக்கு அதிக நம்பிக்கை அளித்திருக்கும்.

ஹோலியின் துடுப்பாட்டத் திறமையை ஜூனியர் அணிக்காக (19 வயது) விளையாடியது முதல் பார்த்து வருகிறேன். இவருடன் ஐ.பி.எல்., தொடரில் பெங்களூர் ரோயல் சாலஞ்சர்ஸ் அணியில் இணைந்து விளையாடி உள்ளேன். இவரது துடுப்பாட்டத்தில் நாளுக்கு நாள் நல்ல முன்னேற்றத்தைக் காண முடிகிறது. ஹோலி, இளம் வயதில் விளையாடிய போது செய்த தவறு களை தற்போது திருத்திக் கொண்டுள்ளார். இதன்மூலம் இவர், நிறைய விடயங்களைக் கற்றுக் கொண்டு வருகிறார் என்பது தெளிவாகிறது. முன்னதாக களத்தில் ஆக்ரோஷமாகக் காணப்படும் இவர், தற்போது அதனை குறைத்துக் கொண்டார் எனத் தெரிவித்தார்.



## ருவென்ரி -20 உலக கிண்ணத்தை இலங்கை அணி கைப்பற்றும்

(கொழும்பு)

உலக ருவென்ரி-20 கிரிக்கெட் தொடரில் வெற்றிபெறுவதற்கான வாய்ப்பு இலங்கை அணிக்கு உள்ளது என குமார் சங்கக்கார தெரிவித்துள்ளார்.

பெரிய தொடர்களில் சிறப்பாகச் செயற்படும் இயல்பு காரணமாக இலங்கை அணியும் வெற்றிபெறக் கூடிய அணிகளுள் ஒன்றாகக் கணிக்கப் பட்டுள்ளது.

மிகப்பெரிய தொடர்களில் இலங்கை அணி எப்போதும் சிறப்பாகச்செயற்பட்டு அதிக போட்டித்தன்மையுடன் பங்குபற்றி யுள்ளது. மிகப்பெரிய தொடர்களில் இணைந்து செயற்படுவதில் இலங்கை அணி எப்போதும் முன் னிலையில் காணப்படுகிறது. எப்போதும் இலங்கை அணி வீரர்கள் தங்கள் திறமைகளில் நம்பிக்கை வைத்து விளையாடினால் இலங்கை அணிக்கு அதிக வாய்ப்பு உண்டு என்பதில் சந்தேகமில்லை.

இலங்கை அணி முன்னரைப் போல் சுழற்பந்து வீச்சைப் பிரதானமாக நம்பிக் காணப்படவில்லை. இலங்கை அணியில் தற்போது வேகப் பந்துவீச்சாளர்களே பிரதான பந்துவீச்சாளர்களாக மாறியுள்ளார்கள்.

எனினும் சொந்த நாட்டில் ஆடுவது என்பது குறித்த நாட்டிற்குச் சாதகமான ஆடுகளங்களை உருவாக்குவது மாத்திரமல்ல சொந்த நாட்டில் விளையாடும் உணர்வு. சொந்த நாட்டு மக்களின் ஆதரவும் அன்பும் போன்றவையும் முக்கியமானவை.

தற்போதைய காலகட்டத்தில் சொந்த அணிக்கு குறித்த வகையிலான விக்கெட்டுக்கள் வேண்டும் எனக் கேட்டு ஆட முடியாது. கிடைக்கும் ஆடுகளங்களில் சிறப்பாகச் செயற்படுவதே முக்கியமானது. சொந்த நாட்டில் விளையாடுவதால் இலங்கைக்கு அதிக சாதகம் எனத் தெரிவித்தார்.

## வாய்ப்பிருந்தபோதிலும் பறிபோனது வெற்றி

(பெங்களூர்)

பெங்களூர் டெஸ்ட் போட்டி யில் நாம் வெற்றி பெற அதிக வாய்ப் பிருந்த போதும், ஹோலி,டோனி ஆகியோரின் சிறப்பான ஆட்டத்தின் மூலம் அது தகர்ந்து போய்விட்டது. இருப்பினும் எமது வீரர் கள் சிறப்பான முறையில் இப்போட்டி யில் தமது திறமைகளை வெளிப்படுத் தினர் என நியூசிலாந்து அணிக் கப்டன் டெய்லர் தெரிவித்தார்.

ஹைதராபாத் டெஸ்டில் இன்னிங்ஸ் தோல்வியைச் சந்தித்த எங்கள் அணி வீரர்கள் இந்த டெஸ்டில் நல்ல போட்டித் திறனை வெளிப்படுத்தினார்கள். முதல் இன்னிங்ஸில் 50 ஓட்டங்களுக்குள் 5 விக்கெட்டை இந்தியா இழந்தது. 3ஆவது இனிங்ஸில் குறுகிய நேரத்தில் 3 விக் கெட்டுகளை வீழ்த்தியதும் நாங்கள் வெற்றி பெற வாய்ப்பு இருப்பதாக நம் பினோம். விராட் ஹோலி, டோனி ஆகி யோர் மிகவும் சிறப்பாக ஆடி எங்கள் வெற்றி வாய்ப்பைப் பறித்து விட்டனர். பெங்களூர் ஆடுகளம் சிறப்பாக இருந் தது என்றார்.

## டேவிஸ் கிண்ண அரையிறுதியிலும் நடால் அவுட்



(மாட்ரிட்)

காயம் முழுமையாகக் குணமடைந்தால் மாத்திரமே களமிறங்க முடியும். அமெரிக்க ஓப்பன் ரென்னிஸைத் தொடர்ந்து டேவிஸ் கிண்ண அரையிறுதிப் போட்டி யிலும் என்னால் விளையாட முடியாமல் போவது வருத்த மளிக்கின்றது என ரபெல் நடால் தெரிவித்தார்.

உலகின் 3ஆம் நிலை வீரரான ரபெல் நடால் (ஸ்பெயின்) கடந்த ஜூன் மாதம் நடந்த விம்பிள்டன் ரென்னிஸ் போட்டியில் 2ஆவது சுற்றில் அதிர்ச்சித் தோல்வி கண்டு வெளியேறினார். இடது முழங்காலில் ஏற்பட்ட காயம் காரணமாக அவர் அது முதல் எந்தப் போட்டியிலும் கலந்து கொள்ளவில்லை. டாக்டர்களிடம் சிகிச்சை பெற்று வருகிறார். இதனால் அவர் லண்டன் ஒலிம்பிக் மற்றும் அமெரிக்க ஓப்பன் போட்டியில் விளை யாடவில்லை.

இந்நிலையில் இது குறித்து அவர் தெரிவித்ததாவது: சர்வதேச ரென்னிஸ் போட்டிகளுக்குத் திரும்ப வேண்டும் என்பதில் நான் விருப்பமாக இருக்கிறேன். ஆனால் நான் நீண்ட நாட்கள் வேண்டு மன்றால் எனது முழங்காலுக்கு ஓய்வு தேவைப்படுகிறது. வலி பிரச்சினை இல்லாமல் விளையாட முடியும் என்ற நிலையை உணர்ந்ததும் போட்டிக்குத் திரும்புவேன். டாக்டர்களைச் சந்தித்து சிகிச்சை பெற்ற பிறகு முழங்கால் காயத்தில் முன்னேற்றம் ஏற்பட்டு இருக் கிறது. இன்னும் 2 மாதம் எனக்கு ஓய்வு தேவைப்படுகிறது.

இதனால் இந்த மாதம் நடைபெறும் டேவிஸ் கோப்பை அரை இறுதிப்போட்டியில் என்னால் ஆட முடியாது. டாக்டர்கள் தெரிவித்த ஆலோசனைகளின்படி எனது உடல் தகுதிக்கான பயிற்சியை மேற்கொள்வேன். காயம் சரியானதும் களம் திரும்புவேன் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

## ஒரு நாள் தொடர் ஆஸி. வசம்



(அபுதாபி)

பாகிஸ்தான் அணிக்கெதிரான ஒரு நாள் தொடரை அவுஸ்ரேலிய அணி கைப்பற்றிக்கொண் டது. அவுஸ்ரேலிய, பாகிஸ்தான் அணிகளுக் கிடையிலான மூன்று போட்டிகளைக் கொண்ட ஒரு நாள் தொடரின் மூன்றாவதும், இறுதியுமான ஆட்டம் நேற்று முன்தினம் அபுதாபியில் நடைபெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற அவுஸ்ரேலிய அணி முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது. இதற்கமைய முதலில் ஆடிய பாகிஸ்தான் அணி 50 ஓவர்கள் நிறைவில் ஏழு விக்கெட்டுக்களை இழந்து 244 ஓட்டங்களைப் பெற்றது. இதில் மொகமட் ஹபீஸ் 78, நசீர் ஜம்ஷெத் 48, அசார் அலி 27 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் எம்.ஏ. ஸ்ரார்சி நான்கு, ஜோன்சன் இரண்டு விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

பதிலுக்கு 245 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய அவுஸ் ரேலிய அணி 47 ஓவர்கள் நிறைவில் ஏழு விக் கெட்டுக்களை இழந்து வெற்றி இலக்கை அடைந் தது. இதில் மைக்கல் ஹசி 65, டேவிட் ஹசி 43, வைட் 22, மக்ஸ்வெல் 56 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் சயிட் அஜ்மல் மூன்று, அப்துர் ரஹ்மன், யுனைட்கான் தலா இரண்டு விக்கெட்டுக்களை வீழ்த்தினர். இவ்வெற்றியின் மூலம் மூன்று போட்டிகளைக் கொண்ட ஒரு நாள் தொடரை 2-1 என்ற கணக்கில் அவுஸ்ரேலிய அணி கைப்பற்றிக்கொண்டது. போட்டியின் ஆட்டநாயகனாக மைக்கல் ஹசியும், தொடர் நாயகனாக ஸ்ரார்சியும் தெரிவானார்கள்.

## மன்னிக்க வேண்டுகிறேன்



பாராலிம்பிக் போட்டியில் வெள்ளிப்பதக்கம் வென்ற பிளேடு ரன்னர் பிஸ்டோரியஸ், தனது கருத்துக்கு மன்னிப்பு கேட்டுக்கொண்டார்.

லண்டனில் மாற்றுத்திறனாளிகளுக்கான 14ஆவது பாராலிம்பிக் போட்டி நடக்கிறது. இதன், 200 மீ. டி 44 ஓட்டத்தில் கடந்த 2008 பீஜிங்கில் தங்கம் வென்ற தென்னாபிரிக்காவின் ஆஸ்கர் பிஸ் டோரியஸ் தங்கம் வெல்வார் என்று எதிர்பார்க்கப்பட்டது. இதற்கேற்ப இறுதிப் போட்டியில், பிஸ்டோரியஸ் தொடக்கத்தில் இருந்தே முன்னிலையில் வந்து கொண்டிருந்தார். கடைசி சில வி- னாடிகளில் முந்திய பிரேசிலின் ஆலிவெய்ரா (21.45 வி- னாடி) முதலிடம் பெற்று தங்கம் வெல்ல, மைதானமே அதிர்ச்சியில் உறைந்தது. 0.07 வினாடி தாமதமாக வந்த பிஸ்டோரியஸ், வெள்ளிப் பதக்கம் கைப்பற்றினார். அமெரிக்காவின் லீபெர் வெண்கலம் வென்றார்.

இதுகுறித்து பிஸ்டோரியஸ் கூறுகையில், ஆலிவெய் ராவின் செயற்கை கால், வழக்கத்துக்கு மாறாக சற்று நீளமாக இருந்தது. இதை சர்வதேச பாராலிம்பிக் கமிட்டி கண்டு கொள்ளவில்லை என்றார். இப்போது தனது கருத்துக்கு மன்னிப்பு கேட்டுள்ளார். இதுகுறித்து அவர் கூறுகையில், எந்த வீரரின் திறமையையும் குறைத்து மதிப்பிட விரும்பவில்லை. தோல்வியடைந்த நேரத்தில் தெரிவித்த கருத்துக்கு மன்னிப்பு கேட்டுக் கொள்கிறேன் என்றார்.

## மீண்டும் அணிக்குத் தேவை பீற்றர்சன்

(லண்டன்)

இங்கிலாந்து கிரிக்கெட் அணியில் பீற்றர்சனை மீண்டும் சேர்க்க வேண்டுமென்று அந்த அணி துடுப்பாட்ட வீரர்களான மோர்கன், ரவி போபாரா ஆகியோர் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பாகக் கருத்துத் தெரிவித்த இங்கிலாந்து துடுப்பாட்ட வீரர்களான மோர்கன், ரவி போபாரா ஆகியோர், இங்கிலாந்து அணிக்காக பீற்றர்சன் மீண்டும் விளையாட வேண்டுமென்றுதான் அனைவரும் விரும்புவார்கள்.

அவர் சிறந்த வீரர் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை. எனவே அவர் மீண்டும் அணியில் சேர்த்துக் கொள்ளப்படுவார் என்ற நம்பிக்கை உள்ளது. அவரின் ஆட்டம் எப்பொழுதும் அற்புதமாக இருக்கும். நெருக்கடியான நேரங்களில் அணி யின் நிலையை உணர்ந்து ஆடுவதில் அவருக்கு நிகர் அவரே. இது போன்ற பல சிறப்புக்களைக் கொண்டுள்ள அவர் மீண்டும் அணிக்குத் தேவை என்றனர்.

# கால்பந்து, கரப்பந்தாட்டத்தில் ஐயனார், பாத்திமா சம்பியன்



(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறை றேஞ்சஸ் விளையாட்டுக் கழகம் நடத்திய கால்பந்து மற்றும் கரப்பந்தாட்டப் போட்டிகளில் வேலணை துறையூர் ஐயனார் மற்றும் எழுவைதீவு பாத்திமா அணிகள் கிண்ணம் வென்றன.

கடந்த வாரம் ஊர்காவற்றுறை றேஞ்சஸ் விளையாட்டுக்கழகமும் சனசமூக நிலையமும் இணைந்து நடத்திய தீவக மட்டத்திலான மாபெரும் கால்பந்தாட்டம் மற்றும் கரப்பந்தாட்டப் போட்டிகள் நடைபெற்றன.

தீவகத்திற்குட்பட்ட முன்னணி அணிகள் பல பங்குகொண்ட கால்பந்தாட்டத்தொடரின் இறுதிப் போட்டிக்கு வேலணை துறையூர் ஐயனார் அணியும், புங்குடுதீவு பாரதி அணியும் தகுதி பெற்றன. இதில் சிறப்பான ஆட்டத் திறனை வெளிப்படுத்திய வேலணை துறையூர் ஐயனார் அணி 2-1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று கிண்ணத்தைக் கைப்பற்றிக் கொண்டது.

தொடர்ந்து கரப்பந்தாட்டப் போட்டி நடைபெற்றது. இதில் தீவகத்திற்குட்பட்ட முன்னணி அணிகள் பங்குகொண்ட இப்போட்டித் தொடரில் எழுவைதீவு பாத்திமா அணி கிண்ணத்தைச் சுவீகரித்துக் கொண்டது.

இப்போட்டி நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட ஈ.பி.டி.பி.யின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சில்வெஸ்திரி அலென்ரின் (உதயன்) வெற்றிபெற்ற அணிகளுக்கு கிண்ணம் வழங்கி கௌரவித்தார். மற்றும் இப்போட்டி நிகழ்வில் அதிபர் ஜேம்ஸ் சிங்கராஜர், ஊர்காவற்றுறை பிரதேச சபைத் தவிசாளர் மு. ஜேகாந்தன், ஊர்காவற்றுறை பிரதேச சபையின் உப தவிசாளர் அல்பேட் மாஸ்ரர் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர். (85)

# நெடுந்தீவில் கால்பந்துப் போட்டி

(நெடுந்தீவு)

நெடுந்தீவுப்பிரதேச சபைக்கு உட்பட்ட பதிவுசெய்யப்பட்ட கழகங்களின் 21 வயதிற்குட்பட்டோருக்கான கால்பந்தாட்டப் போட்டி நாளை வியாழக்கிழமை காலை 8.30 மணிக்கு நெடுந்தீவு மகாவித்தியாலய மைதானத்தில் ஆரம்பமாகி இறுதிப் போட்டிவரை நடைபெறும் என்பதை நெடுந்தீவுப்பிரதேச சபை விளையாட்டு உத்தியோகத்தர் மயூரன் தெரிவித்துள்ளார். (93)

# முதலாவது வெற்றியை பதிவாக்கியது யாழ். மாவட்டம்

(நுவரெலியா)

பொதுநிர்வாக அமைச்சின் செயலாளர் வெற்றிக்கிண்ணத்திற்காக மாவட்ட அணிகளுக்கு இடையே நடத்தப்பட்ட மென்பந்து கிரிக்கெட் போட்டியில் யாழ். மாவட்ட அணி தனது முதலாவது வெற்றியைப் பெற்றுள்ளது.

பொதுநிர்வாக அமைச்சின் ஏற்பாட்டில் நுவரெலியா பொது விளையாட்டு மைதானத்தில் கடந்த சனிக்கிழமை நடைபெற்ற போட்டியில் யாழ். மாவட்ட அணியும் கம்பஹா மாவட்ட அணியும் மோதின.

முதலில் துடுப்பெடுத்தாடிய யாழ். மாவட்ட அணி 47 ஓட்டங்களையும் பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய கம்பஹா மாவட்ட அணி 43 ஓட்டங்களையும் பெற்றன. இந்த நிலையில், யாழ். மாவட்ட அணி 04 ஓட்டங்களினால் வெற்றி பெற்றது.

மாவட்ட செயலகங்கள் மற்றும் பிரதேச செயலகங்களின் கணக்காளர்கள், பிரதேச செயலாளர்கள், உதவித் திட்டமிடல் பணிப்பாளர்களைக் கொண்ட அணிகளாக இருந்ததுடன், பெண்களையும் அணியில் உள்வாங்கி இந்தப் போட்டி நடைபெற்றது.

விளையாட்டுச் செய்திகள்

# எம்.ஆர்.எவ். பயிற்சி மையத்தின் புதிய இயக்குநராக மெக்ராத்

(சென்னை)

சென்னையில் உள்ள எம்.ஆர்.எப். வேகப்பந்து பயிற்சி மையத்தின் புதிய இயக்குநராக அவுஸ்ரேலிய அணியின் முன்னாள் வேகப்பந்து வீச்சாளர் கிளென் மெக்ராத் நியமிக்கப்பட்டுள்ளார். இந்த மையம் தொடங்கப்பட்டதில் இருந்து 25 ஆண்டுகளாக மையத்தின் இயக்குநர், தலைமைப் பயிற்சியாளராக இருந்த அவுஸ்ரேலிய வீரர் டெனிஸ் லில்லி, அப்பொறுப்பில் இருந்து விடைபெற்றார். புதிய இயக்குநர் மெக்ராத்தை, லில்லி அறிமுகம் செய்து வைத்தார். டெனிஸ் லில்லி போன்ற தலைசிறந்த வேகப்பந்து வீச்சாளர் செய்த பணியை அவரைப் போலவே என்னால் சிறப்பாகச் செய்ய முடியுமா என்று கேள்வி எழுகிறது. எனினும் என்னால் முடிந்த அளவுக்கு சிறப்பாகப் பணியாற்றுவேன். இப்பொறுப்பு வழங்கப்பட்டது எனக்கு கிடைத்த கௌரவமும் கூட. சிறந்த வேகப்பந்து வீச்சாளர்களை உருவாக்கி சர்வதேச அளவில் கிரிக்கெட்டின் வளர்ச்சியில் எம்.ஆர்.எப். பயிற்சி மையம் முக்கிய பங்காற்றியுள்ளது என்று மெக்ராத் தெரிவித்தார்.



கட்டப்பிராய் சரஸ்வதி முன்பள்ளி விளையாட்டு விழா கடந்த 2ஆம் திகதி முன்பள்ளி நிலைய பழைய மாணவர் சங்கத் தலைவர் மயூரன் தலைமையில் வெகுசிறப்பாக நடைபெற்றது. இதில் சிறார்களின் பல விளையாட்டு நிகழ்வுகள் இடம்பெற்றன. இப்போட்டி நிகழ்வின் பிரதம விருந்தினராக ஈ.பி.டி.பி. யாழ். மாவட்ட. அமைப்பாளர் கமலேந்திரன் கலந்து கொண்டார். மற்றும் வலி.கிழக்கு பிரதேச சபையின் எதிர்க்கட்சித் தலைவரும் ஈ.பி.டி.பியின் கோப்பாய் பிரதேச அமைப்பாளருமான இ.ஐங்கரன், யாழ்.வலய முன்பள்ளி உதவிக்கல்விப் பணிப்பாளர் க.விமலநாதன், சுன்னாகம் யூனியன் இன்சுரன்ஸ் முகாமையாளர் அ.அன்ரன்ஜெனோஜன் உட்பட பலரும் கலந்து கொண்டனர்.

# டொனால்ட் றீகன் ருவென்ரி – 20 சென்றலைட்ஸ், ஓல்ட்கோட்ஸ் வெற்றி

(யாழ்ப்பாணம்)

நியூஸ்ரார் விளையாட்டுக்கழகம் நடத்தும் டொனால்ட் றீகன் ஞாபகார்த்த மாபெரும் ருவென்ரி - 20 கிரிக்கெட் தொடரின் முதல் சுற்று ஆட்டங்களில் சென்றலைட்ஸ் வட்டுக்கோட்டை ஓல்ட்கோட்ஸ் அணிகள் வெற்றிபெற்றன.

யாழ். மாவட்டத்திலுள்ள முன்னணி அணிகள் பல பங்குகொள்ளும் இப்போட்டித் தொடர் யாழ். இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்று வருகின்றது.

இப்போட்டித் தொடரின் முதல் ஆட்டத்தில் சென்றலைட்ஸ் அணியும் கிறாஸ் கொப்பர்ஸ் அணியும்மோதின.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் ஆடிய கிறாஸ்கொப்பர்ஸ் அணி 20 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 67 ஓட்டங்களைப் பெற்றது. இதில் பிரகலாதன் 17, அஜித் 10, சா்ரங்கன் எட்டு ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் மயூரன் நான்கு, வியாசன் இரண்டு, பிரசாத், சாள்ஸ் தலா ஒவ்வொரு விக்கெட்டை வீழ்த்தினர்.

பதிலுக்கு 68 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய சென்றலைட்ஸ் அணி 12 ஓவர்கள் நிறைவில் மூன்று விக்கெட்டுக்களை இழந்து வெற்றி இலக்கை அடைந்தது. இதில் மதுசன் 28, ஜேம்ஸ் ஜான்சன் 22 ஓட்டங்களை ஆட்டமிழக்காது பெற்றனர். பந்து வீச்சில் பார்த்தீபன் இரண்டு விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

இப்போட்டியின் ஆட்ட நாயகனாக மயூரன் தெரிவானார்.

தொடர்ந்து நடைபெற்ற இரண்டாவது போட்டியில் திருநெல்வேலி மத்திய அணியும், வட்டுக்கோட்டை ஓல்ட்கோட்ஸ் அணியும் மோதின. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் ஆடிய ஓல்ட்கோட்ஸ் அணி 20 ஓவர்கள் நிறைவில் ஆறு விக்கெட்டுக்களை இழந்து 220 ஓட்டங்களைப் பெற்றது. இதில் மதுசன் 7 சிக்ஸர்கள் அடங்கலாக 68 ஓட்டங்களைப் பெற்றார். மற்றும் நிரோஷன் 33, பிரியலக்ஷன் 26 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் அருள்ராஜ், சுவேந்திரன் தலா இரண்டு, தர்விகன் ஒரு விக்கெட்டை வீழ்த்தினர்.

பதிலுக்கு 221 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய திருநெல்வேலி மத்திய அணி 20 ஓவர்கள் நிறைவில் ஐந்து விக்கெட்டுக்களை இழந்து 173 ஓட்டங்களைப் பெற்று தோல்வியடைந்தது. இதில் சுவேந்திரன் 66, லவன் 39 ஓட்டங்களைப் பெற்றனர். மற்றும் நிருஷன் தொடர்ச்சியாக நான்கு ஆறு ஓட்டங்கள் அடங்கலாகப் பெற்று 31 ஓட்டங்களைப் பெற்றார். பந்து வீச்சில் ஜெயசுதன், நிரோஷன், சிறிகுகன், கோபிநாத் தலா ஒவ்வொரு விக்கெட்டை வீழ்த்தினர். இப்போட்டியின் ஆட்டநாயகனாக மதுசன் தெரிவானார்.

இதேவேளை, இப்போட்டி நிகழ்வின் பிரதம விருந்தினராக தொழில்நுட்பக் கல்லூரி அதிபர் ந. யோகராஜன், யாழ். இந்துக் கல்லூரி அதிபர் கணேசராஜா, யாழ். பொலிஸ் உதவிப் பொறுப்பதிகாரி குணசேகர, கிருபா லேணர்ஸ் உரிமையாளர் கிருபாகரன் உட்பட பலர் கலந்து கொண்டு போட்டியைக் கண்டுகளித்தனர்.

இப்போட்டித் தொடரில் வெற்றியீட்டும் அணிக்கு பெறுமதி வாய்ந்த பரிசில்கள் வழங்கப்படும் எனவும், விடுமுறை நாட்களான சனி, ஞாயிறு தினங்களிலேயே ஆட்டங்கள் நடைபெறும் என்றும் போட்டி அமைப்பாளர்கள் தெரிவித்தனர். யாழ். மாவட்டத்திலுள்ள கிரிக்கெட் வீரர்களின் திறமைகளை மேலும் வளர்க்கும் அதேவேளை, அவர்களை அடுத்த நிலை நோக்கி நகர்த்திச் செல்வதே தமது நோக்கம் எனவும் தெரிவித்தனர். (93, 53, 17)

# விவேகமற்றவர்களின் முடிவு

**2009** ஆம் ஆண்டு மே மாதம் 16 ஆம் திகதி எமது இலங்கை மாணவர் கல்வி நிதியத்தின்



செயற்குழுக்கூட்டத்தில் வன்னியில் போரினால் அகதிகளாகி முகாம்களில் அடைபட்ட தமிழ் மக்களின் தேவைகளைக் கவனிப்பதற்காக, எமது அமைப்பின் அனுசரணையுடன் இலங்கையில் இயங்கும் நலிவுற்ற சமூக அபிவிருத்திக்கான தன்னார்வ அமைப்பின் வேண்டுகோளை நிறைவேற்ற, அன்று கூடியிருந்தோம். தினம் தினம் வன்னியிலிருந்து கிடைக்கும் செய்திகளினால் நாம் பதறிக்கொண்டிருந்த வேளையில், நிதியுதவி அனுப்பி பாதிக்கப்பட்டவர்களின் சில அவசர தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக அன்று சந்தித்தோம்.


மறுநாள் திட்டமிட்டவாறு நிதியுதவி அனுப்பினோம்.


செயற்குழுக்கூட்டம், 16 ஆம் திகதி முடிந்து வீடுதிரும்பி, தொலைக்காட்சியில் செய்திகளை அவதானித்துக் கொண்டிருந்தபோது, போர் முடிந்துவிட்டது என்று தொலைபேசி தகவல் ஒன்று வந்தது, முடிந்தது என்றால் எல்லாம் முடிந்தது என்ற அர்த்தம்தான்.

என்னால் நம்பமுடியவில்லை. இலங்கையிலும், லண்டனிலும் சில தமிழ் ஊடகவியலாளர்கள் அந்தச் செய்தியை ஊர்ஜிதப்படுத்த முடியாத தகவல், என்று சொன்னார்கள். நண்பர் நடேசன், தமிழ் நாட்டிலும் இங்கிலாந்திலும், இலங்கையிலும் தொடர்ச்சியாக தொடர்பிலிருந்து, தகவல் அறிந்து ஊர்ஜிதப்படுத்தினார். அதன் பிறகு சில நாட்கள் கழித்து லண்டன் பி.பி.சியில் குமரன் பத்மநாதன் தலைவரின் மறைவை ஊர்ஜிதம் செய்தார். அதுவரையில் மௌனம் காத்த சம்பந்தன் ஐயா, விவேகமற்றவர்களின் முடிவு என்று தீர்ப்பு வழங்கினார் அதே பி.பி.ஸியில்.

**- லெ. முருகபூபதி, அவுஸ்ரேலியா.**

# அரண்மனை ரயில்!








**பா**ரீஸ் நகரின் முக்கிய அடையாளமாக திகழ்வது, வெர்சலீஸ் அரண்மனை. ஒரு காலத்தில், பிரான்ஸின் அரசியல் அதிகார மையமாக, இது இருந்தது. இந்த அரண்மனையில், அறைகளின் எண்ணிக்கை, 2,300. ஜன்னல்கள், 2,153. இது தவிர, ஆயிரக்கணக்கான சிற்பங்கள், ஓவியங்கள் ஆகியவையும், இந்த அரண்மனையை, அழகின் சின்னமாக, அடையாளம் காட்டி வருகின்றன. இந்த அரண்மனையின் பெருமையை நினைவுறுத்தும் வகையில், பிரான்ஸ் தலைநகர் பாரிசில் ஓடும் புறநகர் ரயில் ஒன்றின் உட்புறத் தோற்றத்தை, வெர்சலீஸ் அரண்மனை போன்றே வடிவமைத்து உள்ளனர். பாரீசில் ரயில் போக்குவரத்தை கவனித்து வரும் நிர்வாகமும், வெர்சலீஸ் அரண்மனை நிர்வாகமும் சேர்ந்து, இந்தப் பணியை மேற்கொண்டு உள்ளன. அழகு மிளிரும் சிலைகள், அற்புதமாக வரையப்பட்ட ஓவியங்கள், சிம்மாசனம் போல் வடிவமைக்கப்பட்ட இருக்கைகள் என ரயிலின் ஒவ்வொரு பகுதியும், அச்சு அசலாக, அரண்மனையை நினைவுபடுத்துகின்றன. "இந்த ரயிலில் பயணிக்கும் பயணிகளுக்கு, அரண்மனைக்குள் சென்று வந்த அனுபவம் கட்டாயம் கிடைக்கும்..." என உறுதி அளிக்கின்றனர் ரயில்வே அதிகாரிகள்.

# உயிரணுவைச் சேமிக்கும் பாம்பு!



**பொ**துவாக எந்த ஒரு உயிரினமும் கலவியில் ஈடுபட்டு ஆணின் உயிரணு மூலமாக கருத்தரிப்பதே இயற்கை. ஆனால் இதற்கு முரணாக சிலவகை பல்லிகள், பாம்புகள் போன்றவை ஆணின் உயிரணு இல்லாமல் - அதாவது, கலவியில் ஈடுபடாமலேயே கருத்தரிப்பதுண்டு. இதனை Virgin Birth என்பார்கள். ஆனால், இதையும் தாண்டி இன்னொரு விநோதமான கர்ப்பத்தை சமீபத்தில் கண்டறிந்திருக்கிறது விஞ்ஞான உலகம். ஆம், கிட்டத்தட்ட ஐந்து வருடங்களுக்கு முன்பு அமெரிக்காவின் புளோரிடா மாகாணத்திலிருந்து பிடிக்கப்பட்ட ஒரு வகை விரியன் பாம்பு, தற்போது 19 குட்டிகளை ஈன்றுள்ளது. இதில் ஆச்சரியம் என்னவென்றால், இந்த ஐந்து வருடங்களாக தனித்து வைக்கப்பட்டிருந்த இந்தப் பாம்பு, எந்த ஒரு ஆண் பாம்புடனும் உறவு கொண்டிருக்கவில்லை.

பிறகெப்படி கரு உண்டானது என்று ஆராயக் கிளம்பினார்கள், வடக்கு கரோலினா பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த ஆராய்ச்சியாளர்கள். முதலில், ஆணின் உயிரணு இல்லாமல் கருத்தரிக்கும் "வெர்ஜின் பேர்த்"தாகத்தான் இது இருக்கும் என்று கருதப்பட்டது. ஆனால், பிறந்திருக்கும் குட்டிகளை டி.என்.ஏ பரிசோதனைக்கு உட்படுத்தியபோது, தாய்ப் பாம்பின் டி.என்.ஏவோடு இன்னொரு ஆண் பாம்பின் டி.என். ஏவும் அவற்றிடம் கலந்திருப்பது தெரிய வந்துள்ளது. அப்படியென்றால் ஆண் பாம்பின் உயிரணு இல்லாமல் குட்டிகள் பிறக்கவில்லை. அந்த உயிரணு எங்கிருந்து வந்தது என்று ஆராய்ந்திருக்கிறார்கள் விஞ்ஞானிகள். அப்போதுதான் பல புதிய தகவல்கள் கிளம்பியுள்ளன. அதாவது, குறிப்பிட்ட அந்த விரியன் பாம்பு, ஒரு முறை ஆண் பாம்போடு உறவு கொண்டால் போதும்.

ஆணின் உயிரணுவை பல நாட்களுக்கு தன் உடலிலேயே பாதுகாப்பாக சேமித்து வைத்துக் கொள்ளும் திறன் அதற்கு இருக்கிறது. அதன்பின் எப்போது தனக்கு கருத்தரிக்க ஆர்வம் இருக்கிறதோ, அப்போது கருவை அதுவே உருவாக்கிக் கொள்கிறது. கிழக்கு டயமண்ட் பேக் விரியன் என்று அழைக்கப்படும் இந்த ஒரு வகைப் பாம்புதான் இப்படியா? இல்லை, இன்னும் நிறைய விலங்குகள் இந்த சேமிப்பு முறையைப் பயன்படுத்துகின்றனவா என்பது தெரியவில்லை. கிட்டத்தட்ட 5 ஆண்டுகளுக்கு மேல் ஆணின் உயிரணுக்களை அழிந்து போகாமல் வீரியத்தோடு, உடலின் எந்த இடத்தில் வைத்து, எப்படி இவை பாதுகாக்கின்றன என்பதும் புதிராகவே இருப்பதாகச் சொல்கிறார்கள் விஞ்ஞானிகள்.

# காந்தியும் காகமும்!

**டை**ரக்ஷன் என்பது மிகப்பெரிய விஷயம். கதை டிஷ்கஷனில் தொடங்கி படம் வெளியாகும் நாள் வரை ஒவ்வொரு டிபார்ட்மென்டிலும் தனது திறமையைப் பயன்படுத்த வேண்டிய அவசியமும், ஒவ்வொரு டெக்னீஷியனும் என்னென்ன செய்ய வேண்டுமென எடுத்துக் கூறும் சாமர்த்தியமும், ஷொட் பிரிப்பது, கமெரா கோணங்களை நிர்ணயிப்பது போன்ற கடமைகளும் இயக்குநரைத்தான் சேரும்.

இயற்கைக்



காட்சிகளின் எழில், பாத்திரங்களின் உணர்வுகளை மறைத்துவிடக் கூடாது. சூரிய அஸ்தமனம் அழகாகவே இருக்கும். அதற்காக அதை ஒரு தொலைக்காட்சிக்குப் பின்னணியாக வைக்க முடியாது. அழகிய இளம் காதலர்கள் கை கோர்த்துக்கொண்டு ஜாலியாகப் போய்க் கொண்டிருக்கும் காட்சியில் பின்னணியாக சூரிய அஸ்தமனம் இருக்கலாம். இதையெல்லாம் முடிவு செய்வதும் இயக்குநர்தான்.

"நான் "புன்னகை" படம் எடுத்துக் கொண்டிருந்தபோது மெரினா கடற்கரையில் உள்ள காந்தியடிகள் சிலையின் மீது ஒரு காகம் உட்கார்ந்திருந்ததைக் கவனித்து அதை உடனே கமெராவில் பிடித்து வைத்துக் கொள்ளச் சொன்னேன். அந்த அரிதான ஷொட்டை பின்னால் எங்காவது உபயோகித்துக் கொள்ளலாம் என்று எண்ணினேன். அதற்கு ஏற்றாற்போல் "புன்னகை" படத்திலேயே நாகேஷ் சுந்தரராஜனிடம் ஒரு கதையை விவரிப்பது போல ஒரு காட்சி! நாகேஷ் பேசும் வசனத்தில் "தெரிந்தே யாரும் தப்பு பண்ணுவதில்லை" என்று ஓர் இடத்தில் வரும். அந்த இடத்தில் காந்தி தலையில் உட்கார்ந்த காகம் ஷொட்டை இணைத்தேன். அது காந்தியாரின் சிலை என்று தெரிந்தா அந்தக் காகம் உட்கார்ந்தது? இதற்கு நல்ல வரவேற்பு இருந்தது என்றார் இயக்குநர் கே.பாலசந்தர்.

**- 'சினிமாவில் சேருவது எப்படி?' நூலில் சபீதா ஜோசப்**


**ஒ**வ்வொரு கோவிலிலும், ஒரு நாடக அரங்கு அல்லது மேடை இருந்தது. கோவில் திருவிழா[illegible]ளின் போது, அங்கு நாடகங்கள் நடி[illegible]கப் பெற்றன.

மாவெலி நாடகம், தஞ்சை மாவட்டத்திலுள்ள வேதாரண்யத்துக்கு உரியது. இந்நாடகத்தின் தோற்றத்துக்கு காரணமான ஒரு நிகழ்ச்சி, தேவாரத்தில் குறிப்பிடப்படுகிறது.

கோவிலில் இருந்த விளக்கு ஒன்றின் ஒளி குறைவதைக் கண்ட ஒரு எலி, விளக்குத் திரியைத் தூண்டி விட்டது. அப்போது, எலியின் மூக்கை,

**இ**ன்றைய இளைஞர்கள் ஜிம்முக்குப் போய் உடற்பயிற்சி செய்வது பரவலாய்க் காணப்படுவதுதான். ஜிம்மில் வைக்கப்பட் உடற்பயிற்சிக் கருவிகளில் சிலவற்றைப் பார்க்கும்போது சிரிப்புத்தான் வருகிறது. கருவிகளைக் குறைசொல்ல முடியாதுதா ஆனால், வேறு சில கருவி[illegible]ள் நம் கைகளையும் கால்களையும் கவ்வி அசைப்பதைப் பார்க்கும்போதுதான் கேலிக்கூத்தாக இருக்கிறது.

நாமே நம் கைகளையும் கால்களையு அசைத்தால் நிகழும் இரத்த ஓட்டம் அதிகப் பயனுள்ளது என்பதை உணரப் பெரிய அறிவொன்றும் தேவையில்லை. தெம்பின்றித் தளர்ந்து போய் கை, கால்களை அசைக்கவே முடியாமல் இருக்கும் ஒருவருக்கு உடலில் இரத்த ஓட்டம் ஏற்படச் செய்ய வேண்டுமெனில், அவற்றைப் பிடித்து மற்றவர்களோ அல் கருவிகளோ அசைக்கலாம். அதில் சிரிப் ஒன்றும் இல்லை. ஆனால் கால்கள் ஒழுங்கான நிலையில்



இருக்கின்றவர்கள் தாங்களாகவே அவற்றை அசைத்து அவற்றில் இரத்த ஓட்டம் ஏற்ப கொள்ளுவதற்குப் பதிலாக, அவை பிறர கருவிகளாலோ அசைக்கப்படுவது என்பது சிரிப்புக்கு உரியதுதான்.

குண்டு உடல் இளைப்பதற்கு மிக எ

# வெங்காய மகிமை!



**1664** இல் இங்கிலாந்தில் பிளேக் நோய் பரவியபோது ஆயிரக்கணக்கான மக்கள் இறந்தனர். ஆனால் வெங்காயமும் பூண்டும் விற்ற கடைக்காரர்களை இந்த நோய் அணுகவில்லையாம்.

# பாலியல் சொற்களும் குழந்தைகளும்

- அந்தாரா -



முதல்முதலாக இந்த கெட்ட வார்த்தை எப்போது எனக்குப் பரிச்சயமானது என்று தெரியவில்லை. ஆனால் இந்த கெட்ட வார்த்தைகள் எல்லாம் பெண் உறுப்பு என்கிற புரிதல் காலம் தாழ்த்தியே வந்தது. அதுவரை பெரியவர்களால் மறுக்கப்பட்டு மீறியபோது அடி வாங்கிய அந்தச் சொற்கள் கிளுகிளுப்பூட்டுபவையாகவும் மீற சொல்வதாகவுமே இருந்து வந்தன. நான் 6-7 வயதாக இருந்த போது என் வயதொத்த நண்பிகளுடன் சேர்ந்து விளையாடுகிற விளைய்யாட்டுக்கள் பூடகமானவை. அவை இந்தச் சொற்களை உள்நுழைப்பவையாக இருக்கும். அந்த விளையாட்டில் உடம்பில் தெரிகிற உறுப்புகளை ஒருவர் காட்டுவார் அதற்கு மற்றவர்கள் "டை" சேர்க்க வேண்டும்.

கண் என்று விளையாடுபவள் சொல்வாள் விளையாட்டில் கலந்து கொள்பவள் "கண்டை" என்பாள் இப்படியே வாய்டை மூக்குடை என்றபடி கடைசியாக மிக மிக சாதுவாய் முகத்தை வைத்துக் கொண்டு புண்ணைக் காட்டுவாள் விளையாடுபவள் அந்த இடத்துக்கு வரும் போது தான் சொல்ல வருகிற சொல் என்ன என்பதையே மறந்து அந்த சொல்லை சொல்லி விடுவாள் மற்றவள். அவள் கெட்ட வார்த்தை சொன்னதாய் அம்மாட்டை சொல்லப்போறன் என்று பயமுறுத்தியபடியிருப்பாள் விளையாட்டை தொடக்கியவள். இதுதான் விளையாட்டு. யாரிந்த விளையாட்டைக் கண்டுபிடித்தார்கள் என்று ஞாபகமில்லை ஆனால் இந்த விளையாட்டு பெண்களாலே விளையாடப்பட்டது. ஏன் இந்த விளையாட்டில் ஆண்களை இணைத்துக் கொள்ளவில்லை என்பது இன்று வரை எனக்கு புதிர்.

இந்த வார்த்தைகளை ஆங்கிலத்தில் சொன்ன போது சாதாரணமாய் கடந்து போவதுண்டு. ஆனால் தமிழில் சொல்லும் போது பயங்கரக் கோபம் வரும். சாதாரணமாக சொல்லியபடி கடந்து போகும் ஆண்களைக் காண்கையில் இணைந்து நடக்கக் கூட முடிவதில்லை. ஒரு முறை இப்படி தூசணம் பேசுகிற ஒருவனின் தொலைபேசிக்கு அநாமதேயமாய் அழைத்து அவன் உறுப்புக்களை சொல்லி திட்டித் தீர்த்த பின்தான் கோபம் அடங்கியது ஒரு மாற்றுச் சொல் கிடைத்த சந்தோசத்தில். ஒரு கன்னத்தை அறைந்தால் மறுகன்னத்தில் அறை என்பதற்கிணங்க இவை புழக்கத்தில் வரவேண்டும். தொடர்ச்சியாய் இப்படி செய்யின் இந்தச் சொற்களை உபயோகிக்கிறவர்கள் அதன் அர்த்தத்தை உணரக் கூடும்.

---

விளக்குத் தீ சுட்டு விட்டது. அந்த எலிக்கு, இறைவன் மூவுலக ஆட்சியையும் வழங்கி, அதைச் சக்கரவர்த்தியாகப் பிறக்கச் செய்தார். கார்த்திகை மாதத்தில், தீபம் ஏற்றி வைப்பவர்களுக்காக மாவெலி வரம் கேட்டார்.

இந்நிகழ்ச்சிகளைச் சித்தரிக்கும் மாவெலி நாடகத்தை, தேவதாசிகள் நடித்து வந்தனர். தேவதாசி ஒழிப்புச் சட்டத்துடன் இந்த நாடகமும் வழக்கொழிந்து விட்டது.

நீலகிரி மாவட்டத்து இருளர்களில் பெரும்பாலானோர் படிக்காதவர்கள். கோவில் திருவிழாக்களில் அவர்கள் நாடகங்களை நடத்துவர். வீட்டுத் திண்ணை தான் நாடக அரங்கு. அரிக்கன் விளக்கு ஒளியில், திரை எதுவும் இல்லாமல், புராணக் கதைகளை நடித்துக் காட்டுவர்.

## மரபும் பண்பாடும்




இவற்றில் நடிப்பவர்கள், நாடக ஆசிரியர் ஒருவரிடம் பயிற்சி பெற்று, பல நாட்களுக்கு ஒத்திகை பார்ப்பர். மகாபாரதத்தில் அர்ச்சுனன் தவத்தை நடிப்பதில், அவர்கள் ஆர்வம் மிகுந்து காணப்படுகின்றனர். அர்ச்சுனனின் தவத்தைக் கலைக்கும் பெண்ணின் அழகை, உறுப்பு உறுப்பாக, கொச்சை மொழியில், அடைமொழிகளுடன் விரிவாக வர்ணிப்பது அவர்கள் வழக்கம். பெண்கள் இதை மிகவும் கூர்ந்து கேட்டு மகிழ்வர்.

- 'சோமலெ' எழுதிய, 'மரபும், பண்பாடும்' நூலிலிருந்து...

---

# ஜிம்முக்குப் போகாமலே...

- ஜோதிர்லதா கிரிஜா -



உடற்பயிற்சிகள் உள்ளன. தொப்பை குறைய வேண்டுமா? கால்களை நெருக்கமாய் வைக்காமல் சற்றே இடைவெளி விட்டு நேராக நின்று கொண்டு மூச்சை உள்ளிழுத்த பிறகு, இரண்டு கைகளையும் உயரே தூக்கி, முதுகுப்புறமாய்ச் சற்றே வளைத்துப் பின் அவற்றை மெல்லக் கீழே கொண்டுவந்து இரண்டு கைகளாலும் இரண்டு கால்கட்டை விரல்களைத் தொடவும். இவ்வாறு குனியும்போது மூச்சை மெல்ல வெளியேற்ற வேண்டும். பின் பழைய நிலைக்கு மெல்ல இரு கைகளையும் உயர்த்தவும். இப்போது மூச்சை உள்ளிழுக்க வேண்டும். இவ்வாறு தொடக்கத்தில் பத்து முறை செய்யலாம். போகப்போக, எண்ணிக்கையை அதிகரிக்கலாம். உடற்பயிற்சி செய்கையில், உடலை மிகவும் தளர்வாகவும் வைத்துக்கொள்ளக் கூடாது. அளவுக்கு மீறிய இறுக்கத்திலும் வைத்துக்கொள்ளக் கூடாது. நடுநிலையான இறுக்கத்துடன் உடல் இருக்க வேண்டும்.

இதேபோல் நின்றுகொண்டு இரண்டு கைகளையும் பக்கவாட்டில் நீட்டி, அதன் பின் குதிக்கால்களை உயர்த்திக்கொண்டு முன்னங்கால்களால் நின்று, மூச்சை உள்ளிழுக்க வேண்டும். பிறகு குதிக்கால்களைப் பழைய நிலைக்குக் கொண்டு வந்தவாறே, மூச்சை வெளியேற்றி, கைகளை அவை இணையாக இருக்கும்படி முன்புறமாக நீட்ட வேண்டும். மீண்டும் பக்கவாட்டில் மூச்சிழுத்து நிறுத்திப் பின், முன் சொன்ன பழைய நிலைக்குத் திரும்ப வேண்டும். இதையும் சிறுகச் சிறுக அதிகரித்துக்கொண்டே போகலாம். இது நுரையீரலை வலுவாக்கும். இடக்காது முனையை வலக்கையாலும், வலக் காது முனையை இடக்கையாலும் பற்றியபடி - இவ்வாறு இரு காதுமுனைகளையும் பிடித்துக்கொண்டே - உட்கார்ந்து எழ வேண்டும். இதையும் கொஞ்சம் கொஞ்சமாய் அதிகமாக்கலாம். இந்த உடற்பயிற்சி இடை, தொடை, கால்தசைகள், கைகள் ஆகியவற்றை வலுப்படுத்தும். நாம் தோப்புக்கரணம் என்று சொல்லும் இதை அமெரிக்காவில் அண்மைக்காலமாய் உடற்பயிற்சி நிலையங்களில் புகுத்தியிருக்கிறார்கள். இதனால் கண்பார்வைக் கோளாறுகள் நீங்குவதாய்க் கண்டுபிடித்திருக்கிறார்கள்.

இவற்றைச் செய்ய முடியாத முதியோர்க்கு மட்டுமே நடைப்பயிற்சி சிறந்ததாகும். முடிந்த அளவுக்கு விரைந்த நடை நல்லது. "ஜொகிங்" எனப்படும் நெளிந்த நடை யாருக்குமே உகந்ததன்று என்பதைச் சமீபத்தில் அமெரிக்க மருத்துவர்கள் கண்டறிந்து சொல்லியிருக்கிறார்கள். சில மருத்துவமனைகளில், முதுகுவலி, இடுப்பு வலி, சுளுக்கு ஆகியவற்றுக்கு ஆளானவர்களின் பழக்கவழக்கங்கள் பற்றிக் கேட்டறிந்த மருத்துவர்கள் அவர்களில் 90 சதவீதத்தினர் "ஜொகிங்" செய்பவர்கள் என்பதைக் குறித்துக்கொண்டு பிறகு இவ்வாறு அறிவித்துள்ளனர்.

காலையில் படுக்கையை விட்டு எழுந்ததும், 5 அல்லது 6 கோப்பைத் தண்ணீர் பருகினால், உடனுக்குடனாக வயிறு காலியாகிவிடும். மலச்சிக்கலே அனைத்து உடல் சிக்கல்களுக்கும் அடிப்படை என்று சொல்லப்படுகிறது. "வயிறு கெட்டால் வாழ்வு கெடும்" என்பது தமிழ் மூதுரை.

இப்போது கண்டவர்களெல்லாம் ஜிம்மை நடத்துவதால் ஆபத்துகள் அதிகம் என்று சொல்லலாயிற்றே ஒழிய, ஜிம்மை ஒட்டுமொத்தமாய்க் குறைத்துப் பேசுவதாக நினைக்க வேண்டாம். எந்த ஜிம்மிலும் டாக்டர் ஒருவரும் இருப்பதாய்த் தெரியவில்லை.

ஜிம்மால் நமக்கு ஆகும் ஆயிரக்கணக்கான ரூபா செலவை நம் வீட்டிலேயே செய்யக்கூடிய எளிய பயிற்சிகள் வாயிலாக மிச்சப்படுத்தலாமே!

---

# சினிமா சினிமா



() தெலுங்கு நடிகர் ராணா - த்ரிஷா நட்பு, காதலாகி விரைவில் திருமணத்தில் முடியலாம் என்கிறது அவர்களுக்கு நெருங்கிய வட்டாரம். த்ரிஷா தரப்பில் எப்போதோ ஓ.கே. ஆகிவிட்டது. ஆன்றல் ராணா குடும்பத்தார்தான் யோசனையில் உள்ளனராம். இந்தியத் திரையுலகின் உயரிய விருதான தாதா சாகேப் பால்கே விருது பெற்ற டி.ராமாநாயுடுவின் பேரனும் தெலுங்கின் முன்னணி ஹீரோக்களான நாகார்ஜுனா, வெங்கடேஷ் ஆகியோரின் மருமகனுமான ராணா குடும்பத்தின் சொத்து மதிப்பு சுமார் ரூபா 4500 கோடி என்றால்... யோசனை பலமாகத்தானே இருக்கும்.

() சாய்பாபாவின் தீவிர பக்தராகிவிட்ட அஜீத், புத்தரின் போதனைகள் அடங்கிய புத்தகத்தையும் அடிக்கடி படித்து வருகிறார். அதுபற்றி ஆன்மிகவாதிகளிடமும் நிறையவே விவாதித்து வருகிறாராம். சூப்பர் ஸ்டார் வழியில் அல்டிமேட்!



() ஒளிப்பதிவாளர் ரவி கே.சந்திரன் "யான்" படத்தின் மூலம் இயக்குநராகிறார். இதில் ஜீவா கதாநாயகனாக நடிக்கிறார். நீண்ட தேடுதல் வேட்டைக்குப் பிறகு காஜல் அகர்வாலை கதாநாயகியாக ஒப்பந்தம் செய்துள்ளனர்.

() கே.பாக்யராஜ் இயக்கி நடித்து பெரும் வெற்றி பெற்ற படம் "முந்தானை முடிச்சு". இந்தப் படத்தை மீண்டும் ரீமேக் செய்யவுள்ளார் பாக்யராஜ். அதில் நடித்த ஊர்வசி இதிலும் நடிக்கிறார். புதிய பதிப்புக்கு "மாப்பிள்ளை விநாயகர்" என்ற பெயர் வைத்திருக்கிறார் பாக்யராஜ்.



() "வேட்டை" படத்தில் ஓரளவு கவர்ச்சி எல்லையைத் தாண்டிய அமலாபால், தெலுங்கில் ரவி தேஜாவுடன் நடிக்கும் படத்தில், ஒரு பாடலில், மழையில் நனைந்தபடி நடித்துள்ளார். அதோடு, நீச்சலுடையிலும் கலக்கியிருப்பதால், இந்தப் படத்துக்கு பின், ஆந்திராவில், அமலாவின் ஆதிக்கம்தான் என்கின்றனர்.

() திருமணம் நடைபெறவில்லை என்றாலும் மீரா ஜாஸ்மின் தனது காதலர் மாண்டலின் ராஜேஷுடனும், அனன்யா தனது காதலர் ஆஞ்சநேயனுடனும் "லிவிங் டுகெதர்" பாணியில் வாழ்ந்து வருகிறார்கள்.



() தாண்டவம் படத்தில் தன்னுடன் நடித்த அனுஷ்காவையும் எமி ஜாக்ஸனையும், தான் நடிக்கும் படங்களில் மட்டுமல்லாமல் தனக்கு வேண்டியவர்களின் படங்களிலும் ஒப்பந்தம் செய்ய சிபாரிசு செய்கிறாராம் விக்ரம்.

# கிளிநொச்சியில் கால்நடை அபிவிருத்தியும் அதன் தேவைப்பாடுகளும்

மீள் குடியேற்றத்தின் பின்னரான அபிவிருத்திகள் என்பது பல கோணங்களில் ஆராயப்படுகிறது அவதானிக்கப்படுகிறது. மக்களின் வாழ்வாதார மேம்பாடு என்பது ஒவ்வொருதுறைகளும் மேம்பாடு அடையும்போதுதான், ஒட்டுமொத்தமாக மேம்பட முடியும். வன்னியில் விவசாயம், கால்நடை என்பன இரு கண்களாக பார்க்கப்படுகின்றன. இவை கணிசமான அளவில் முன்னேற்றம் காணும்போது இதனை நம்பி வாழ்கின்ற முயற்சியாளர்கள் பொருளாதார ரீதியில் பயன் பெறுகின்றனர். அத்தோடு இவற்றைத் தேவைக்காகப் பெறுகின்ற ஒவ்வொருவரும் பயன்பெறுவர். உதாரணமாக, கோழி வளர்ப்பில் ஈடுபடுகின்ற 10 வீதமானோர் உற்பத்தி செய்கின்ற முட்டையைப் பயன்படுத்துவதற்கு 90 வீதமானோர் காத்திருக்கின்றனர்.

2002 காலப்பகுதியில் 70,000 வகையான கால்நடைகள் கிளிநொச்சி. மாவட்டத்தில் இருந்ததாகவும், பின்பு 2008இல் இது 51,000 ஆக வீழ்ச்சி கண்டு தற்போது போருக்குப் பின் 35,000 ஆகியிருப்பதாக கால்நடை வைத்திய அதிகாரி பணிமனை தகவல் தெரிவிக்கிறது.

போர்க் காலங்களில் கால்நடை வளர்ப்பில் மக்கள் ஆர்வம் கொண்டிருக்காமை, உற்பத்திகளைச் சந்தைப் படுத்த முடியாதிருந்தமை இந்த வீழ்ச்சிக்கு காரணங்களாக இருக்கலாம். போரின் பின்னரான கால்நடை அபிவிருத்தியில் அரசு ஒரு இலக்குடன் செயற்பாடுகளை ஆரம்பித்திருக்கிறது. அது 2016ஆம் ஆண்டளவில் பால் உற்பத்தியில் தன்னிறைவு அடைவதுதான். இன்னும் நான்கு வருடங்களில் பால் உற்பத்தியில் தன்னிறைவு அடைவதற்கு பல்வேறு முனைகளிலான நிதியீட்டங்களையும் இந்த கால்நடை அபிவிருத்திக்கு இனங்காண வேண்டிய தேவைப்பாடுகளும் இருக்கின்றன.

குறிப்பாக, இப்பொழுது கிளிநொச்சி மாவட்டத்தில் இருக்கின்ற 35,000 கால்நடைகளின் எண்ணிக்கையை மேலும் கணிசமான அளவில் அதிகரிக்க வேண்டிய தேவை இருக்கிறது. ஏற்கனவே இருக்கின்ற பண்ணையாளர்களை ஊக்குவித்தல், புதிய பண்ணையாளர்களை உருவாக்குதல், அவர்களுக்குப் பயிற்சிகளை ஏற்படுத்துதல் போன்ற தேவைப்பாடுகளும் இருக்கின்றன. திறந்தவெளி கால்நடை வளர்ப்பினூடாக பல்வேறு வளர்ப்பு சிரமங்கள் எதிர்நோக்கப் படுவதால் பலர் கால்நடை வளர்ப்பில் ஆர்வம் கொண்டிராத நிலைமை இருக்கிறது.

90களுக்கு முற்பட்ட காலங்களில் கிளிநொச்சியில் ஒரு பால் பதப்படுத்தும் நிலையமே இயங்கியது. இதனூடாக பல பண்ணையாளர்கள் மிகுந்த நன்மையடைந்ததோடு பலருக்குத் தொழில் வாய்ப்புகளும் ஏற்படுத்தப் பட்டிருந்தன.

போரின்போது இவை செயலிழந்தன.



கிளிநொச்சியிலுள்ள சில கிராமங்களில் பால் உற்பத்தி இருக்கின்ற போதிலும் இதற்கான சரியான சந்தை வாய்ப்பு இனங்காட்டப்படாததன் காரணமாக பால் கறக்கப்படாமலே விடப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. இது தொடர்பான சந்தைப்படுத்தல் அல்லது பதப்படுத்தல் நிலையத்திற்கான ஏற்பாடுகள் பிரதேச செயலகப்பிரிவுகளில் இயங்குவதற்கான வழிவகைகள் மேற்கொள்ளப்படுமாயின் பால் உற்பத்தியின் அளவை அதிகரிக்க முடியும். அத்துடன் பால் பொருள் உற்பத்திகள் தொடர்பிலான குடிசைக் கைத்தொழில் செயன்முறைகள் ஊக்குவிக்கப்படல் வேண்டும்.



| | கரைச்சி | கண்டாவளை | பூநகரி | பளை |
|---|---|---|---|---|
| மாடு | 11.700 | 15.250 | 8150 | 3250 |
| எருது | 50 | 250 | 650 | - |
| பன்றி | - | - | 94 | - |
| ஆடு | 4200 | 3100 | 2200 | 3500 |
| கோழி | 40,000 | 39.000 | 25.000 | 20.000 |

- சிவகன்

மாவட்டத்தின் தன்னிறைவை நோக்கி பால், முட்டை உற்பத்திகள் மேம்பட வேண்டும். மக்களின் மீள்குடியேற்றத்தின் பின்னரே வன்னிப் பிரதேசத்தில் ஒவ்வொரு துறையையும் மேம்படுத்த வேண்டியுள்ளதால் ஒவ்வொரு துறைக்குமான நிதியீட்டங்களை பெரியளவில் செய்ய வேண்டிய தேவைப்பாடுகள் இருக்கின்றன.

வன்னியில் முட்டையை இப்பொழுது சாதாரணமாக இலகுவாகப் பெற்றுக் கொள்ளக் கூடிய வாய்ப்புகள் இருக்கின்றது. ஆனால், பாலையோ, பால் உற்பத்திகளையோ இலகுவாகப்பெறும் வாய்ப்பு இல்லை. தென்னிலங்கையிலிருந்து கொண்டுவரப்படுகின்ற உற்பத்திகளைத் தவிர உள்ளூர் உற்பத்திகளைப் பெறுவது சிரமமாகவே இருக்கின்றது.

ஆட்டிறைச்சிக்கு வன்னியில் தட்டுப்பாடு நிலவி வருகின்றது. உற்பத்தி குறைவாக காணப்படுகின்றமையால் விலையும் அதிகரித்திருக்கின்றது. ஆட்டிறைச்சி கிலோ ஒன்று 600 - 700 ரூபா வரை இப்பொழுது விற்பனையாகின்றது. சில அரச சார்பற்ற நிறுவனங்கள் ஆடு வளர்ப்பை ஊக்குவிக்கின்றன என்றாலும் மாவட்ட இலக்கை கருத்திற் கொண்டு தூரநோக்கு சிந்தனையுடன் இதன் அபிவிருத்தி மேற்கொள்ளப்பட வேண்டும்.

பண்ணையாளர்கள் தரமான உள்ளீடுகளைப் பெறுவதில் சிரமங்களை எதிர்நோக்குவதால் உற்பத்திகளில் ஒரு தளம்பல் நிலை இருக்கின்றது. இது தொடர்பில் பண்ணை அமைப்பு, முதலுதவி சிகிச்சை போன்றவற்றில் சமகால நவீன தொழில்நுட்பத்துடன் கூடிய விழிப்புணர்வு பயிற்சிகள் பண்ணையாளர்களுக்கு அவசியமானது.

புதிய இன விருத்திகள் மேற்கொள்ளப்பட வேண்டும். இந்தத் துறையின் மேம்பாட்டுக்கு ஒத்துழைக்கத் தயாராக இருக்கும் அரச சார்பற்ற நிறுவன உதவிகள் பெற்றுக்கொள்ளப்பட வேண்டும். கால்நடை வளர்ப்புக்குப் பக்கபலமாக இருக்கின்ற துணை அமைப்புகளான (Lifeo) கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கங்களின் குறைகள் களைந்து ஊக்குவிக்கப்படல் வேண்டும்.

# நமது கடமையும் - உரிமையும்

பணி.அ.றொபேட்
ஆண், பெண் விழிப்புணர்வு
நூல் ஆசிரியர்

அநியாயங்கள் நடக்கும்போது அதை எதிர்த்து நின்று சாதுரியமான வகையில் கோபத்தை வெளிப்படுத்தி நியாயமான சூழ்நிலைகளை உருவாக்கு வதற்கு நமக்கு கடமை உண்டு.சில வேளைகளில் குறைவான உண்மைகள், அதிகமான அநியாயங்கள் பின்னிப்பிணைந்து பொருத்தமாகத் தெரிவது மனோதத்துவ கொடுமையாகும். அதை எதிர்த்து நிற்பது நமது கடமை ஆகும்.

பாதி உண்மைகள் எப்போதும் கொடுமைகளைப் பொறுத்துக்கொண்டு இணங்க வைத்துவிடும். எனவே உண்மையும் பொய்யும் சேர்ந்த கலப்பு மதிப்பீடுகளில் இருந்து உண்மையைப் பிரித்து எடுக்க வேண்டும். பிரித்து எடுப்பது நமது கடமை.

அநியாய அடக்குமுறைகளை கண்டும் காணாது, விட்டு விடுவது அவர்களுக்கு ஒத்துழைப்பது போலாகும். அந்த அடக்குமுறையால் பாதிக்கப்பட்டவர்களுக்கு ஏதோ பரிதாப உணர்ச்சியையும், போலியான பாதுகாப்பையும் கொடுத்து திருப்திப்படுத்துவதும் அடக்குமுறைக்குச் சமம். எனவே அடக்குமுறை அதிகாரங்களுக்கு எதிர்ப்புக்குரல் கொடுப்பது நமது கடமை.

நன்னெறியைச் சாராத பழக்கவழக்கங்களையும், மூடத்தனத்தையும் எதிர்த்து நிற்பது நமது கடமை.

பிரச்சினையிலிருந்து தப்பிப்பதற்காக பயங்கரமான கொடிய பழக்கவழக்கங்களை நியாயப்படுத்துவது மனோதத்துவ கொடுமையாகும். அதனடிப்படையில் எழும் ஒற்றுமை என்னும் மாயையை எதிர்ப்பது நமது உரிமை.

சட்டபூர்வமாகவோ, அதிகாரபூர்வமாகவோ சமுதாய நலன்களை கெடுக்கக்கூடிய யுக்தியை கையாளும் அதிகாரியை எதிர்த்து நிற்பது நமது உரிமை.

தவறுகளைச் சுட்டிக்காட்டுவதற்காக சரியான பக்கம் சாய்ந்து நின்று 'செய்வது தவறு, செய்வதை நிறுத்து' என்று கண்டித்து சொல்வதற்கு நமக்கு உரிமை உண்டு.

நன்னெறிக்குப் புறம்பான பழக்கவழக்கங்கள் உடையவர்களை சமுதாயத்தில் சந்தித்தால் அவர்களை சுமுகமாகத் திருத்த நமக்கு உரிமை உண்டு.

நாம் மற்றவர்களுக்கு ஆறுதல் தருவது மற்றவர்களோடு 100 வீதம் ஒத்துப்போவது என்பது அர்த்தமல்ல. கண்மூடித்தனமான அவர்களின் கருத்தை ஏற்றுக்கொள்வதும் தேவையில்லை. நாம் சரிவர உணர்ந்து கொள்ளும் கருத்துக்களில் நிலை நிற்பது நமது உரிமை ஆகும்.

## கல்வி

☆ கல்வியின் தளமாக தாய்மொழி அமைதல் வேண்டும்.

☆ மொழிக் கல்வி வேறு. மொழி வழிக் கல்வி வேறு.

☆ மொழியும் கணிதமும் அறிவுப் பாடங்கள் மட்டுமன்றி மற்ற அறிவு துறைகளுக்கும் வழி வகுக்கும்.

☆ நம் சின்னஞ் சிறார்களுக்கு நல்ல தாய் மொழிக் கல்வியையும், தாய்மொழி வழிக் கல்வியும் தருவது. அவர்களது அறிவுப் பெருக்கத்துக்கும் நல்ல தன்னுணர்வு, பண்பாட்டுணர்வு வளர்வதற்கும், தடுமாற்றமின்றி தன்னை அடையாளம் காட்டிக் கொள்வதற்கும் வழிவகுக்கும்.

☆ தாய் மொழியில் உறுதியாக அடித்தளம் உருவாகி மாணவர்கள் அதன் வழி பகுத்துச் சிந்திக்கும் ஆற்றல் பெற்ற பின், இரண்டாவது மொழியைக் கற்றால் முதல்மொழியில் வளர்ந்த ஆற்றல்கள் இரண்டாம் மொழிக் கல்விக்கும் உறுதுணை புரியும்.

☆ உண்மைக் கல்வியில் மனிதனது ஆளுமை வளர்ச்சியானது குன்றின் மேலிட்ட விளக்காகி ஒளி வீசும்.

☆ கல்வினால் குழந்தையின் உடல், உள்ளம், மெய்யுணர்வு ஆகியவை முழு ஆற்றல் பெற்று வளர்கின்றன.

☆ ஒவ்வொரு குழந்தையும் தனக்கேயான வேகத்தில்தான் கற்றுக் கொள்ளமுடியும். தனது முயற்சியில் மட்டும்தான் கற்றுக்கொள்ள முடியும்.

☆ கல்வியின் முதன்மையான இலக்கு மாணவர் மத்தியில் தமது சூழல் தொடர்பான பொறுப்புக்களை வளர்ப்பதாக இருக்கவேண்டும்.

☆ சிந்திப்பதற்கான நேரத்தை ஏற்படுத்திக் கொள்வோம். ஏனெனில் அதுவே சிறகடித்துப் பறப்பதற்கான சக்தி.

☆ விளையாடுவதற்கான நேரத்தை ஒதுக்கிக் கொள்வோம். ஏனெனில் அதுவே நோயற்ற வாழ்வின் உன்னத மருந்து.

☆ படிப்பதற்கான நேரத்தைக் கண்டு பிடிப்போம். ஏனெனில் அதுவே இன்பத்தின் பாதை.

☆ அன்பு காட்ட நேரத்தை அனுமதிப்போம். ஏனெனில் அதுதான் மனிதனின் கடமையும் பொறுப்புமாகும்.

☆ சேவை செய்வதற்கான நேரத்தைச் சிந்தித்துப் பார்ப்போம். ஏனெனில் அதுதான் மனித நேயத்தின் மையம்.

☆ சிரித்து மகிழ்வதற்கான நேரத்தை எடுத்துக் கொள்வோம். ஏனெனில் அதுவே இதயராகம். □

# நெல்லியடி, கரவெட்டி சமுர்த்தி வங்கிக்கு முகாமையாளரை நியமிக்கக் கோரிக்கை

(கரணவாய்)

நெல்லியடி, கரவெட்டி சமுர்த்தி வங்கிக்கு இதுவரை நிரந்தரமாக முகாமையாளர் ஒருவர் நியமிக்கப்படாமையால், சமுர்த்தி தேவைகளுக்காக வரும் பயனாளிகள் அவற்றைப் பெற்றுக் கொள்ள முடியாது சிரமங்களுக்குள்ளாவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

முன்னர் இச் சமுர்த்தி வங்கியில் முகாமையாளராக கடமையாற்றிய பொ. குகதாஸன் என்பவர் கடந்த ஜனவரி மாதம் முதல் கோப்பாய் பிரதேச செயலர் பிரிவுக்கு இடமாற்றம் செய்யப்பட்டார்.


இதனை அடுத்து இதுவரை இவ் வெற்றிடத்திற்கு யாரும் நியமிக்கப்படவில்லை இதனால் வங்கிச் செயற்பாடுகள் அங்கு பணிபுரியும் உத்தியோகத் தர்களினாலேயே, சிரமத்தின் மத்தியில் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் சுட்டிக்காட்டப்படுகிறது.

இதேவேளை சமுர்த்தி பயனாளிகள், சமுர்த்தி சேவைகளைத் பெறுவதற்கு நாளாந்தம் சமுர்த்தி வங்கிக்குச் சென்று பயனின்றி திரும்புவதாகவும் பயனாளிகள் தெரிவிக்கின்றனர்.

சமுர்த்தி பயனாளிகளின் நன்மை கருதி, மேற்படி சமுர்த்தி வங்கிக்கு வங்கி முகாமையாளரை நிரந்தரமாக நியமிக்க,உரியவர்கள் நடவடிக்கை எடுக்குமாறு கரவெட்டி பகுதி மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (18)

# மக்களின் அன்றாட பிரச்சினைகளை சிவில் பொலிஸாரூடாக தீர்க்க முடியும்





(யாழ்ப்பாணம்)

மக்கள் தமது அன்றாட பிரச்சினைகள் குறித்து சிவில் பாதுகாப்பு பொலிஸாரிடம் தெரிவிப்பதன் மூலமாகவே உடனடித்தீர்வுகளைப் பெற்றுக் கொள்ளமுடியும் என நல்லூர் பிரதேச சபை எதிர்க்கட்சித் தலைவரும் ஈ.பி.டி.பி யின் நல்லூர் அமைப்பாளருமான அ.இரவீந்திரதாஸன் தெரிவித்தார்.

நல்லூர் ஆத்திசூடி பகுதி சிவில் பாதுகாப்பு கூட்டம் ஆத்திசூடி கிராம அபிவிருத்தி மண்டபத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை கிராம அலுவலர் ரி.சிறிஸ்கந்தராஜா தலைமையில் இடம்பெற்றது. இதில் கலந்து கொண்டு, கருத்துத் தெரிவித்த போது அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர்தொடர்ந்து தெரிவிக்கையில்

டெங்கு ஒழிப்பு நடவடிக்கையை மழை காலத்திற்கு முன்பதாக மேற்கொள்வதற்குப் பொதுமக்கள் ஒத்துழைப்பு வழங்க வேண்டும். கலாசார சீரழிவுகள், களவு, கொள்ளை, குழுக்களுக்கு இடையேயான மோதல்கள் போன்றவற்றைக் கட்டுப்படுத்துவதன் மூலம் சீரழிந்து கொண்டிருக்கும் எமது கலாசாரத்தைப் பாதுகாத்து, கிராமத்தை முன்னேற்றப் பாதைக்குக் கொண்டு செல்ல முடியும்.

அத்துடன் யாழ்.மாவட்டத்தில் சிவில் பாதுகாப்புக் கூட்டம், அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் முயற்சியின் பயனாகவே இடம்பெற்று வருவதாகத் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் யாழ்.பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி சண்முகநாதன், பொலிஸ் உத்தியோகத்தர் ரஞ்சித், கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் வி.மகாலிங்கம், சமுர்த்தி உத்தியோகத்தர் கே.சதீஸ மற்றும் விளையாட்டுக் கழக உறுப்பினர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.


# வல்வையில் இடை நிறுத்தப்பட்ட வீதிப்புனரமைப்பு மீள ஆரம்பம்



தொண்டைமானாறு,வல்வெட்டித்துறை, நெற்கொழு மற்றும் பொலிகண்டி குடியேற்றம் ஆகிய பகுதிகளில் வீதிகள் அமைக்கும் பணிகள் விரைவாக நடைபெற்றுக் கொண்டிருந்த நேரத்தில், தார் கிடைக்காத காரணத்தினால் வேல்லகள் தற்காலிகமாக இடை நிறுத்தப்பட்டிருந்தன. நீண்ட காலத்தின் பின் இலங்கை பெற்றோலியக கூட்டுத்தாபனத்தினால இறக்குமதி செய்யப்பட்ட தார்ப் பீப்பாக்கள் வல்வெட்டித்துறை நகரசபைக்கு வந்து சேர்ந்துள்ளதை அடுத்து உடனடியாக வேலைகளை ஆரம்பிக்குமாறு தொழில் நுட்ப அலுவலர்களுக்கு நகரசபைத் தலைவர் அறிவுறுத்தியுள்ளார்.

சபை நிதியில் இருந்தும், நெல்சிப் திட்டத்தின் கீழும் வீதிகள் அமைக்கும் பணிகள் கடந்த இரண்டு மாதங்களாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இதன் முதல் கட்டமாக சபை நிதியில் இருந்து மயிலியதனை மயானத்திற்கான முகப்பு சுற்று மதில் அமைத்தல்,வாடி ஒழுங்கை வடிகால் அமைத்தல்,ஆதிகோயிலடி சிதம்பரா வடக்கு கிணற்றுக்கான வடிகால் அமைத்தல் மற்றும் பொலிகண்டி குடியேற்ற குறுக்கு வீதி அமைத்தல் ஆகியவற்றுக்கான வேலைகள் மேற்கொள்ளப்பட உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதேவேளை நெல்சிப் திட்டத்தின் கீழ் தொண்டைமானாறு கரம்பாவளி மயான வீதி, தொண்டைமானாறு வீரமாகாளி அம்மன் கோயில் வீதி.பெரிய கடற்கரை வீதி,சின்னக்கடற்கரை வீதி,நெற்கொழு கோயில் முகப்பு வீதி,நெற்கொழு வீதி,துரைரட்ணம் பா.உ.வீதி ஆகியனவும் மற்றும் சிவகுரு வித்தியாலய பின்புற தடுப்புச் சுவரும் வீதியும் அமைத்தல்,ரேவடி தடுப்பணையும் வீதியும்,கொத்தியால் கடற்கரை தடுப்பணையும், வீதியும் அமைத்தல் ஆகிய வேலைகள் துரிதமாக நடைபெற்றுக் கொண்டிருப்பதாகவும்,தார்ப் பீப்பாக்கள் கிடைத்தபின்னரும் ஒப்பந்தத்திற்கு அமைவாக உரிய காலத்திற்குள் வேலைகளை முடித்துத் தராவிடில் ஒப்பந்தக்காரர்களின் ஒப்பந்தங்கள் இரத்துச் செய்யப்படும் என்றும் நகரசபைத் தலைவர் நடராஜா அனந்தராஜ் தெரிவித்துள்ளார்.

# ஆயுர்வேதம்



## கண் பார்வை வலுப் பெற..!

கடுக்காய், நெல்லிக்காய், தான்றிக்காய் எனும் மூன்று மூலிகைப் பொருட்களை நன்றாக அரைத்து, திரிபலா சூரணம் என்ற பெயரில் விற்பனை செய்யப்படுகிறது. இந்த சூரணத்தை இரவில் படுக்கும் முன் நக்கிச் சாப்பிட்டு அதற்குப் பிறகு பசும்பால் சாப்பிடுவது கண்பார்வைக்கு மிகவும் நல்லது. சுமார் 1/2 கரண்டி (2.5 கிராம்) சூரணம் 1 1/2 கரண்டி (7.5 கிராம்) த்ரைபல க்ருதம் எனும் உருக்கிய நெய் மருந்து, அரை கரண்டி சுத்தமான தேன் என்ற விகிதத்தில் நன்கு குழைத்து இரவில் படுக்கும் முன் சாப்பிட்டு வந்தால், கண் கோளாறுகள் நீங்குவதோடு பார்வையும் நன்றாகத் தெரியும்.

அதிக நேரம் தரையில் குனிந்து அமர்ந்து வீட்டுவேலை செய்வது, படுத்துக் கொண்டு பாடப் புத்தகங்ளைப் பழப்பது, அதிக வெளிச்சமில்லாத அறையில், தனக்குப் பின்புறம் தலைக்கு மேல் விளக்கு எரியாமல், முன்புறம் எரியும் விளக்கில் பழப்பது, பிள்ளைகளுக்குச் சளி பிழத்துவிடக் கூடாதே என்ற பயத்தில் தலைக்குச் சுடுதண்ணீர் விட்டுக் குளிப்பாட்டுவது, நூடுல்ஸ், பீஸ்ஸா, பர்கர், மசாலா சுண்டல், சிப்ஸ் போன்றவற்றைப் பிள்ளைகள் ஆசைப்படும் போதெல்லாம் வாங்கித் தருவது ஆகியவை தவிர்க்கப்பட வேண்ழயவை.

உணவாக முருங்கைக்கீரை, பொன்னாங்கண்ணி, வல்லாரை, மிதிபாகல் பிஞ்சு, வெண்டை, மணத்தக்காளி, கரட், முட்டை, பசும்பால் அதிகம் சேர்ப்பது நலம். மேலும் பயறு, கடலை, துவரை, உளுந்து, எள்ளு, மொச்சை முதலிய பருப்பு வகையும் மிளகு, சுக்கு, பெருங்காயம் முதலிய ஜீரண உதவிகளையும் காலை உணவாக ஏற்பது பிள்ளைகளுக்கு மிகவும் நல்லது. தாமதித்துச் செரிக்கும் உணவுப் பொருட்களாகிய கிழங்குகள், பழ வகைகள், எருமைத் தயிர், கீரை போன்றவை மதிய உணவிலும், பகல் பொழுதிலும் சேர்த்தால் ஏற்படும் வயிற்று மந்தம் வெயிலின் சூட்டாலும், விளையாட்டாலும் பாதிக்காது. அவரைப் பிஞ்சு, அத்திக்காய், பசுவின் பால், கடைந்த மோர், முருங்கைப் பிஞ்சு, துவரம் பருப்பு, மணத்தக்காளி வற்றல் போன்றவை இரவில் சாப்பிட உகந்தவை.

“ஆலோசகம்’ என்றொரு பித்தம் கண்ணிலிருந்து செயல்படுகிறது. பார்வை தெளிவாக இருப்பதற்கு இந்த பித்தம் உதவுகிறது. காரம், புளி, உப்பு ஆகியவற்றை உணவில் அதிகம் சேர்த்தால் இந்தப் பித்தம் கெட்டுவிடும். கண்பார்வை மங்கும். அதனால் இந்தச் சுவைகளை உணவில் குறைத்து வாழைப்பூ, வாழைத்தண்டு போன்ற துவர்ப்புச் சுவையும், கசப்பான பாவற்காய், அகத்திக் கீரையும், இனிப்பான பொருட்களையும் பிள்ளைகளுக்குச் சாப்பிடும்படி பழக்கினால் இந்த ஆலோசக பித்தம் நன்றாகச் செயலாற்றும்.

கண்களில் வெளிப்புறம் உளுந்து மாவை வரம்பு கட்டி, கண்களில் உள்ளே மூலிகை நெய் மருந்தை ஊற்றி நிரப்பி, கண்களைத் திறந்து மூடச் செய்யும் நேத்ர தர்ப்பணம் எனும் சிகிச்சை முறை, புடபாகம், பிடாலகம், ஆஸ்சோதனம், அஞ்சனம் போன்ற கண் சிகிச்சை முறைகளால் கண்பார்வைக் கோளாறுகளைத் தவிர்க்க முழயும் என்று ஆயுர்வேதம் வலியுறுத்துகிறது. ஆயுர்வேத மருத்துவ மனைகளில் இந்த சிகிச்சைமுறைகள் சிறப்பாகச் செய்யப்படுகின்றன.

உள்ளங்கால் நடுப்பகுதியில் ‘தலஹ்ருதயம்’ என்று ஒரு மர்ம ஸ்தானமிருக்கிறது. அந்த இடத்தில் பசு நெய்யை உருக்கித் தொடர்ந்து பூசி வந்தால், கண்பார்வை நன்றாக இருக்கும் என்று கூறப்படுகிறது. நயனாமிருதம் என்ற கண்சொட்டு மருந்தும் உபயோகிப்பது கண்களுக்கு வலுவைக் கூட்டும். முதலில் விட்டவுடன் எரிச்சலைத் தரும். ஆனால் அதன் பிறகு குளிர்ச்சியைத் தரும்.

- எஸ். சுவாமிநாதன்

# சுவிஸ் வங்கிகளில் பணவைப்பு; தெரியாது என்கிறது மத்தியவங்கி

(கொழும்பு)

சுவிஸ் வங்கிகளில் யார் யார் பணம் வைப்புச் செய்துள்ளார்கள் அல்லது கணக்குகளைப் பேணி வருகின்றார்கள் என்பது தெரியாது என இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

ஏனெனில் சுவிஸ் வங்கிகளில் இரகசியமான முறையிலேயே, இலங்கையர்கள் பணத்தை வைப்புச் செய்துள்ளதாகக் குறிப்பிட்டுள்ளது.

சட்டவிரோதமான முறையில் இந்தப் பணம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளது.

சுவிஸ் வங்கிகளில் பணம் வைப்புச் செய்தோர் பற்றிய எந்தவிதமான தரவுகளும் கிடையாது என மத்திய வங்கியின் அந்நியசெலாவணிக் கட்டுப்பாட்டுப் பிரிவு அறிவித்துள்ளது.

கல்வி, சுகாதாரம் மற்றும் வர்த்தக நோக்கங்களுக்காக மட்டுமே பணம் அனுப்பி வைக்க முடியும் எனத் தெரிவித்துள்ளது.

ஏதேனும் முறைப்பாடுகள் செய்யப்பட்டால் மட்டுமே இது குறித்து விசாரணை நடத்த முடியும் என அந்நிய செலாவணிக் கட்டுப்பாட்டுப் பிரிவு பொறுப்பாளர் சி.எச்.ஓ சந்திர சோம தெரிவித்துள்ளார்.

இலங்கையர்கள் பல மில்லியன் சுவிஸ் பிராங்குகளை சுவிஸ் வங்கியில் வைப்புச் செய்துள்ளதாக அண்மையில் முன்னாள் ஜே.வி.பி நாடாளுமன்ற உறுப்பினர் கே.டி.லால்காந்த குற்றம் சுமத்தியிருந்தார்.

2002ஆம் ஆண்டில் இலங்கையர்கள் சுவிஸ் வங்கிகளில் 22.9 மில்லியன் சுவிஸ் பிராங்குகளை வைப்புச் செய்திருந்ததாகவும், 2010ஆம் ஆண்டில் இந்தத் தொகை 111 மில்லியனாக உயர்வடைந்துள்ளது எனவும் அவர் சுட்டிக்காட்டியிருந்தார்.

2005ஆம் ஆண்டில் இலங்கையர்கள் சுவிஸ் வங்கிகளில் வைப்புச் செய்திருந்த மொத்தத் தொகை 177 மில்லியன் சுவிஸ் பிராங்குகள் என அவர் தெரிவித்திருந்தார்.

2004ஆம் ஆண்டு சுனாமி அனர்த்தம் ஏற்பட்டதன் பின்னர் பாரியளவு வெளிநாட்டுப் பணம் நாட்டுக்குக் கிடைக்கப் பெற்றது என அவர் சுட்டிக்காட்டியிருந்தார்.

இந்தப் பணம் தனிப்பட்ட நபர்களின் கணக்குகளில் வைப்புச் செய்யப்பட்டிருக்கலாம் என்ற நியாயமான சந்தேகம் எழுவதாகவும் அவர் குறிப்பிட்டிருந்தார்.

## கோழிக் குஞ்சுகள் விநியோகம்


(கிளிநொச்சி)

திவிநெகும திட்டத்தின் கீழ் பூநகரி பிரதேசத்தில் 600 பயனாளிகளுக்கு கோழிக்குஞ்சுகள் வழங்கப்பட்டுள்ளன.

ஜெயபுரம் தெற்கு, ஜெயபுரம வடக்கு, முழங்காவில் ஆகிய பிரதேசத்தை சேர்ந்த 30 பயனாளிகள் இந்த திட்டத்திற்குத் தெரிவு செய்யப்பட்டு உள்வாங்கப்பட்டுள்ளனர்.

மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் பொருட்டு திவிநெகும திட்டத்தின் கீழ் பல்வேறு உதவிகள் வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (28)

## பரமர் சங்கமம்



'கண்ணுக்கு மை அழகு, கவிதைக்குப் பொய் அழகு, தமிழுக்கு மெய் அழகு' இவ்விதம் அழகுகளைப் பாடிப்போந்த கவிஞர்கள் தமது அழகுகளையும் இம்மண்ணில் விதைத்துப் போயிருப்பதைப் பார்க்கலாம்.

வடபகுதியைப் பொறுத்தளவில் அறுபதுகளிலும், அறுபதுக்கு முன்பாகவும் எனப்பார்த்தால் வரதர், முருகானந்தன், நாவற்குழியூர் நடராசன் போன்றவர்கள் ஆரம்பித்த 'மறுமலர்ச்சி', பிரேம்ஜி, கே.டானியல், நீர்வை பொன்னையன் ஆகியோரால் வளர்க்கப்பட்ட முற்போக்குஅணி கனக செந்திநாதன், குறமகள், யாழ்.வாணன் தொடங்கிய யாழ்.இலக்கிய வட்டம்.

இதனிடையே வலி.வடக்கில் மாவை நித்தியானந்தன், குப்பிளான் ஐ.சண்முகன் ஆகியோரால் அறிமுகமான யாழ்.இலக்கிய நண்பர் கழகம் என்பன 'ஈழுகேசரி மற்றும் சுதந்திரன்' இதழ்களை மையப்படுத்தி இலக்கியப் படைப்புக்களில் ஈடுபட்டு வந்தன.

எண்பதுகளில் மக்கள் கலை இலக்கியப் பெருமன்றம், தேசிய கலை இலக்கியப் பேரவை போன்ற இன்னோரன்ன அமைப்புகள் தோன்றி இலக்கியப் போக்கு பார்வை என்பவற்றை வளப்படுத்தியதை மறுத்துவிட முடியாது.

சில அமைப்புகளின் முக்கியஸ்தர்கள் கொழும்பைத் தளமாகக் கொண்டு இயங்கியதால், யாழில் இலக்கிய வட்டமும், பேரவையும் ஒரே தலைமையின் கீழ் செயற்பட்டு வந்தன.

1995ஆம் ஆண்டின் மாபெரும் இடப்பெயர்வால் மீள சொந்த மண்ணுக்கு வந்துசேர்ந்த பின்பாக பிரதேச செயலராக இருந்த இலக்கியக் காரரான செங்கை ஆழியான் அப்போது யாழ்.அரச அதிபராக இருந்த மாணிக்கவாசகரால் எழுத்தாளர்களுக்கு வழங்கப்பட்டதாக யாழ்.ஆரியகுளம் பகுதியில் கட்டடம் ஒன்றை அறிமுகம் செய்து வைத்தார்.

அப்போது சிதறுண்டு போயிருந்த ஏனைய இலக்கிய, கழகங்களுடன் இணைந்து 'தமிழ் எழுத்தாளர் ஒன்றியம்' என்னும் புதிய அமைப்பை உருவாக்கி ஐந்தாறு கூட்டங்கள் நடந்தேறின.

செங்கை ஆழியான் தலைவராகவும் இணைச் செயலாளர்களாக டொமினிக் ஜீவா, செம்பியன் செல்வன் ஆகியோரும் பொருளாளராக தணிகாசலமும் செயற்குழுவில் பரமரோடு இன்னும் சிலரும் சேர்க்கப்பட்டிருந்தனர்.

காலப்போக்கில் செங்கை ஆழியான் நல்ல உடல் நிலையில் அவரது 67ஆவது பிறந்த நாளை நயினை கிருபானந்தா இவர் யாழ்.இலக்கிய வட்ட செயலாளராக இருந்தவர். பலரிடம் பணம் சேகரித்து நடத்திய விழாவும் ஆரியகுளம் தமிழ் எழுத்தாளர் ஒன்றியத்தில் நடத்தப்படவில்லை.

நல்லை ஆதீன பிரதான மண்டபம் அல்லாத ஒரு அறையிலேயே நடந்தேறியது. அதன் பின்பாக எந்த நிகழ்வுகளும் எழுத்தாளர்களுக்கு யாழ்.அரச அதிபரால் இலக்கியக்காரரான உதவி அரசாங்க அதிபரான செங்கை ஆழியான் மூலம் ஒப்படைக்கப்பட்ட ஆரியகுளம் கட்டடத்தில் நடைபெறவே இல்லை.

இப்போது அந்தக் கட்டடம் எழுத்தாளர்களின் சொத்தாக இருக்கிறதோ இல்லையோ அவருக்குத்தான் வெளிச்சம். செங்கை ஆழியான் இப்போது கடும் நோயாளியாகி வீட்டுடன் முடங்கி விட்டார்.

யாழ்.இலக்கிய வட்டம், இலக்கியப் பேரவைச் செயற்பாடுகளும் முடங்கியுள்ளன. ஒருவரது ஆதிக்கத்தில் திகழும் அமைப்புகள் அவர்களின் பின்பாக செல்லாக் காசாகி விடுவதையும் காணத்தான் முடிகிறது. இல்லையே பின்னை...

## மாநாடு

(யாழ்ப்பாணம்)

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் 61ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு மாநில மாநாடு எதிர்வரும் 10ஆம் திகதி யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இம்மாநாட்டில் அமைச்சர்களான பசில் ராஜபக்ஷ, மகிந்தானந்த அளுத்கமகே, டலஸ் அழகப்பெரும, நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

## சமையற் போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ் போதனாவைத்திய சாலையின் நீரிழிவு சிகிச்சை நிலையம் நடத்தும் 2012ஆம் ஆண்டிற்கான மாபெரும் சமையற்போட்டி எதிர்வரும் 15ஆம் திகதி நடைபெறவுள்ளது.

இப்போட்டி தாதியர் பயிற்சிப் பாடசாலையில் நடைபெறவுள்ளதாக வைத்திய சாலை பிரதிப்பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

## கூட்டம்

(யாழ்ப்பாணம்)

வடமாகாண தமிழ் இலக்கிய பெருவிழாவை முன்னிட்டு ஆலோசனைக் கூட்டம் நாளை வியாழக்கிழமை யாழ்.மாவட்ட செயலகத்தில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில் முக்கிய தீர்மானங்கள் எடுக்கப்படவுள்ளதால் உரியவர்கள் தவறாது வருகை தருமாறு மாவட்ட அரசாங்க அதிபர் அறிவித்துள்ளார். (142)

# சூளாம்பதியில் மீள்குடியேறிய மக்களுடன் கலந்துரையாடல்



(சுன்னாகம்)

தெல்லிப்பளை பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட சூளாம்பதி பகுதியிலுள்ள மீள்குடியேற்ற மக்கள், எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பான கலந்துரையாடலொன்று, ஈ.பி.டி.பியின் வலிவடக்கு பிரதேச அமைப்பாளரும், வலிவடக்கு பிரதேச சபை எதிர்க்கட்சித் தலைவருமான ஜெயபாலசிங்கம (அன்பு) தலைமையில் நடைபெற்றது.

கடந்த 29ஆம் திகதி வாலிபர் முற்போக்கு ஐக்கிய சனசமூக நிலையத்தில் நடைபெற்ற இக்கலந்துரையாடலின் போது, மீள்குடியேற்ற மக்களின் தேவைகள் மற்றும் பிரச்சினைகள் தொடர்பில் ஆராயப்பட்டன. மேலும் தமக்கு வீட்டுத்திட்டம், மலசல கூடம், மின்சாரம், ஏனைய அடிப்படைத் தேவைகளைப் பெற்றுத் தருமாறு எதிர்க்கட்சித் தலைவரிடம் அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்தனர்.

இதற்குப் பதிலளித்த எதிர்க்கட்சித்தலைவர் இவர்களது கோரிக்கைகள் மற்றும் தேவைகள் தொடர்பில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் கவனத்திற்குக் கொண்டு சென்று உரிய தீர்வினைப் பெற்றுத்தருவதாக உறுதியளித்தார்.

## முரசின் இன்றைய பலன்

(05.09.2012 - புதன்கிழமை)

நந்தன வருஷம் ஆவணி மாதம் 20 ஆம் திகதி.
நட்சத்திரம் அச்சுவினி. திதி பஞ்சமிபின்னிரவு 12.41 வரை. மரணயோகம் பிற்பகல் 01.11 வரை. இராகுகாலம் 12.40-01.34 வரை.
சுபநேரம் 4.34 - 6.04 வரை. எமகண்டம் 7.25 - 8.55 வரை.
குளிகன்காலம் 10.25 - 11.55 வரை.

சோதிடஞானி அவர்களால் கணிக்கப்பட்டது.

| | |
|---|---|
| மேடம்  | சவாலைச் சந்திப்பீர்கள். தொழில் வளர்ச்சிக்கு புதிய வழி பிறக்கும். மேலுயரும் ஆசை அதிகரிக்கும். பணவரவு. கடன் அடைபடும். அரசாங்க வகையில் அனுகூலம். |
| ரிஷபம்  | குடும்பத்தில் பாசம். பணவரவு சுமார். வீண்செலவைத் தவிருங்கள். வாகனப் பயணம் கவனம். எதிர்ப்புகள் இருக்கும். விட்டுக் கொடுப்பீர்கள். நண்பர்கள் உதவுவர். |
| மிதுனம்  | மனதில் நம்பிக்கை வளரும். தொழிலில் வளர்ச்சி. கொடுக்கல் வாங்கலில் முன்னேற்றம். உறவினர்கள் ஒ[illegible] துழைப்பர். சுபநிகழ்ச்சிக்கு வெளியூர்ப்பயணம். உயர்வு. |
| கடகம்  | பெரியவர்களின் ஆதரவும் ஆலோசனையும் நல்வழிப் படுத்தும். தொழிலில் பெயர் கிடைக்கும். உடல் ஆரோக்கியம் மேம்படும். கடன் உண்டாகும். பிள்ளைகளால் மகிழ்ச்சி. |
| சிம்மம்  | நற்செயல்களால் பெருமை பெறுவீர்கள். பேச்சில் சாந்தமும், இனிமையும் கூடும். சம்பள உயர்வு, பதவி உயர்வு கிடைக்கும். குடும்பத்தில் ஒற்றுமையும், மகிழ்ச்சியும். |
| கன்னி  | பிறரை நம்புவது கூடாது. வியாபாரத்தில் போட்டி பொறாமை. பண வருகை தாமதம். புது முயற்சிகள் வேண்டாம். உடல்நலத்திற்காக செலவு நேரிடும். |
| துலாம்  | மனம் தெளிந்த நீரோடை போல இருக்கும். சமயோசிதம் காக்கும். வருமானம் கூடும். நண்பர், உறவினர்கள் பாசபந்தத்துடன் நடப்பர். சாதனை ஆர்வம். ஓய்வும் ரசனையும். |
| விருச்சிகம்  | உங்கள் கொள்கைக்கு பலன் கிடைக்கும். தயக்கம் விலகி தைரியம் பிறக்கும். தொழிலில் வளர்ச்சியும், வருமானமும். நண்பரால் உதவி உண்டு. விவேகம். |
| தனுசு  | தடைகளைத் தகர்ப்பீர்கள். உற்சாகமான நாள். பணவரவால் வீட்டில் மகிழ்ச்சி. சொத்து வாங்க யோகம். விருந்தும் கொண்டாட்டமும் இருக்கும். தாய்வழி உறவினரின் உதவி. |
| மகரம்  | செய்யும் செயல்களில் நிதானம் நல்லது. தொழிலில் பொறுமை தேவைப்படும். பண வருகையில் தடங்கல். அலைச்சல் இருக்கும். தெய்வ வழிபாடு. குடும்ப ஆதரவு. |
| கும்பம்  | புகழ் ஓங்கும். வாகனப்பயணத்தில் கவனம் நல்லது. ஆடம்பர நாட்டம். வெளியூர்ப் பயணம். உறவினர் நண்பர் மத்தியில் செல்வாக்கு. தொழில் உறவுகள் விருத்தி. |
| மீனம்  | அடுத்தவர் விவகாரத்தில் நுழைய வேண்டாம்.. கடின உழைப்பால் தொழில் சீராகும். வருமானத்தை விட செலவு அதிகரிக்கும். உடல்நலனில் அக்கறை. உதவுவதில் மகிழ்ச்சி. |

# தரம் - 3 மாணவர்களுக்கான பயிற்சிப் பரீட்சை

# கல்வி முரசு



முன்னணி ஆசிரிய நட்சத்திரங்களினால் தொகுக்கப்படும் விசேட வினாத்தாள்.

### சரியான விடையின் கீழ்கோடு இடுக.

1) சிற்றுண்டி வகைகளுள் ஒன்று (பிட்டு, தோசை, லட்டு)

2) தூய்மையான நீர் (ஆற்றுநீர், மழைநீர், கிணற்று நீர்)

3) அதிகளவு புரதத்தைக் கொண்ட உணவு (நெத்தலி, பாண், கரட்)

4) இயேசுவின் பிறப்பைக் கொண்டாடும் விழா (பெரியவெள்ளி, நத்தார், ஈஸ்ரர் திருநாள்)

5) இலங்கை சுதந்திரம் பெற்றது (போர்துக்கீசரிடம், ஒல்லாந்தரிடம், ஆங்கிலேயரிடம்) இருந்து

### பின்வருவனவற்றிற்கு உதாரணங்கள் இரண்டு தருக

1) கிழங்கு வகைகள் 1. ........................ 2. ........................

2) பழவகைகள் 1. ........................ 2. ........................

3) கீரை வகைகள் 1. ........................ 2. ........................

4) மூலிகை வகைகள் 1. ........................ 2. ........................

### சரி, பிழை இடுக

1) வாய் ஓரங்களில் உணவு படுமாறு உண்ணுதல் கூடாது ( )

2) வீட்டுத் தோட்டத்தில் புதிய காய்கறிகளைப் பெறலாம் ( )

3) எமது நாடு கடலால் சூழப்பட்ட ஒரு தீவாகும் ( )

4) முஸ்லிம்கள் தைப் பொங்கலைக் கொண்டாடுவர் ( )

5) ஏனைய கொடிகளை விட தேசியக்கொடி உயரத்தில் பறக்க விடப்படும் ( )

6) சூரிய ஒளியில் மின்சாரம் பெறலாம் ( )

7) பகல் வானம் மிகவும் இருட்டாக இருக்கும் ( )

8) கிளி தனியாகத் திரியும் பறவை ( )

9) அணில் கூட்டமாக நடமாடும் ( )

10) இரவில் பாம்பு நடமாடும் ( )



### விடை தருக

1) சுத்தமான நீரின் இயல்புகள் மூன்று தருக.

....................................................................................................

....................................................................................................

....................................................................................................

2) பாடசாலையில் ஏற்படக்கூடிய விபத்துக்கள் மூன்று தருக.

....................................................................................................

....................................................................................................

....................................................................................................

3) உங்கள் பாடசாலைக்கு நீர் எவ்வாறு கிடைக்கின்றது?

....................................................................................................

....................................................................................................

4) பாதையில் ஏற்படக்கூடிய விபத்துக்கள் எவை?

....................................................................................................

....................................................................................................

5) அசுத்த நீரைப் பருகுவதால் ஏற்படும் நோய்கள் எவை?

....................................................................................................

....................................................................................................

6) நுளம்புகளை ஒழிக்கக்கூடிய வழிமுறைகள் இரண்டு தருக.

....................................................................................................

....................................................................................................

7) முதலுதவிப் பெட்டிக்குள் காணப்படும் பொருட்கள் மூன்று தருக.

....................................................................................................

....................................................................................................

8) நீரின் மூவகை நிலங்களும் எவை?

....................................................................................................

....................................................................................................

9) பிராணிகளால் ஏற்படக்கூடிய விபத்து மூன்று தருக.

....................................................................................................

....................................................................................................

....................................................................................................

### மிகச் சரியான விடையின் கீழ் கீறிடுக

1) சுவரில் சுத்தியலால் செய்யக்கூடிய வேலை எது?
   1) ஆணி அறைதல் 2) கருங்கல் உடைத்தல் 3) பலகை வெட்டுதல்

2) அருகில் உள்ள போக்குவரத்து குறியீட்டால் விளக்கப்படுவது என்ன?
   1) நிறுத்துக
   2) முன்னால் வேலை
   3) பாதசாரிகள் செல்லத்தடை



3) வீட்டுத் தோட்டத்தில் கிடைக்கும் நன்மை அல்லாதது எது?
   1) சேமிப்பு 2) புதிய காய்கறி 3) செலவு அதிகம்

4) ஒட்டுதல் மூலம் இனம் பெருக்கக்கூடிய தாவரம் எது?
   1) மிளகாய் 2) தோடை 3) வாழை




5) சூழலிற்கு முற்றிலும் தீங்கு ஏற்படுத்தாத போக்குவரத்துச் சாதனம் எது?
   1) ஈருருளி 2) பேருந்து 3) புகையிரதம்

6) 'நங்கூரம்' பயன்படுத்தும் போக்குவரத்துச் சாதனம் எது?
   1) கார் 2) விமானம் 3) கப்பல்

### தொடர்புபடுத்துக

| | |
|---|---|
| 1) அயடீன் குறைபாடு | சுதந்திரதினம் |
| 2) உயிர்ச்சத்து A | தவிடு நீக்காத அரிசி |
| 3) தேசிய விழா | முஹந்தரம் |
| 4) முஸ்லிம் புத்தாண்டு | கண்டக்கழலை |
| 5) விற்றமின் B | மாலைக்கண் |

### பின்வரும் படங்களில் உள்ளவற்றின் பெயர்களை எழுதுக

1) 
2) 
3) 
4) 



### பொருத்தமான சொல்லை வைத்து இடைவெளியை நிரப்புக

(விபத்து, பாதுகாப்பு, சிக்கனமாக, மதில், குளோரின், மண்ணெய், மற்றவர்களுக்கு)

1) நீரின் மேல் ................................. இட்டால் மிதக்கும்
2) நீரை நாம் ................................. பயன்படுத்தவேண்டும்.
3) விளையாடும்போது சில வேளைகளில் ................................. ஏற்படலாம்.
4) கிணற்றைச் சுற்றி ................................. அமைப்பதால் பாதுகாப்பு கிடைக்கும்.
5) விபத்துக்கள் ஏற்படும்போது ................................. உதவி செய்தல் வேண்டும்.
6) நீரைச் சுத்திகரிப்பதற்கு ................................. பயன்படுத்தப்படும்.
7) மின்சாரத்தை ................................. உடன் பயன்படுத்த வேண்டும்.

### அட்டவணையைப் பூரணப்படுத்துக

| விபத்து | செய்யவேண்டியவை | செய்யக்கூடாதவை |
|---|---|---|
| 1) மயக்கமடைதல் | | |
| 2) மின்சாரம் தாக்குதல் | | |
| 3) உடையில் தீப்பற்றுதல் | | |
| 4) நாய் கடித்தல் | | |

### ஆங்கிலத்தில் தருக

1) கழுவுதல் : .................................
2) கவனமாக : .................................
3) நீர்வீழ்ச்சி : .................................
4) விபத்து : .................................
5) கலத்தல் : .................................

# சீனா தனது நடவடிக்கைகளை காஷ்மீரில் நிறுத்த வேண்டும்

## பாதுகாப்பு அமைச்சர் தெரிவிப்பு

(புதுடில்லி)

பாகிஸ்தானின் ஆக்கிரமிப்புப் பகுதியான காஷ்மீரில் சீனா தன் நடவடிக்கைகளை நிறுத்திக் கொளளவேண்டும் என இந்தியா கேட்டுக் கொண டுள்ளதாக அமைச்சர் அந்தோணி தெரிவித்தார்.

இது தொடர்பாக ராஜ்யசபாவில் அவர் கூறிய தாவது,

பாகிஸ்தானின் ஆக்கிரமிப்புக்குள்ளான காஷ் மீர் பகுதியில் கட்டமைப்பு வசதிகளை உருவாக் கும் பணியில் சீனா ஈடுபட்டுள்ளது. இது இந்தியா வுக்கு கவலை அளிப்பதாக உள்ளது. அதனால் பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீரில், சீனா தன் நடவடிக்கைகளை நிறுத்திக் கொள்ளவேண்டும் என இந்தியா கேட்டுக் கொண்டுள்ளது.

இந்திய - சீனா இடை யேயான சர்வதேச எல் லைக்கோடு விவகாரத் தில், சீனா தொடர்ந்து ஆட்சேபம் தெரிவித்து வருகிறது.

இரு நாடுகள் இடையே பொதுவான எல்லைக் கோடு வரையறுக்கப்பட வில்லை. இருதரப்பிலும் எல்லைக்கோடு தொடர் பான அவரவர் கருத்துப் படி இராணுவ ரோந் துப் பணிகள் மேற் கொள்ளப் பட்டு வருகின் றன. கடந்த மூனறு ஆண்டுகளாக இந தியப் பகுதியில்



அத்துமீறும் செயல்களில் சீனா ஈடுபடுவதில்லை.

ஜம்மு காஷ்மீர் பகுதியில் 38 ஆயிரம் சதுர கி.மீ. பரப்பளவு நிலத்தை 1962 ஆம் ஆண்டு முதல சீனா ஆக்கிரமித்து உள்ளது. இந்திய - சீனா இடையே 1963 இல் ஏற்பட்ட எல்லை ஒப்பந்தப் படி, பாகிஸ்நான் ஆக்கிரமிப்புப் பகுதியில் உள்ள இந்தியாவுக்கு சொந்தமான 5,180 சதுர கி.மீ. பரப்பளவு நிலத்தை, சீனாவுக்கு பாகிஸ் தான் கொடுத்துள்ளது.

அருணாசல பிரதேச மாநிலத்தைச் சேர்ந்த 90 ஆயிரம் சதுர கி.மீ. பரப்பளவு நிலத்தை தனக் குரியது என சீனா கூறி வருகிறது. இந்திய - சீனாவுக்கிடையில் எல்லை தொடர்பான பிரச்சினை களுக்கு தீர்வு காண்பதற்காக இரு நாடுகளும் விசேஷ பிரதிநிதிகளை நியமித்து இருக்கின்றன. இவ்வாறு அந்தோணி கூறினர்.

# பாறை விழுந்ததில் 7 நேபாளிகள் பலி




உத்தர்காண்ட் மாநிலத்தில் சாலை கள் அமைக்கும் பணியில் ஈடுபட்டிருந்த 7 நேபாளிகள் மீது பாறை விழுந்ததில் சம்பவ இடத்திலேயே அவர்கள் உயிரி ழந்தனர்.

இந்திய - சீன எல்லையில் அமைந் துள்ள பகுவா என்னும் மலைப்பகுதியில் சாலைகள் அமைக்கும் பணியில் பலர் ஈடுபட்டிருந்த போது மலையின் உச்சியிலிருந்து திடீரென மிகப்பெரிய பாறை ஒன்று அவர்கள் வேலை செய்துகொண்டிருந்த இடத்தை நோக்கி கீழே விழுந்தது.

இதில் அங்கு வேலை செய்த நேபாளத்தை சேர்ந்த 7 பேர் சம்பவ இடத்திலேயே உடல் நசுங்கி உயிரிழந்தனர்.

பாறை விழுந்து 7 பேர் பலியான சம்பவம் அப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

# கூடங்குள மின் உற்பத்தி டிசம்பரில் தொடங்கும்



கூடங்குளத்தில் உள்ள முதல் அணு உலையில் இந்த ஆண்டு டிசம்பர் முதல் 1000 மெகாவாட் மின்சார உற்பத்தி தொடங்கும் என்று அணு சக்தி ஆணைய அதிகாரி எம்.ஆர். ஸ்ரீனிவாசன் கூறியுள்ளார்.

கொல்கத்தாவில் செய்தியாளர் களிடம் பேசிய அவர், இந்த வாரக் கடைசிக்குள்ளோ அல்லது அடுத்த வார ஆரம் பததிலோ முதல் அணு உலைக் குள் எரிபொருள் நிரப்பப்பட்டு விடும். பின்னர் கட்டங்கட்டமாக மின உற்பத்தி ஆரம்பமாகும். முதலில் 300 மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய் யப்படும். பின்னர் டிசம்பர் மாதமளவில் 1000 மெகா வாட் மின்சார உற்பத்தி ஆரம்பமாகும்.

எரிபொருள் நிரப்பு வதற்கு முனபாக பாதுகாப் புத் தொடர்பாக ஆய்வு செய்ய அணு சக்தி ஒழுங்காற்று ஆணைய அதிகாரிகள் இந்த வாரம் கூடங் குளத்துக்கு செல்வர். முழு அள வில் மின் உற்பத்தியை தொடங் குவதற்கு முன்பு பாதுகாப்பை உறுதிபபடுத்தும் விதத்தல் பல்வேறு ஆய்வுகள் மேற்கொள் ளப்படும்.

கடந்த ஜூன் மாதம் அகற் றப்பட்ட மாதிரி எரிபொருளைப் பயன்படுத்திய அளவில், மின் உலை வெற்றிகரமாக இயங்கி யது என்று ஸ்ரீனிவாசன் கூறினார்.

# நிலக்கரி சுரங்க ஒதுக்கீட்டை இரத்துச் செய்ய முடியாது

## பிரதமர் அறிவிப்பு

நிலக்கரிச் சுரங்க ஒதுக் கீட்டை இரத்துச் செய்யும் எண் ணம் தற்போதைக்கு இல்லை என பிரதமர் மன்மோகன் சிங் உறுதிபடக் கூறியுள்ளார்.

நிலக்கரி சுரங்க ஒதுக்கீட்டில் ஏற்பட்ட முறைகேடு தொடர்பாக தினசரி நாடாளுமன்றத்தின் கூட்டத் தொடர் முடக்கப்பட்டு வருகின்றது.

பிரதான எதிர்கட்சியான பா.ஜ.க. 142 நிலக்கரி சுரங்கங் களின் ஒதுக்கீட்டை இரத்துச் செய்ய வேண்டும் எனத் தெரி வித்துள்ளது.

இது குறித்து பிரதமர் மன் மோகன் சிங், ஒதுக்கீட்டை இரத்து செய்யும் நடவடிக்கையை உடன டியாக மேற்கொள்ள முடியாது.

இது தொடர்பாக எதிர்க்கட்சி களின் எதிர்ப்பைச் சந்திக்கத் தயாராக உள்ளேன் என்று மூத்த அமைச்சர்களிடம் கூறியதாக தக வல்கள் வெளியாகி உள்ளன.

இந்த விடயத்தில் பா.ஜ.க. கேட்கும் கேள்விகள் அனைத்துக் கும் பதிலளிக்கத் தான் தயா ராக இருப்பதாகவும், அதே சம யம் சுரங்க ஒதுக்கீட்டை உடன டியாக இரத்துச் செய்யும் எண் ணம் தனக்கு இல்லை எனவும் பிரதமர் கூறியதாகக் கூறப்படு கிறது.

முன்னதாக மத்திய நிலக்கரித் துறை அமைச்சர் ஸ்ரீபிரகாஷ் ஜெய்ஸ்வால் கூறுகையில், நிலக கரி சுரங்க ஒதுக்கீடு விவகாரம் குறித்து சி.பி.ஐ.யும், அமைச் சகங்களுக்கிடையேயான குழு வும் விசாரித்து வருகின்றன.

இந்தக் குழு தனது அறிக் கையை செப்ரெம்பர் 15 ஆம் திகதி அளிக்கவுள்ளது.

அதன் அறிக்கை கிடைத்த பின்பே, சுரங்க ஒதுக்கீட்டை இரத்து செய்வது தொடர்பாக முடிவெடுப்போம் என்று தெரி வித்திருந்தார் என்பது குறிப்பிடத தக்கது.

# நிலக்கரி ஊழல் முறைகேடு 5 நிறுவனங்கள் மீது வழக்கு



நிலக்கரி சுரங்க ஒதுக்கீடு முறைகேடு விவகாரத்தில் நவபாரத், விம்மி நிறுவனங்கள் உட்பட 5 தனியார் நிறுவனங்கள் மது சி.பி.ஐ. வழக்குப்பதிவு செய் துள்ளது.

கடந்த 2004 - 2009 கால கட்டங்களில் நிலக்கரி சுரங்கங் கள் நியமனம் அடிப்படையில் கொடுக்கப்பட்டதன் காரணமாக மத்திய அரசிற்கு ரூ.1.86 இலட்சம் கோடி இழப்பு ஏற்பட்டுள்ளதாக மத்திய தணிக்கைத்துறை தெரி வித்துள்ளது.

இந்த விவகாரத்தை விசாரிக் கும் அடிப்படையில் மத்திய அமைச்சக அதிகாரிகள், மாநில அரசு அதிகாரிகள் சிலர் மீதும் சி.பி.ஐ. வழக்குப்பதிவு செய் துள்ளது.

பீகார் தலைநகர் பாட்னா, டிலலி, மும்பை உட்பட 30 இடங களில் சி.பி.ஐ அதிகாரிகள் அதிரடி சோதனை நடத்தி வருகின்றனர்.

முன்னதாக தனியார் நிறுவன அதிகாரிகளிடம் சி.பி.ஐ அதி காரிகள் விசாரணை நடத்தினர.

இந்த விவகாரத்தில் தனியார் நிறுவன அதிகாரிகள் தவிர, நிலக்கரி அமைச்சக அதிகாரிகள் மற்றும் நிலக்கரி சுரங்க ஒதுக் கீட்டில் பலன் அடைந்தவர்கள் என கூறப்படுபவர் களிடமும் சி.பி.ஐ. விசாரணை நடத்தத் திட்டமிட்டுள்ளது.

குறிப்பாக 2006 மற்றும் 2009 ஆம் ஆண்டுக்கு இடைப்பட்ட காலத்தில் நிலக்கரித்துறை அமைச்சக அதிகாரிகளாக செயற் பட்டவர்களிடம் சி.பி.ஐ. விசா ரணை நடத்தும் என்று தகவல் கள் தெரிவிக்கின்றன.

நிலக்கரி சுரங்க ஒதுக்கீடு முறைகேடு தொடர்பாக மத்திய கண்காணிப்பு ஆணையம் சில மாதங்களுக்கு முன்பு விசா ரணை நடத்தும்படி சி.பி.ஐயை கேட்டுக்கொண்டது.

இந்த விசாரணை அறிக் கையை அளிப்பதற்கான காலக் கெடு ஓகஸ்ட் 31 ஆம் திகதி யுடன் முடிந்துவிட்டநிலையில் மத்திய கண்காணிப்பு ஆணையத் திடம் சி.பி.ஐ. கூடுதல் கால அவகாசம் கேட்டிருப்பதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

# சிதம்பரத்தின் குடும்பம் மீது நில அபகரிப்பு புகார்



தமிழ்நாட்டில் சென்னையை அடுத்த முட்டுக்காடு அருகே ரூ.100 கோடி மதிப பிலான நிலத்தை அபகரித்து விட்டதாக, மத்திய நிதி அமைச்சர் ப.சிதம்பரத் தின் மகன் கார்த்தி மற்றும் சிதம் பரத்தின் மனைவி மீதும் புகார் எழுந் துள்ளது.

முட்டுக்காடு அருகே உள்ள கரிக் காட்டுக்குப்பம் மீனவர்கள் சென்னை மாநகர பொலிஸ் ஆணையரிடம் முறைப்பாட்டு மனு அளித்தனர்.

மீனவர்கள் வழக்கமாக மீன்பிடிக்கச் செல்லும் வழியில் உள்ள இடத்தை போலி ஆவணங்கள் மூலம் ஆக்கிரமித்து, சிதம்பரம் மகன் கார்த்தி சுவர் எழுப்பியுள்ளதாக அந்த முறைப்பாட்டு மனுவில் கூறப்பட்டுள்ளது.

இதன் காரணமாக மீன் பிடிக்கச் செல்ல முடியாமல் தங்கள் வாழ்வாதாரம் பாதிக்கப்படுவதாகவும் அப்பகுதி மீனவர்கள் தெரிவித்துள்ளனர்.

எனவே நிலத்தை ஆக்கிரமித்த ப.சிதம்பரத்தின் மகன் கார்த்தி சிதம்பரத்தின் மீது உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அவர்கள் கோரிக்கை வைத்தனர்.

ஆனால், 15 அண்டுகளுக்கு முன்பே கார்த்தி சிதம்பரம் மீனவர்கள் குறிப்பிட்ட அந்த இடத்தை விலைக்கு வாங்கிவிட்ட தாகவும், இது பொய்யான குற்றச்சாட்டு என்றும் அவரது சட்டத்தரணி கூறியுள்ளார்.

**தமிழ்....** *(5 ஆம் பக்கத் தொடர்ச்சி...)*


இதைச் செய்திருப்பது தமிழ் பிரிவினை வாதத்துக்கு இந்தியாவின் எதிர்ப்பை தெரிவிப்பதற்காக மட்டுமல்ல, அதேசமயம் புலம்பெயர் தமிழ் பிரிவினைவாதிகள் இந்தியாவில் கால்பதித்து விடுவார்கள் என்கிற இலங்கையின் ஆதங்கத்துக்கு ஏற்ப செயற்படுவதற்கு வேண்டியுமே. நிலைமை மோசமானால் புதுடில்லி அநேகமாக தமிழ்நாட்டிலுள்ள எல்.ரீ.ரீ.ஈ ஆதரவாளர்கள் மீது கடும் நடவடிக்கை மேற்கொள்ளும்.

புதுடில்லி, இலங்கையிலிருந்தும் ஒரு சிலர் மாநாட்டில் பங்கேற்பதை அனுமதிக்கவில்லை. இது காண்பிப்பது, தமிழர்கள் மீது அனுதாபம் இருந்தபோதிலும், இலங்கையின் மீதுள்ள இந்தியாவின் பாரிய ஆர்வத்தை தமிழர் பிரச்சினை மழுங்கடிக்க அனுமதிப்பதில் அதற்கு ஆர்வமில்லை என்பதையே.

தமிழ்நாட்டுத் தலைவர்கள் புரிந்து கொள்ள வேண்டியது, இலங்கைத் தமிழ் தலைவர்களின் முன்னுரிமை தொடர்ந்தும் புதுடில்லியுடன் தொடர்புகளை பேணுவதில் உள்ளதே தவிர தமிழ்நாட்டு சார்பு நிலை அரசியலில் சிக்குவதில் அல்ல என்பதை.

# ஈரான்மீது தாக்குதல் நடத்தினால் அமெரிக்கத் தளங்கள் தகரும்

## – 'ஹிஸ்புல்லா' எச்சரிக்கை



ஈரான் இரகசியமாக அணு ஆயுதங்களைத் தயாரித்து வருவதாக அமெரிக்கா, இஸ்ரேல் போன்ற நாடுகள் குற்றம் சுமத்தி வருவதுடன், அந்நாட்டின் மீது பல்வேறு தடைகளையும் விதித்துள்ளன.

இந்நிலையில் ஈரானியர்கள் ஆதரவுடன் செயற்பட்டு வரும் லெபனான் ஹிஸ்புல்லா தீவிரவாத அமைப்பின் தலைவர் நஸ்ரல்லா கூறுகையில், ஈரான் நாட்டு அணுமின் திட்டங்களுக்கு எதிராக இஸ்ரேல் தாக்குதல் நடத்தினால், மத்திய கிழக்கு நாடுகளில் உள்ள அமெரிக்க இராணுவத் தளங்களைத் தாக்குவோம்.

பதிலடி கொடுப்பது குறித்து முடிவு எடுத்து இருக்கிறோம். தாக்குதல் மிகக் கடுமையாக இருக்கும்.

இஸ்ரேல், ஈரான் மீது குறிவைத்தால், அமெரிக்கா அதன் பொறுப்பை ஏற்க வேண்டியிருக்கும். ஈரானின் அணுத் திட்டங்களை அணு ஆயுதத் திட்டமாக கூறிவரும் அமெரிக்காவிற்கும் இஸ்ரேலுக்கும் இடையே கருத்து வேறுபாடு உள்ளது.

என்னைப் பொறுத்தவரை இஸ்ரேல் ஒரு எதிரி நாடல்ல, ஆனால் சமீபகாலமாக ஈரானுக்கு எதிராகப் பேசி வருவது ஏற்றுக் கொள்ள முடியாது என்று தெரிவித்துள்ளார்.

உலகச் செய்திகள்

# ஈரானுக்கான விஜயத்தை நியாயப்படுத்தும் பான் கீ மூன்



சர்ச்சைக்குரிய ஈரானுக்கான தமது விஜயத்தை ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் பான் கீ மூன் நியாயப்படுத்தியுள்ளார்.

தெஹ்ரானின் அணுத்திட்டங்களின் வெளிப்படைத் தன்மை மற்றும் மனித உரிமைகள் குறித்த விடயங்களை முன்னோக்கிக் கொண்டு செல்வதற்கு, இந்த விஜயத்தைப் பயன்படுத்தியதாக அவர் கூறியுள்ளார்.

நியூயோர்க்கிலுள்ள ஐ.நா. தலைமையத்திற்கு திரும்பும்போது, டுபாயில் வைத்து அவர் இந்த விடயங்களைக் குறிப்பிட்டதாக ரொய்ட்டர் செய்தி வெளியிட்டுள்ளது.

ஈரானில் நடைபெற்ற அணிசேரா மாநாட்டை பான் கீ மூன் பகிஷ்கரிக்க வேண்டுமெனக் கோரியிருந்ததுடன், தமது விடயங்களைத் திசைதிருப்ப ஈரான் முற்படலாம் என அமெரிக்கா கூறியிருந்தது.

அத்துடன் பான் கீ மூன் இந்த மாநாட்டில் கலந்துகொள்வது பாரிய தவறு எனக் கூறிய இஸ்ரேல், அதனை இரத்துச் செய்யுமாறு வலியுறுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# தினசரி பத்திரிகைகளை வெளியிடுவதற்கு அனுமதி?



மியன்மாரில் தினசரி செய்தித்தாள்களை வெளியிடுவதற்குத் தனியார் துறையினருக்கும் சந்தர்ப்பம் வழங்குவது குறித்து கூடுதல் கவனம் செலுத்தப்பட்டு வருகின்றது.

ஊடக சுதந்திரத்தை உறுதிப்படுத்தும் நோக்கில், மியன்மாரின் தகவல்துறை அமைச்சர் இதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுவருகின்றார்.

இதற்காக ஊடகங்கள் தொடர்பில் புதிய சட்டங்களை உருவாக்கவும் அமைச்சு தீர்மானித்துள்ளது.

மியன்மாரில் இராணுவ ஆட்சி நிலவிய காலத்தில், தினசரி பத்திரிகைகளைப் பிரசுரிப்பதற்கு தனியார் துறையினருக்கு அனுமதி மறுக்கப்பட்டிருந்தது.

எனினும் வெளிநாடுகளின் அழுத்தங்களால், ஜனநாயக வழிமுறைகளுக்குத் திரும்பிவரும் மியன்மார், அண்மையில் ஊடகங்கள் மீது விதித்திருந்த சில தடைகளைத் தளர்த்தியிருந்தது.

அரசியல் கைதிகளின் விடுதலை மற்றும் மனித உரிமை விவகாரங்களில் மியன்மார் முன்னேற்றம் கண்டுள்ளதாகச் சர்வதேச நாடுகள் தெரிவித்து வருகின்றன.

# இராணுவ வளாகம்மீது தாக்குதல்; துருக்கியில் முப்பது பேர் உயிரிழப்பு

துருக்கியில் இராணுவ வளாகம் மீது குர்திஷ் போராளிகள் நடத்திய தாக்குதலைத் தொடர்ந்து நடைபெற்ற மோதலில் 30 பேர் உயிரிழந்தனர்.

துருக்கியின் வடகிழக்குப் பகுதியில் குர்த் இன மக்கள் பெரும்பான்மையாக உள்ளனர். இந்தப் பிரிவைச் சேர்ந்தவர்கள் பல ஆண்டுகளுக்கு முன் உருவாக்கிய குர்திஸ்தான் மக்கள் கட்சி, தங்களுக்குத் தனிநாடு கேட்டுப் போராட்டங்களை நடத்தியது.

இக்கட்சி, கடந்த 1984இல் ஆயுதம் தாங்கிய அமைப்பாக உருவெடுத்தது. அதன் பின், நடைபெற்ற வெவ்வேறு தாக்குதல்கள் மற்றும் மோதல்களில் இதுவரை 45 ஆயிரம் பேர் இறந்துவிட்டனர். இந்த அமைப்பு துருக்கியின் வடகிழக்கு நகரான காசியான்டேப்பில் கடந்த மாதம் நடத்திய கார்வெடிகுண்டுத் தாக்குதலில் 10 பேர் கொல்லப்பட்டனர்.

இந்நிலையில், சிர்னாக் மாகாணத்தில் உள்ள பேதுசேபாக் நகரில் உள்ள இராணுவ வளாகம் மீது குர்திஷ் போராளிகள் இயந்திரத் துப்பாக்கிகள் மற்றும் ரொக்கெட் லோஞ்சர்களைக் கொண்டு கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு கடும் தாக்குதலை நடத்தினர். இராணுவம் அதற்குப் பதிலடி கொடுத்தது. இந்த மோதலில் 10 இராணுவ வீரர்களும், 20 போராளிகளும் கொல்லப்பட்டதாக சிர்னாக் மாகாண ஆளுநர் வாடேட்டின் ஒஸ்கான் தெரிவித்தார்.



# தொலைக்காட்சி பார்த்த பத்திரிகையாளர்மீது தாக்குதல்

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானில் தனது வீட்டில் அமர்ந்திருந்து தொலைக்காட்சி பார்த்துக் கொண்டிருந்த ஆங்கில நாளிதழின் ஆசிரியர் தாக்கப்பட்ட சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

பாகிஸ்தானின் கராச்சி நகரில் குல்ஷன்- இ- இக்பால் பகுதியில் வசிப்பவர் ஜயினுல் அபதீன். இவர் ஆங்கில நாளிதழின் ஆசிரியராகப் பணியாற்றி வருகிறார்.

கடந்த ஓகஸ்ட் மாதம் 27ஆம் திகதி இரவு 11 மணிக்கு வீட்டில் தொலைக்காட்சியில் பாடல்களை இரசித்துக் கொண்டிருந்தார்.

அப்போது நான்கு மர்ம நபர்கள் அபதீன் வீட்டின் வாசல் அருகே நின்றபடி, சத்தம் போட்டு அவரைத் திட்டிக் கொண்டிருந்தனர்.

சத்தம் கேட்டு வெளியே வந்த அபதீன் ஏன் இவ்வாறு செய்கிறீர்கள் என விளக்கம் கேட்டார். அதற்கு அந்த நபர்கள் அவரை கடுமையாகத் தாக்கினர். .தொலைக்காட்சி பார்க்கக் கூடாது, பாடல்கள் கேட்கக் கூடாது என்று கண்டித்தனர்.

என் வீட்டில் நான் சுதந்திரமாகச் செயற்படுவதை தடுக்க நீங்கள் யார்? என்று அபதீன் கேள்வி கேட்க, அவரின் முகத்தில் குத்து விட்டு, அவரின் மூக்கு கண்ணாடியை உடைத்தனர்.

இந்தச் சம்பவம் குறித்து உடனே பொலிஸில் அபதீன் புகார் செய்துள்ளார். அபதீனை தாக்கியவர்கள் மதம் மாற்றும் குழுவைச் சேர்ந்தவர்கள் என கராச்சி பத்திரிகையாளர்கள் தெரிவித்தனர்.

# அணு உலைச்செயற்பாடுகளை முன்னெடுக்கிறது வடகொரியா




வடகொரியா குறிப்பிடத்தக்க அணுஉலைச் செயற்பாடுகளை முன்னெடுத்துள்ளதாக ஐக்கிய நாடுகளின் சர்வதேச அணுசக்தி முகவர் நிலையம் குறிப்பிட்டுள்ளது.

இதன்மூலம் அணுவாயுத மூலப பொருட்களைத் தயாரிப்பதற்கான திறனை வடகொரியா விரிவாக்கும் சாத்தியம் உள்ளதாகவும் அணுசக்தி முகவர் நிலையத்தின் அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

வடகொரியாவின் அணுதிட்டங்களை நேரில் சென்று பார்வையிட முடியாத நிலையில், செய்மதி ஊடாக பெற்றுக் கொள்ளப்பட்ட படங்களின் அடிப்படையில், இவ்வாறான செயற்பாடுகள் அவதானிக்கப்பட்டுள்ளதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

2006 மற்றும் 2009 ஆம் ஆண்டுகளில், அணு பரிசோதனைகளை வடகொரியா மேற்கொண்டதை அடுத்து வடகொரியாவிற்கு எதிராக சர்வதேச நாடுகள் கடுமையான தடைகளை விதித்துள்ளன.

வடகொரியாவின் அணுத் திட்டம் கவலைக்குரிய ஒரு விடயம் எனவும், சர்வதேச அணுசக்தி முகவர் அமைப்பின் வருடாந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ஈராக் போர்க்குற்றச்சாட்டில் ஈடுபட்ட பிரிட்டன் படையினர்மீது விசாரணை

ஈராக் யுத்தத்தின்போது இடம்பெற்ற பொது மக்கள் மீதான குற்றங்கள் தொடர்பாக சுமார் 1,000 பிரித்தானியப் படையினர் விசாரிக்கப் படவுள்ளதாக பிரிட்டனின் 'சண்டே டெலிகிராவ்' பத்திரிகை தெரிவித்துள்ளது.

இக்குற்றச்செயல்களில் ஈடுபட்டவர்கள் . என நம்பப்படும், தற்போது சேவையிலுள்ள மற்றும் முன்னாள் படையினர் சுமார் 1000 பேரை ஈராக்கிய அதிகாரிகள் இனங்காட்டியுள்ளனர். எனினும், போர்க்குற்றச்சாட்டு தொடர்பான விசாரணைகளில் வெளிவந்த ஆதாரங்களைப் புலனாய்வாளர்கள் மீளாய்வு செய்யும் நிலையில், மேற்படி எண்ணிக்கை மேலும் அதிகரிக்கலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

2004ஆம் ஆண்டு இடம்பெற்ற மோதலொன்றின் பின்னர், ஈராக்கிய ஆயுதபாணிகளைச் சித்திரவதை செய்தமை மற்றும் கொலை செய்தமை தொடர்பாக விசாரணையின் மூலம் இச்சம்பவம் தொடர்பாக சாட்சியமளிப்பதற்கு ஏற்கனவே 500 இற்கும் அதிகமான படையினர் இனங்காணப்பட்டுள்ளனர்.



மற்றொரு சம்பவம் 2003 ஆம் ஆண்டு ஹோட்டல் ஊழியர் ஒருவர் பிரித்தானியப் படையினரின் காவலில் இருந்தபோது கொல்லப்பட்டமை தொடர்பானதாகும். இது தொடர்பாக சிப்பாய் ஒருவர் சிறையில் அடைக்கப்பட்டுள்ளார்.

2003 முதல் 2008 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் பொதுமக்கள் பலர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு தடுத்துவைக்கப்பட்டிருந்தபோது, துஷ்பிரயோகங்கள் இடம்பெற்றதாக ஈராக்கியர்கள் சார்பாக வாதாடும் பிரித்தானிய வழக்குரைஞர்கள் தெரிவித்துள்ளனர்.

# போதை மயக்கத்தில் அடாவடி வீதியில் இறங்க மக்கள் அச்சம்

(யாழ்ப்பாணம்)

உடுவில் ஆக்லேன் மற்றும் யாழ். கோவில் வீதி, கைலாசப் பிள்ளையார் கோவில் சந்தி ஆகிய பகுதிகளில் மதுபோதையில் நிற்கும் இளைஞர்களினால் அவ்வீதிகளினூடு பயணம் செய்யும் பெண்கள் மற்றும் பொது மக்கள் மிகுந்த அசௌகரியங்களை எதிர்நோக்குவதாக அப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர்.

சுமார் 13 வயதிற்கும் 15 வயதிற்கும் இடைப்பட்ட இவ்வாறான இளைஞர்கள் மேற்படி பகுதிகளில் பயணம் செய்யும் பெண்கள் மீது தகாத வார்த்தைகளால் பேசுவதாகவும் அங்க சேட்டைகளில் ஈடுபடுவதாகவும் அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

இதன் காரணமாக அந்த வீதியூடாகப் பயணிக்க அவர்கள் அஞ்சுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

எனவே இந்தப் பகுதிகளில் கட்டுக்கடங்காமல் செயற்படும் இந்த இளைஞர்களின் நடவடிக்கையை சம்பந்தப்பட்ட தரப்பினர் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அப்பகுதி மக்கள் கேட்டுக்கொண்டுள்ளனர். (பா)

## நீர் சிந்தும் தண்ணீர் குழாய் அதிகாரிகள் கவனிப்பார்களா?

(யாழ்ப்பாணம்)

யாழ் முத்தவெளியில் அமைந்திருக்கும் தனியார் பேருந்து தரிப்பிடத்தில் அமைந்திருக்கும் நீர் விநியோகக் குழாயில் சேதம் ஏற்பட்டிருப்பதன் காரணமாக அதிலிருந்து நீர் பீய்ச்சியடித்து வெளியேறி விரயமாகி வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த பஸ் நிலையத்தின் மலசலகூடத்திற்கு முன்பாக அமைக்கப்பட்டிருக்கும் நீர் விநியோகக் குழாயிலேயே சேதம் ஏற்பட்டு அதிலிருந்து நீர் வெளியேறி விரயமாகி வருகிறது.

எனவே இதனுடன் சம்பந்தப்பட்ட தரப்பினர் விரைந்து இந்த நீர் விரயத்தை போக்கிட ஆவன செய்யுமாறு பயணிகள் மற்றும் தனியார் பேருந்து சேவையாளர்களினால் கோரப்பட்டுள்ளது. (பா)

## குடிசைகள்....

ஏற்றியதாகவும், பின்னர் குடிசைகள் சிலவற்றிக்கு தீ வைத்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தீ வைப்பு சம்பவம் இடம்பெற்ற போது ஆயுததாரிகளிடம் அதனை செய்ய வேண்டாம் என்றும் தாங்கள் குடிப்பதற்கு வைக்கப்பட்டுள்ள தண்ணீரையாவது எடுத்துக் கொள்வதற்கான அனுமதியினை தாருங்கள் என்று மன்றாட்டமாக கேட்ட போது ஆயுததாரிகள் அனுமதியளிக்கவில்லை என பாதிக்கப்பட்ட மக்கள் தெரிவித்தனர்.

தீ வைப்பு சம்பவம் இடம்பெற்றதையடுத்து, அப்பிரதேச மக்கள் இரவினை கழிப்பதற்கு கூட நாதியற்ற நிலையில் இருந்ததாக வயோதிபர் ஒருவர் தெரிவித்தார். தற்போது இக்கிராமத்துக்கு பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளதாக சிலாவத்துறை பொலிஸார் தெரிவித்தனர்.

## இந்தியா வரும்...

சங்கட நிலையைத் தோற்றுவித்திருந்தது.

இதனால் இந்திய வெளியுறவு அமைச்சு நேற்று விசேட அறிக்கை ஒன்றை வெளியிட்டது. தென்மாநில அரசுகள் இந்தியா வரும் இலங்கையர்களைப் பாதுகாக்க உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்ற தொனியில் அந்த அறிக்கையில் விளக்கமளிக்கப்பட்டிருந்தது.

அதேவேளை தமிழகத்தில் இலங்கையர்களுக்கு அச்சுறுத்தலான சம்பவங்கள் மேலும் சில இடங்களில் இடம்பெற்றுள்ளன. திருச்சியில் 5 பஸ்களில் பயணித்த இலங்கையர்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டிருக்கிறது. இதேபோல தஞ்சாவூரிலும் இலங்கையர் மீது அச்சுறுத்தல் விடுக்கப்பட்டிருக்கிறது

மேலும் இவ்விடயம் குறித்த தமிழக அரசின் அண்மைக்கால போக்கு குறித்து தமிழகத்தில் கடும் விமர்சனங்கள் எழுந்துள்ளன. இராஜதந்திரமற்ற விதமான தமிழக அரசு செயற்படுவதாக தமிழக பத்திரிகைகள் கண்டனம் தெரிவித்துள்ளன.

## யாழில் பாரதி...

என்ற இறுவட்டு வெளியிட்டு வைக்கப்படவுள்ளது. இதன் வெளியீட்டுரையை தமிழ்ச் சங்கத் துணைச் செயலர் ச.லலீசன் ஆற்றவுள்ளார். இறுவட்டின் முதற்பிரதியை யாழ். சிவகணேசன் ஸ்ரோர்ஸ் உரிமையாளர் க.அருள்நேசன் பெற்றுக்கொள்வார்.

பாரதியின் பன்முக ஆளுமையும் புனைதிறனும் என்ற பொருளில் சிறப்புரை இடம்பெறவுள்ளது. இதனை தென்கிழக்குப் பல்கலைக்கழக மொழிப்பண்பாட்டுத்துறை தலைவர் கலாநிதி றமீஸ் அப்துல்லா வழங்கவுள்ளார். பாரதி விழாவையொட்டித் தமிழ்ச் சங்கத்தின் மாணவ அங்கத்தவரிடையே நடத்தப்பட்ட பேச்சுப்போட்டியில் முதல் மூன்று இடங்களைப் பெற்றுக்கொண்டவர்களின் பேச்சுக்களும் இடம்பெறும். காலை அமர்விற்கான நன்றியுரையை திருமதி யோகேஸ்வரி சிவப்பிரகாசம் ஆற்றுவார்.

மாலை அமர்வு தமிழ்ச் சங்கத் தலைவர் பேராசிரியர் அ.சண்முகதாஸ் தலைமையில் பிற்பகல் 3.30 மணிக்கு ஆரம்பமாகும். இதில் வரவேற்புரையை தமிழ்ச் சங்கத் துணைச் செயலர் ஆசிரியர் நாக. தமிழிந்திரன் வழங்குவார். கவிஞர் சோ.பத்மநாதன் தலைமையில் கனவு மெய்ப்படவேண்டும் என்ற பொருளில் கவியரங்கம் இடம்பெறும். இதில் கவிஞர் த.ஜெயசீலன், கவிஞர் கு. றஜீபன், கவிஞர் த.நாகேஸ்வரன் ஆகியோர் பங்கேற்கவுள்ளனர்.

பாரதி கண்ட தெய்வீகம் என்ற பொருளில் சிறப்புரை இடம்பெறவுள்ளது. இதனை தமிழ்ச் சங்க உப தலைவர் கலாநிதி ஆறு. திருமுருகன் வழங்குவார். அதனைத் தொடர்ந்து யாழ். கனகரத்தினம் மத்திய ம.வி. வழங்கும் ஆடலளிக்கை இடம்பெறவுள்ளது.

அண்மையில் காலமாகிய பாரதி பதிப்பக உரிமையாளருக்குச் சமர்ப்பணமாக கரிகணன் பதிப்பகத்தார் வெளியிடும் பாரதியின் புலமைத்துவம் என்ற நூல் வெளியீடும் இடம்பெறவுள்ளது. இதன் வெளியீட்டுரையை வடக்கு மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் எஸ்.சத்தியசீலன் வழங்குவார். அறிமுகவுரையை பேராசிரியர் கி.விசாகரூபன் வழங்குவார். கரிகணன் பதிப்பக உரிமையாளர் சி.ராஜ்குமார் நூலின் முதற்பிரதியைப் பெற்றுக்கொள்வார். (10)

## மானிய உரத்துக்கு விண்ணப்பிக்கலாம்

(சாவகச்சேரி)

வரணி வடக்கில் நெற்செய்கையில் ஈடுபடவுள்ள விவசாயிகளுக்கான மானிய உரம் வரணி வடக்கு விவசாயு சம்மேளனத்தால் வழங்கப்படவுள்ளது.

மேற்படி மானிய உரத்தைப் பெற்றுக்கொள்ள விரும்பும் விவசாயிகள் வரணி வடக்கு விவசாய சம்மேளன செயலாளர் அ.தியாகராஜாவுடன் தொடர்பு கொண்டு விண்ணப்பப் படிவங்களைப் பெற்று எதிர்வரும் 10 ஆம் திகதிக்கு முன் விண்ணப்பிக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (11)

## விமானப்...

அங்கு வரவில்லை எனவும் விமானப்படைத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இவ்வீரரின் உறவினர்களுக்கு தகவல் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் விமானப் படை பேச்சாளர் குறிப்பிட்டுள்ளார்.

## வடக்கே...

இரு மாகாணங்களுக்கும் செல்வதற்கான நிகழ்ச்சி நிரலை தனது பயணத்தில் சேர்த்துள்ளார் என அறியவந்துள்ளது.

தனது குழுவினருடன் சுயாதீனமாகவே வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்குச் சென்று அங்கு தமிழ் மக்களைச் சந்தித்து உரையாடி அவர்களது நிலை மைகள் குறித்து நேரில் கண்டறிவார்.

விசேடமாக, வடக்கில் மீள் குடியேற்றப்பட்ட மக்களைச் சந்தித்து அவர்கள் தற்போது முகங்கொடுக்கும் பிரச்சினைகள் குறித்து ஆராய்வதுடன் இறுதிக் கட்ட யுத்தத்தின் போது நேரடியாகப் பாதிக்கப்பட்ட மக்களிடமிருந்தும் மேலதிக தகவல்களையும் பெற்றுக் கொள்ளவுள்ளனர் என்று தெரியவருகிறது.

## பிரதேச....

படவிருக்கிறது. அதன் விபரம் வருமாறு,

கோப்பாய் - 970,000.00, ஊர்காவற்றுறை - 770,000.00, வேலணை - 905,000.00, சண்டிலிப்பாய் - 650,000.00, நல்லூர் - 850,000.00, யாழ்ப்பாணம் - 955,000.00, நெடுந்தீவு - 850,000.00, கரவெட்டி - 580,000.00, மருதங்கேணி - 750,000.00, பருத்தித்துறை - 720,000.00, காரைநகர் - 580,000.00, தென்மராட்சி - 805,000.00, சங்கானை - 600,000.00, தெல்லிப்பழை - 500,000.00, உடுவில் - 1,015,000.00.

# வயாவிளானில் புதிய பாடசாலை கட்டடம் திறந்துவைப்பு



வயாவிளான் சிறி வேலுப்பிள்ளை வித்தியாலய வகுப்பறை தொகுதிகளை கற்றல் செயற்பாடுகளுக்காக நேற்று ஈ.பி.டி.பி.யின் யாழ். மாவட்ட அமைப்பாளர் கந்தசாமி கமலேந்திரன் (கமல்) திறந்து வைத்தார்.

புதிய கட்டடத் தொகுதிகளை கற்றல் செயற்பாட்டிற்காக ஆரம்பித்து வைத்து உரையாற்றிய ஈ.பி.டி.பி.யின் யாழ். மாவட்ட அமைப்பாளர் கடந்த கால அனுபவங்களைக் கருத்தில் கொண்டு பெற்றோர்கள் தமது பிள்ளைகளின் வளமான எதிர்காலத்தினை கருத்தில் கொண்டு அரசாங்கத்தினால் வழங்கப்படும் இலவசக் கல்வியை தமது ஒவ்வொரு பிள்ளைகளும் பெறுவதை உறுதி செய்து கொள்வதுடன் கல்வியின்மூலமே வளமான ஒரு சமுதாயத்தினை கட்டியெழுப்ப முடியுமெனவும், கிடைத்திருக்கும் சந்தர்ப்பத்தை சரிவர அனைவரும் பயன்படுத்திக் கொள்ள வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டார்.

கல்லூரி அதிபர் யூட்மரியதாஸ் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பிரதேச செயலர் சிறிமோகனன், 511 ஆவது பிரிகேட் அதிகாரி லெப்டினன்ட் கேணல் கீத்சிறி, இலங்கை வங்கியின் யாழ். மாவட்ட பொது முகாமையாளர் சுமணசிறி, சுன்னாகம் வங்கியின் கிளை முகாமையாளர் பாலகுமார், கோட்டக் கல்வி அதிகாரி சன்முககுலகுமரன், வலி.வடக்குப் பிரதேச சபை எதிர்கட்சித் தலைவரும், ஈ.பி.டி.பியின் வலி.வடக்குப் பிரதேச அமைப்பாளருமான ஜெயபாலசிங்கம் (அன்பு) உள்ளிட்ட கல்வித்துறை சார்ந்த பலரும் கலந்து கொண்டனர்.

மகிந்த சிந்தனைத்திட்டத்தின் கீழ் கல்வியை வளப்படுத்தும் முகமாக 5000 ஊட்ட (ஆரம்ப) பாடசாலைகளின் அடிப்படைத் தேவைகளை வளப்படுத்தும் வேலைத்திட்டம் கடந்த மாதம் ஆரம்பிக்கபட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

## வடக்கு அபிவிருத்தியில்...

படுகின்றது. இந்த நிலைமை எதிர்காலத்தில் தொடரக்கூடாது.

பாதிக்கப்பட்ட மக்கள், பாதிக்கப்பட்ட பிரதேசம் என்பனவற்றை கருத்தில் எடுத்து திட்ட முன்மொழிவுகள் நிதிஒதுக்கீடுகள் என்பனவற்றில் முன்னுரிமை அளிக்கப்பட்டு அதன் விகிதத்தில் திட்டங்களை மேற்கொள்ள வேண்டும் எனத் தெரிவித்த அவர்.

குறிப்பாக வன்னிமாவட்டங்களில் மாகாணசபையின் உப அலுவலங்களை ஏற்படுத்தி மக்களுக்கான சேவைகளை வழங்க வேண்டும். இல்லையெனில் மாகாணசபைகள் மீது மக்களுக்கு நம்பிக்கையற்றுப் போகும். மக்களுக்கும் மாகாணசபைக்கும் இடையே நெருக்கமான உறவுகள் இருக்க வேண்டும்.

மேலும் இதுவரைக்கும் வடமாகாண சபைக்கு தெரிவு செய்யப்பட்ட மக்கள் பிரதிநிதிகள் இன்மையால் பெருமளவு மக்களின் உணர்வுகள், தேவைகள் என்பவற்றை அபிவிருத்தி வேலைத் திட்ட முன்மொழிவுகளில் பிரதிபலிக்க முடியாத நிலைமை காணப்படுகின்றது. எனவே அதனை தவிர்க்கும் வகையில் மாகாணசபை அலுவலகங்கள் மக்களுடன் நெருங்கி வேலைசெய்ய வேண்டும். அத்தோடு பிரதேச ஒருங்கிணைப்புக் குழு கூட்டங்களின் மக்களின் தேவைகள் முன்மொழிவுகள் ஊடாக பெறப்படுகின்ற அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் நேரடியாக மாகாணசபையின் கவனத்திற்கு கொண்டு செல்வதற்கான தளம் இதுவரை ஏற்படுத்தப்படவில்லை எனவே அவையும் எதிர்காலத்தில் கவனத்தில் கொள்ளப்படல் வேண்டும் என்றும் மாகாணங்களுக்கான குறித்தொதுக்கப்பட்ட நிதிகள் பிரதேசங்களுக்கிடையில் நியாயமான முறையில் முன்னுரிமை அடிப்படையில் ஒதுக்கப்படவேண்டும்.

ஒரே மாகாணத்திற்குள் சில பிரதேசங்கள் போதிய வளங்கள் இன்றிக் காணப்படும் அதேவேளை, சில பிரதேசங்கள் மேலதிக வளங்களுடன் காணப்படுவதனை ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாது என்பதனையும் அவர் வலியுறுத்தினார்.

மேற்படி வடக்கு மாகாணசயின் திட்ட முன்னேற்ற மீளாய்வு கூட்டத்தில் வடக்கு மாகாணசபையின் அமைச்சுகளான கல்வி, சுகாதாரம், உள்ளூராட்சி, உட்கட்டுமானம், திட்டமிடல், விவசாயம், கால்நடை நீர்ப்பாசனம் போன்ற துறைகளில் மாகாண சபையினால் 2012 இல் முன்னெடுக்கப்படுகின்ற வேலைத்திட்டங்களின் முன்னேற்றங்கள் குறித்து அமைச்சின் செயலாளர்களினாலும், பணிப்பாளர்களினாலும் விளக்கம் அளிக்கப்பட்டது.

இந்நிகழ்வில் வடமாகாண பிரதம செயலாளர் திருமதி விஜயலட்சுமி, ஆளுநரின் செயலாளர் இளங்கோவன், திட்டமிடல் பிரதிச் செயலாளர் உமர்காந்தன், கல்வியமைச்சின் செயலாளர் சத்தியசீலன், நிதிஅமைச்சின் பிரதிச் செயலாளர் மனோரஞ்சன், பொது நிர்வாக அமைச்சின் பிரதி செயலாளர் திருமதி துரைராஜா, சுகாதார அமைச்சின் செயலாளர் இரவீந்திரன், கால்நடை அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் இராஜேந்திரன், விவசாய கால்நடை அபிவிருத்தி அமைச்சின் செயலாளர், உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் வரதீஸ் வரன், மற்றும் துறைசார் அமைச்சுக்களின் பணிப்பாளர்கள், மாகாண சபைத் திணைக்களங்களின் உயரதிகாரிகள் என துறை சார்ந்த உத்தியோகத்தர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

# 30 வருட காலத்தின் பின் யாழில் பொலிஸாரின் செயற்பாடு அதிகரிப்பு



தற்போது வடபகுதியில், இராணுவத்தினரின் செயற்பாடுகள் குறைக்கப்பட்டு பொலிஸாரின் செயற்பாடுகள் அதிகரிக்கப்பட்டுள்ளதாக யாழ். பிராந்திய பிரதிப் பொலிஸ்மா அதிபர் எரிக்பெரேரா தெரிவித்தார்.

இலங்கையில் பொலிஸ் சேவை ஆரம்பிக்கப்பட்டு 146 ஆவது ஆண்டு நிறைவினை முன்னிட்டு யாழ். பொலிஸ் நிலையத்தில் நேற்றுக் காலை 8 மணிக்கு நடைபெற்ற நிகழ்விலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

கடந்த 30 வருட காலமாக இராணுவத்தினருடைய செயற்பாடுகள் மட்டுமே வடக்கு கிழக்கில் காணப்பட்டதாகவும், இதனால் பொலிஸாரின் செயற்பாடுகளில் பின்னடைவு ஏற்பட்டிருந்ததாகவும் குறிப்பிட்ட அவர், தற்போது யுத்தம் முடிவுக்குக் கொண்டு வரப் பட்டுள்ளதால் இராணுவத்தினரின செயற்பாடுகள் குறைக்கப்பட்டு, பொலிஸார் சிறப்பாகச் செயற்படுவதாகவும் குறிப்பிட்டார.

அத்துடன், யாழ். மாவட்டத்தில் கடந்த வருடம் 3,100 பொலிஸார்கள் கடமையில் ஈடுபட்டிருந்தனர். ஆனால் இவ்வாண்டு 2500 பேராகக் குறைக்கப்பட்டுள்ளனர் என்றும், எதிர்வரும் காலத்தில் குற்றச்செயல்கள் குறைக்கப்படும பட்சத்தில் பொலிஸாரின் எண்ணிக்கையும் குறைக்கப்படும் எனவும அவர் மேலும் தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் யாழ். மாவட்டத்தை பிரதிநிதித்துவப் படுத்தும் பொலிஸ் அதிகாரிகள், பொலிஸ் உத்தியோகத்தர்கள், கிராமசேவகர்கள், ஊடகவியலாளர்கள், பொதுமக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

# மருத்துவமனைக் கட்டடம் திருமலையில் திறந்துவைப்பு

திருகோணமலைக்கான விஜயத்தை மேற்கொண்டுள்ள ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அங்கு பொது மருத்துவமனையின் கட்டடமொன்றைத் திறந்து வைத்துள்ளார்.

அமெரிக்க உதவி நிறுவனம் 350 மில்லியன் ரூபாயும். நிக் கோட் நிறுவனம் 150 மில்லியன் ரூபாயும் இந்தக் கட்டடம் அமைப்பதற்கு வழங்கி உள்ளன. இதன்படி, சுமார் 500 மில்லியன் ரூபாய்கள் செலவில் அமைக்கப்பட்ட மருத்துவமனை கட்டடத் தொகுதியே நேற்று முற்பகல் திறந்து வைக்கப்பட்டது.

# களனி கங்கையில் மேலும் தங்கப் படிமங்கள்

(கொழும்பு)

களனி கங்கையின் மேலும் சில பகுதிகளில் தங்கப் படிமங்கள் இருக்கின்றமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. கங்கையின் பூகொடை பிரதேசத்தின் மேல் பகுதிகளில் தங்கப் படிமங்கள் பெறக்கூடிய இடங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாகப் புவி சரிதவியல் அளவை மற்றும் சுரங்கப் பணியகத்தின் தலைவர் கலாநிதி என்.ஜீ.விஜயானந்த குறிப்பிட்டுள்ளார்.

கடந்த மாதம் தமது அதிகாரிகளை ஈடுபடுத்தி மேற்கொள்ளப்பட்ட ஆய்வு நடவடிக்கைகளில் இந்தத் தகவல்கள் உறுதிப்படுத்தப் பட்டதாக அவர் தெரிவித்தார். தற்போது மழையுடன் கூடிய காலநிலை நிலவுவதால் அகழ்வு நடவடிக்கைகளுக்கான அனுமதியை வழங்க முடியாதெனவும் வானிலை வழமைக்குத் திரும்பியதும் குறித்த பகுதி மக்கள் அகழ்வில் ஈடுபடுவதற்கு அனுமதிக்கப்படுவர் எனவும் பணியகம் அறிவித்துள்ளது.

# நற்சான்றிதழ் வழங்கியவர் கைது

புலிச் சந்தேக நபர்கள் உட்பட பலருக்கு வெளிநாடுகளுக்கு செல்வதற்காக பொலிஸாரின் நற்சான்றிதழ்களை வழங்கியமை தொடர்பாக கொம்பனித் தெரு பொலிஸ் நிலையத்திற்கு எதிராக விசாரணைகளை ஆரம்பித்துள்ள கொழும்பு பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினர், மூன்று பேரை கைதுசெய்துள்ளனர். 2009 ஆம் ஆண்டு முதல் இந்த சட்டவிரோத நடவடிக்கைகள் நடந்து வந்துள்ளதாகத் தெரியவந்துள்ளது.

விசாரணைகளை நடத்திவரும் பயங்கரவாதத் தடுப்பு பிரிவினர் கொம்பனித்தெரு பொலிஸாரிடம் இருந்த அனைத்து நற்சான்றிதழ் விண்ணப்பங்களையும் கைப்பற்றியுள்ளனர். தமிழர்களும், முஸ்லிம்களுமே அதிகளவில் பொலிஸாரின் நற்சான்றிதழ்களைப் பெற்றுக் கொண்டுள்ளமை விசாரணைகளில் தெரியவந்துள்ளது. இந்தச் சம்பவம் தொடர்பாக கைதுசெய்யப்பட்டவர்கள், நற்சான்றிதழைப் பெற்றுக் கொடுப்பதற்காக ஒருவரிடம் தலா 5 ஆயிரம ரூபாவை வாங்கியுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# சேறுபூசும் இணையத்தளங்கள் மீதான விசாரணை விரைவில்

சில இணையத்தளங்கள் பணம் சம்பாதிப்பதற்காகவும், குறுகிய அரசியல் நோக்கத்திற்காகவும் சேறுபூசும் பிரசாரங்களை முன்னெடுப்பதாகவும் எனினும், இவற்றுக்குத்தான் ஒருபோதும் அஞ்சப்போவதில்லை எனவும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். இவ்வாறான இணையத்தளங்கள் குறித்து விசாரணை நடத்தப்படும் என ஜனாதிபதி தெரிவித்தார். பொலன்னறுவையில் நேற்று முன்தினம் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டமொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார். அத்துடன், அப்பாவிப் பொதுமக்களைத் தூற்றுவதையும், அவர்களை இலக்குவைத்து பிரசாரம் முன்னெடுப்பதையும் நிறுத்தவேண்டும் என தான் எதிர்க்கட்சியிடம் கோரிக்கைவிடுப்பதாகவும் ஜனாதிபதி தெரிவித்தார்.


## தேவை

### வன்னிப் பிரதேச செய்தியாளர்கள்

1. கிளிநொச்சி 2. அக்கராயன் 3. பூநகரி 4. முள்ளியவளை
5. முல்லைத்தீவு 6. மல்லாவி 7. துணுக்காய் 8. விசுவமடு
9. மாங்குளம், 10. கனகராயன்குளம், 11. புளியங்குளம்
12. நெடுங்கேணி, 13. வவுனியா 14. மன்னார், 15. மடு

ஆகிய பிரதேசங்களிலிருந்து தினமுரசு பத்திரிகைக்குச் செய்தியாளர்கள் இணைத்துக்கொள்ளப்படவுள்ளனர்.

தெரிவுசெய்யப்படுவோருக்கு சிகரம் ஊடக இல்லத்தின் ஊடாக,

1. செய்தி சேகரிப்பு மற்றும் அறிக்கையிடல்
2. விற்பனை ஊக்குவிப்பு
3. விளம்பர சேகரிப்பு

ஆகிய துறைகளில் விசேட பயிற்சி வழங்கப்பட்டு, அதிகளவு வருமானம் பெற வழிகாட்டப்படுவதுடன், தேர்ச்சி பெறுபவர்கள் நிரந்தரப் பணியாளர்களாகவும் இணைத்துக்கொள்ளப்படுவர்.

⇨ முன்னனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை.

⇨ க.பொ.த. சாதாரணதரம் வரையில் படித்த ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

ஆர்வமுள்ளவர்கள், சுருக்கமாகத் தயாரிக்கப்பட்ட சுயவிபரக் கோவையுடன், ஊடகத்துறையில் பணியாற்ற ஆர்வம் கொண்டமைக்கான காரணத்தை விளக்கும் சிறு ஆக்கத்தையும் இணைத்து பின்வரும் முகவரிக்கு விண்ணப்பங்களை அனுப்பிவைக்கவும்.

**வன்னிப் பிரதேச செய்தியாளர்,**
**தினமுரசு,**
**373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.**


# படையினர் வசமுள்ள காணிகளை உரியவர்களிடம் ஒப்படைக்க பணிப்புரை



தென்மராட்சிப் பிரதேசத்தில் இராணுவத்தினரின் பயன்பாட்டிலுள்ள பொதுமக்களது வீடுகள், பொதுக் கட்டடங்களை உரியவர்களிடம் ஒப்படைக்குமாறு ஈ.பி.டி.பி.யின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் தென்மராட்சிப் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுத் தலைவருமான சில்வேஸ்திரி அலன்ரின் (உதயன்) பணிப்புரை விடுத்துள்ளார்.

தென்மராட்சிப் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் நேற்று முன்தினம் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றபோதே அவர் இப்பணிப்புரையை விடுத்தார்.

தென்மராட்சிப் பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலயத்தின் ஆரம்பப் பிரிவு, ஒட்டுவெளி அமெரிக்க மிசன், முகமாலை அ.த.க. பாடசாலை மற்றும் ஒட்டுவெளிப் பிரதேசத்தில் இராணுவத்தின் பயன்பாட்டிலுள்ள பொதுமக்களின் 40 இற்கும் மேற்பட்ட வீடுகளையும் ஒரு மாத காலத்தினுள் உரியவர்களிடம் ஒப்படைக்குமாறு இராணுவத்தினரிடம் பணிப்புரை விடுத்தார்.

தொடர்ந்து சுகாதாரம், கல்வி போன்ற விடயங்கள் தொடர்பாக விரிவாக ஆராயப்பட்டது.

கைதடியில் உள்ள ஆரம்பச் சுகாதார நிலையத்தை அதே இடத்தில் இயங்கச் செய்வதற்கான நடவடிக்கையை மேற்கொள்ளுமாறு பொதுமக்களும், பொது அமைப்புக்களும் நாடாளுமன்ற உறுப்பினரிடம் கூட்டாகக் கோரிக்கை விடுத்ததற்கமைய, மீளவும் அதே இடத்தில் புதிதாக ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கப்படுமெனக் குறித்த திணைக்களத்தினரால் உறுதியளிக்கப்பட்டது.

சாவகச்சேரி நகரசபையின் துவிச்சக்கரவண்டிப் பாதுகாப்பு நிலையத்தில் கர்ப்பிணித் தாய்மார்களுக்கான சிகிச்சைகள் நடைபெறுவதனால் மிகுந்த சிரமங்களை எதிர்கொள்வதாக சாவகச்சேரி நகரசபையின் சுகாதாரப் பரிசோதகர் தெரிவித்தார்.

இதற்கு மாற்றீடாக கர்ப்பிணித் தாய்மார்களுக்கான சிகிச்சை நிலையத்தை பிரிதொரு இடத்தில் அமைப்பதற்கான செயற்பாடுகள் முன்னெடுக்கப் படுமென நாடாளுமன்ற உறுப்பினர் உறுதியளித்தார்.

தென்மராட்சிப் பிரதேசத்தில் கட்டாக்காலி கால்நடைகளை கட்டுப்படுத்துவதற்கான அதிகாரத்தினை விவசாய சம்மேளனங்களுக்கு வழங்குமாறு விவசாய சம்மேளனங்கள் கோரிக்கை விடுத்தன.

தொடர்ந்து வீதி, போக்குவரத்து, மின்சாரம், வீடமைப்பு, கூட்டுறவு, கைத்தொழில், சமூக சேவைகள், விவசாயம், பொதுமக்கள் பாதுகாப்பு, சூழல் பாதுகாப்பு, காணி, கிராம அபிவிருத்தி, வங்கிகள், விளையாட்டு, கலை கலாசாரம், அரச சார்பற்ற நிறுவனங்கள் உள்ளிட்ட பல் வேறு விடயங்கள் தொடர்பாக இதன்போது ஆராயப்பட்டது.

இதன்போது சாவகச்சேரி நகர சபையின் எதிர்கட்சித் தலைவரும் ஈ.பி.டி.பி.யின் தென்மராட்சிப் பிரதேச அமைப்பாளருமான சூசைமுத்து அலெக்ஸாண்டர் (சாள்ஸ்), பிரதேச செயலர திருமதி அஞ்சலிதேவி மற்றும் சகல திணைக்களங்களின் உயரதிகாரிகள் உத்தியோகத்தர்கள் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் பொதுமக்களென பலரும் கலந்துகொண்டனர்.

# இருதய நோயுடன் பிறக்கும் குழந்தைகள்

(கொழும்பு)

இலங்கையில் வருடாந்தம் 2500 இற்கும் மேற்பட்ட குழந்தைகள் இருதய நோய்களுடன் பிறப்பதாக சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர். இந்நிலையில், இதய நோய்களுடன் பிறக்கும் குழந்தைகளுக்கு சிகிச்சையளிப்பதற்கு தற்போது காணப்படும் வசதிகள் போதுமானதாக இல்லை எனக் கொழும்பு சீமாட்டி ரிஜ்வே வைத்தியசாலையின் பணிப்பாளர், வைத்திய நிபுணர் ரத்னசிறி ஹேவகே தெரிவித்துள்ளார்.

இதற்கமைய, ரிஜ்வே வைத்தியசாலையில் இதய நோய்களுடன் பிறக்கும் குழந்தைகளுக்கு சிகிச்சையளிப்பதற்கான வசதிகளை அதிகரிப்பதற்கு சுகாதார அமைச்சு தீர்மானித்துள்ளதாக அவர் கூறினார். தற்போது வருடாந்தம் 1600 தொடக்கம் 1700 வரையிலான சத்திரசிகிச்சைகள் மாத்திரமே தமது வைத்தியசாலையில் மேற்கொள்ளப்படுவதாக வைத்திய நிபுணர் குறிப்பிட்டார். எனினும், இந்த எண்ணிக்கையை விட அதிகமான குழந்தைகள் இதய நோய்களால் பீடிக்கப்பட்டுள்ளதால் அவர்களுக்கு சத்திர சிகிச்சைகளை மேற்கொள்வதற்கான வசதிகள் வைத்தியசாலையில் இல்லை என அவர் கூறினார்.

## மாதாந்த கொடுப்பனவு

(சாவகச்சேரி)

தென்மராட்சிப் பிரதேசத்தில் பொதுசன மாதாந்த உதவிப்பணம் மற்றும் நோய்க்கான கொடுப்பனவு ஆகியவற்றைப் பெற்றுக்கொள்ளும் பயனாளிகள் தமது பணத்தை இம்மாதம் 14 ஆம் திகதிக்கு முன்பாக அஞ்சல் அலுவலகங்களில் பெற்றுக்கொள்ள முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதில் 70 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கான ஆயிரம் ரூபா கொடுப்பனவு நிலுவையுடன் விரைவில் வழங்கப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (11)

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2012 செப்ரெம்பர் 05 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.